ISSN 2279 - 3607

# கூர்மை

பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை



பொருளியல் துறை
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

**Advisor**

Dr (Mrs). J. Suresh
Head,
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editor**

Ms. G. Kajenthini
Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

**Editorial Team**

Dr. S. Jeyarajah
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Dr. T. Bhavan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mrs. S. Maheswaranathan
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

Mr. K. Pushpakaran
Senior Lecturer,
Department of Economics,
Eastern University, Sri Lanka

COORMAI

ISSUE: 03

2021

***Publisher***

***Department of Economics,***
***Faculty of Commerce and Management,***
***Eastern University,***
***Sri Lanka***

***T. No: 065 2240735***

***E-mail:editorcoormai@gmail.com***



**Team of Reviewers**

| | |
|---|---|
| Dr. S. Jeyarajah | Economics |
| Dr. T. Bhavan | Economics |
| Mrs. S. Maheswaranathan | Economics |
| Dr (Mrs). J. Suresh | Economics |
| Dr. P. Pretheeba | Management |

## வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது நீண்டகாலமாக கூர்மை எனும் பொருளியல் செய்தி ஏட்டினை வெளியிட்டு வருவது யாவரும் அறிந்ததே. பொருளியல் பாடத்தினை பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களும், பொருளியல் பாடத்தினை விசேட கற்கை நெறியாக பயிலும் மாணவர்களும் மற்றும் பொருளியலில் ஆர்வமுடையோரும் அவ் வெளியீட்டின் மூலம் நிறைந்த பயனைப் பெற்றுள்ளனர். பொருளியல் துறையின் சமூகம்சார் செயற்பாடுகளின் ஓர் சிறிய முயற்சியாக கூர்மை வெயிளியிடப்பட்டு வருகின்றது. ஆரம்ப இதழ்கள் கையெழுத்து மற்றும் தட்டெழுத்து மூலமாக வெளியிடப்பட்ட இச் செய்தியேடு கடந்த வருடம் தொடக்கம் ஒரு பொருளியல் ஆண்டுச் சஞ்சிகையாக வெளியிடப்படுவதை இட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பொருளியல் சஞ்சிகையானது பொருளியல், முகாமைத்துவம், வணிகம் மற்றும் பொதுவிடயங்கள் தொடர்பான உள்ளடக்கங்களை தாங்கி வெளிவரவுள்ளது. காலத் தேவைக்குகந்த பொருளியல் கட்டுரைகளையும் பொருளியல்சார் அம்சங்களையும் பொருளியல் வல்லுனர்களிடமிருந்து பெற்று இச்சஞ்சிகை வெளிக் கொணரும் பொருளாதார விடயங்களை அறிந்து கொள்வதில் பலரும் ஆர்வமாகவுள்ளனர். பொருளியல் கோட்பாட்டு அம்சங்கள் மாணவர்களுக்கு அவசியமாயினும் நடைமுறைப் பொருளாதார கருத்துக்களையும் விடயங்களையும் தெரியப்படுத்துவதும் நன்றாகும். எனவே, இச்சஞ்சிகை பலருக்கும் பயனளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

வெளியீடுகளுக்கான நிதித்தடைகளை கருத்திற் கொண்டு இச்சஞ்சிகை நிகழ்நிலை வெளியீடாக வெளியிடப்படுகின்றது. இதன் முழுமையான பிரசவிப்புக்கு கைகொடுத்த அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். குறிப்பாக இச்சஞ்சிகையின் ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள். இதன் தொடர்ச்சிக்கு உங்கள் கருத்துக்களையும், வகிபங்கினையும் தொடர்ந்து வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கலாநிதி ச. ஜெயராஜா

பீடாதிபதி,

வணிக முகாமைத்துவ பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் முன்மாதிரி அங்கமாகத் திகழும் பல்கலைக்கழகங்கள் வெறுமனே கற்றல் நடவடிக்கையுடன் மட்டுமல்லாது தாம் கற்றவற்றையும் கேட்டவற்றையும் உலக சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது.

அந்தவகையில் எமது வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் மட்டுமல்லாது புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தனது அதீத கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 1992 ஆம் ஆண்டிலிருந்து 'கூர்மை' செய்தியேடானது தனது இருபத்தி ஏழு இதழ்களை கிரமமாக வெளியிட்டுள்ளது. இதன் ஒரு பரிணாமமாக கூர்மை இதழானது சமானர்களின் மதிப்புரையுடன் (Peer Review) கூடிய செய்தியேடானது வருடாந்த சஞ்சிகையாக தான் வளர்ந்து வரும் பாதையில் நிலைத்து நிற்கும் போக்கை எட்டியுள்ளது.

இச் சஞ்சிகையானது பொருளியல் துறைசார் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப்பரீட்சையினை எதிர் கொள்வோருக்குத் தேவையான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைப் பொருளியல் அறிவினை வழங்குவதில் தன்னார்வத்துடன் பங்களிப்புச் செய்துவருகின்றது. அந்தவகையில் சமூதாய நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்குப் பங்களிப்புச் செய்துவரும் எமது விரிவுரையாளர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தலைவர்

பொருளியல் துறை,

வணிக முகாமைத்துவ பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**கூர்மையின் வாசகர்களே..**

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கற்கையை நோக்காகக் கொண்டு, கட்டுரைகள், எண்ணக்கரு விளக்கங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளிட்ட பல விடயங்களை தாங்கிய கூர்மை (செய்தி ஏடு) ஆக வெளிவந்து, இருபத்து ஏழு சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளதில் எமது பொருளியல் திணைக்களம் சார்பாக மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாண்டு கூர்மை திறனாய்வுடன் கூடிய வருடாந்த சஞ்சிகையாக பொருளியல், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக துறைசார் சிறப்புக் கட்டுரைகளைத் உள்ளடக்கி வெளிவருகின்றது. மேலும் மாணவர் பக்கம், புள்ளிவிபர இணைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொருளியல்சார் அம்சங்களையும் சேகரித்து நிகழ்நிலை வெளியீடாக இச்சஞ்சிகை வெளிக்கொணர்கின்றது. கூர்மை இத்துறைசார் மாணவர்களுக்கு மாத்திரமன்றி ஆசிரியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இதுவரை காலமும் கூர்மை செய்தி ஏடு இருபத்து ஏழு இதழ்களை கடந்து கிரமமாக வெளிவருவதற்கு பங்களித்த அனைத்து நபர்களுக்கும், வாசகர்களாகிய உங்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது ஆண்டு சஞ்சிகையாக வெளிவருவதற்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து தங்கள் ஆதரவினை வேண்டிநிற்பதுடன், இச்சஞ்சிகை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்

கூர்மை,

வணிக முகாமைத்துவ பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# CONTENTS


வறுமை தொடர்பான விளக்கங்கள்...................................................1

முயற்சியாண்மை தசாப்தத்தில் சமூக முயற்சியாண்மைக்கோர் அறிமுகம்...35

சார்பு வருமானக் கருதுகோள்: ஓர் மீளாய்வு..................................55

வங்கித்தொழிலில் தொழில்நுட்பத்தின் பிரயோகம்.........................74

இலங்கையின் நிதியியல் முறைமை................................................82

இணைப்பு 01: பொருளியலாளர்.......................................................99

அபிஜித் விநாயக் பாணர்ஜி........................................................99

இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள்....................................101

# வறுமை தொடர்பான விளக்கங்கள்

சி. சிவகௌரி[1] மற்றும் திருமதி. ஜெயப்பிரபா சுரேஸ்[2]

## அறிமுகம்

பல தசாப்தங்களாக இன்றும் உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வருகின்ற பிரச்சினைகளில் ஒன்று வறுமையாகும். உலகில் சமத்துவமின்மையின் உந்து சக்திகளில் ஒன்றாகவும் தனிமனித மற்றும் சமூக அபிவிருத்திக்கான முட்டுக்கட்டையாகவும் வறுமை காணப்படுகின்றது. வறுமை என்பது தனிநபர் ஒருவர் தனது குறைந்தபட்ச வாழ்க்கை தரத்தைக் கூட பூர்த்திசெய்ய முடியாத நிலை என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது (World Bank, 2002). அதாவது மனிதன் உயிர்வாழ்வதற்குத் தேவையான குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு கூட வருமானத்தினைக் கொண்டிருக்காத நிலையை இது குறிக்கும். வறுமையானது ஒரு மனிதனை நீண்ட ஆயுள், ஆரோக்கியமான வாழ்க்கை, கௌரவமான வாழ்க்கைத் தரத்தினை பேணுதல், சுதந்திரம், சுயகௌரவம் மற்றும் ஏனையவர்களால் மதிக்கப்படும் தன்மைகளில் இருந்து தடுக்கிறது (Sen, 1993). இவ்வகையில் ஒரு நாட்டின் சமூக நலனிலும் பொருளாதார விஸ்தரிப்பிலும் வறுமையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிணங்க வறுமை மற்றும் அதனுடைய சமூக பொருளாதார பாதிப்புக்களை அறிதலானது இன்று மிகைத்தேவைப்பாடுடையதொன்றாக காணப்படுகின்றது.

## வறுமை தொடர்பான வரைவிலக்கணங்கள்

வறுமை குறித்த எந்தவொரு வரையறைகளும் பொதுவான ஒருமித்த கருத்து கொண்டதாகவில்லை. கடந்த காலத்தில் வறுமை முதன்மையான பொருளாதாரப் பற்றாக்குறையின் ஒரு

---

[1] பொருளியல் கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

[2] சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பிரச்சினையாக கருதப்பட்டது. ஆனால் அதன் பொருள் இப்போது பொருள் பற்றாக்குறை, மனித பற்றாக்குறை, கல்வி மற்றும் ஆரோக்கியத்தில் குறைந்த சாதனைகள், பாதிப்பு மற்றும் ஆபத்துக்கான வெளிப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகவே வறுமைப் பிரச்சினையை அதன் மொத்தத்தில் தீர்க்க முயற்ச்சிக்கும் போது ஒருவர் பொருளாதார பரிணாமத்தை மட்டுமல்ல சமூக கலாசார மற்றும் அரசியல் பரிணாமத்தினையும் கருத்தில் கொள்ள வேண்டும் (Gunewardena, 2004).

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட அமைப்பில் வறுமை தொடர்பான வரைவிலக்கணத்தில் வறுமை என்பது குறைந்த வருமானத்தை கொண்டிருப்பின் அவர்களை வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் என வரையறை செய்கின்றது. மொத்தத்தில் வறுமை என்ற சொல்லானது அடிப்படை வசதிகள் அற்ற தன்மையை உணர்த்தினாலும், வறுமை என்பது பல்பரிணாமத்தன்மை கொண்ட தொழிற்பாடாகவே காணப்படுகின்றது. எனவே பொதுவாக வறுமை என்பது ஒரு நாட்டின் வீட்டுத்துறையினர் தமது அடிப்படைத்தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத மிகக்குறைந்தளவிலான வருமான மட்டத்தினை கொண்டிருப்பின் அது வறுமை எனப்படும். அதாவது பொருட்களின் அழிவு, மனிதவளத்தேய்வு, குறைந்த கல்வியடைவு மட்டம், அதிகாரமின்மை, எதிர்த்து குரல் கொடுக்கும் துணிவின்மை, அரசியல் பலவீனம் என்பன காரணமாக ஏற்படும் ஒரு நிலையே வறுமையாகும் (அமிர்தலிங்கம், 2008)

மேலும் வறுமை பற்றி குறிப்பிடுகையில் மகிழ்ச்சியில் குறைவை ஏற்படுத்தக்கூடியதும், சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத்தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக்குறைந்த வருமானத்தை கொண்டு காணப்படுதலாகும். அத்துடன் வறுமையானது குறைவான உடற்சுகாதாரம் மற்றும் சுத்தமான குடிநீர், சிறப்பான கழிவகற்றல் வசதி போன்றவற்றை பெற முடியாமலும் பௌதீக பாதுகாப்பற்ற நிலையினை கொண்டிருத்தல், கருத்து தெரிவித்தலில் சுதந்திரமற்ற நிலைமை மற்றும் ஒருவருடைய வாழ்க்கையை சிறப்பாக்கக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களையும் கொள்ளளவையும் போதுமான அளவு கொண்டிருக்காமையாகும்.

வறுமையானது மனிதனின் ஆற்றல் மற்றும் கண்ணியம், ஒழுக்கம் போன்றவற்றை அழித்துவிடுகின்றது. இவ்வறுமையானது மனிதனை இழிவு நிலைக்கு உள்ளாக்குவதுடன் ஒழுக்கக்கேடான செயல்களில் மூழ்க வைத்து மனிதர்களை குற்றங்கள் புரியவும் தூண்டுகின்றது. இவ்வாறு வறுமைக்கு பல்வேறு கோணங்களில் விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றது.

## வறுமையின் வகைகள்

### முழு வறுமை (Absolute Poverty)

மிகக்குறைந்த கலோரிப் பெறுமானத்தைப் பெற்றுத் தருகின்ற உணவுப் பொருட்களை உள்ளடக்கிய அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு கூட வருமானம் கிடைக்காத நிலை முழு வறுமையாகும். முழு வறுமை என்பது உணவு, பாதுகாப்பான குடி நீர், வீடு, சுகாதார சேவைகள், கல்வி மற்றும் தகவல்கள் போன்ற அடிப்படைத்தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையாகும். இது வருமானத்தில் மட்டுமன்றி சமூக சேவைகளை அடைந்து கொள்வதிலும் தங்கியுள்ளது. உண்மையில் உலகளாவிய ரீதியில் இவ்வறுமையைக் குறைப்பதிலேயே அதிக அக்கறை செலுத்தப்படுகின்றது. முழு வருமானப் பரம்பலின் அடிப்படையில் முழு வறுமை விளக்கப்படும். முழுவறுமை காணப்படும் போது போசாக்கின்மை, சிசுமரணம், கல்வியறிவின்மை என்பன அதிகரித்துச் செல்வதுடன் ஆயுள் எதிர்பார்க்கையும் குறைவடைந்து செல்கின்றது.

### சார்பு வறுமை (Relative Poverty)

சார்பு வறுமை என்பது சமூகத்தில் நிலவும் சராசரி வாழ்க்கை நிலமைகளை பேண முடியாத ஒரு நிலையாகும். சார்பு வறுமையைக் கணிப்பதில் சமூகத்தின் சராசரி செலவீனமே கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில் ஒரு சமூகத்தில் எல்லோரும் சமமான வருமானத்தினைக் கொண்டிருக்காத காரணத்தினால் ஒவ்வொரு சமூகமும் இவ்வறுமையை கொண்டுள்ளது என்பதாகும். சிலர் சமூகத்தில் உள்ள மற்றவர்களை விட குறைந்த வருமானத்தினைப் பெறக்கூடும். அதேவேளை அவர்களின் வருமானம் வறுமைக் கோட்டினை விட அதிகமாகக் காணப்படுவதால் அவர்களிடம் முழு

வறுமையும் காணப்படுவதில்லை. நடைமுறையில் இவ் வறுமையினைக் குறைப்பது தொடர்பில் பெரிதாக கவனம் செலுத்தப்படுவதில்லை.

### கிராமப்புற வறுமை (Rural Poverty)

இது 50000க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் நிகழ்கிறது. குறைவான வேலைவாய்ப்பு, குறைந்தளவான சேவைகள், குறைபாடு உள்ளவர்களுக்கு குறைந்த ஆதரவு மற்றும் தரமான கல்வி வாய்ப்புகள் இல்லாமையினால் இவ் வறுமையானது ஏற்படுகின்றது.

### நகரப்புற வறுமை (Urban Poverty)

இது 50000க்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட பெருநகரங்களில் நிகழ்கிறது. நகரப்புற ஏழைகள் எதிர்நோக்கின்ற சவால்களில் சகாதாரம், போதுமான வீட்டுவசதியின்மை, சமூகப் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

## உலக வறுமையின் போக்கு

உலக வறுமையை எடுத்துநோக்கினால் 1990 ஆம் ஆண்டில் உலக சனத்தொகையில் 10 பேரில் 4 பேர் வறுமையின் கீழ் இருந்தனர். அதுவே 2013ஆம் ஆண்டில் 10 பேரில் ஒருவரே வறுமையில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் இன்னும் உலகில் 736 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்கின்றனர். ஒரு நாளைக்கு 1.90 அமெரிக்க டொலருக்கு குறைவாக வருமானம் பெறும் நபர் வறுமைக் கோட்டிக்கு கீழ் வாழ்வதாக கணிக்கப்படுகின்றது (World Population Review, 2020).

உலகளாவிய ரீதியில் வறுமையானது நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்ற போதிலும் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற சில குறிப்பிட்ட பிராந்திய நாடுகள் வறுமையால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்க நாடுகளே உலகில் மிக மோசமாக வறுமையினால் பாதிக்கப்படும் நாடுகளாகும். நைஜீரியாவின் நிலை இதற்கு சிறந்த உதாரணமாகும். அதேவேளை ஆசியாவில் பங்களாதேசம்

நேபாளம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் சனத்தொகையில் 75 வீதத்திற்கும் மேற்பட்டோர் நாளாந்தம் 2 டொலருக்கு குறைவான வருமானத்தைக் கொண்டிருப்பது இந்நாடுகளில் வறுமையின் தீவிரத்தை காட்டுகிறது. வறுமையானது தற்போது நேபாளத்தில் (25.2%), பங்களாதேசத்தில் (24.3%), இந்தியாவில் (21.9%) என வறுமை உயர்வாக உள்ளதாக ஆசிய ஆபிரிக்க வங்கியின் 2018 ஆம் ஆண்டின் தரவுகள் குறிப்பிடுகின்றன (Tamil Geography news, 2020).

## இலங்கையில் வறுமையின் போக்கு

இலங்கையில் வறுமை பற்றிய போக்குகளை இனங்காண்பதற்கு தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களம் 1990களில் ஆரம்பித்து கடந்த வருடம் வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீட்டுவருமானம் மற்றும் செலவு பற்றிய அளவீடுகளே பிரதான தரவு மூலங்களாகவுள்ளன. 1885/86, 1990/1991 ,1995/1996, 2000, 2006/2007, 2009/2010, 2012/13, 2016 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வறுமை அளவீடுகள் இவ்வாண்டுகளில் நிலவிய பணவீக்கத்திற்கு இசைவாகவே ரூபாய் 261, 475, 833, 1423, 2233, 3028, 3624, 4166 என்ற அளவீடுகளில் வறுமைக்கோடுகளை நிர்ணயம் செய்தது (புள்ளி விபரத் திணைக்களம், 2018).

நாட்டின் முழுமையாக வறுமையின் போக்கினை ஆண்டு ரீதியாக ஒப்பீட்டடிப்படையில் பார்க்கும் போது 1990 களில் வறுமையின் அளவு ஓரளவு குறைந்து காணப்பட்டு நடுக்கூற்றில் அதிகரித்து பின்னர் வீழ்ச்சியடைந்து பின்னர் அதிகரிக்கின்ற நிலையை அவதானிக்கலாம். இதன் கருத்து என்னவெனில் 1990/1991 இல் 26% காணப்பட்ட வறுமை 1995/1996 இல் 28.8% அதிகரித்து மீண்டும் 2006/2007 காலப்பகுதியில் 15.2% வீழ்ச்சியடைந்து இருப்பதைக் காட்டுகின்றது. அதேபோன்று 2009/2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறுமை அளவானது 8.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணமுடிகின்றது. 2006/2007 க்கும் 2009/2010 க்கும் இடையில் 03 வருட காலப்பகுதியில் 4.1 சதவீதமான வீழ்ச்சியை அவதானிக்க முடிகின்றது. 2012/2013 ஆண்டுகளில் 6.7% காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டினை

நோக்கும் போது வறுமை வீதமானது 4.1% ஆக குறைவடைந்துள்ளது. இது இலங்கையில் வறுமையின் போக்கில் தொடர்ச்சியான வீழ்ச்சியை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது.

**வரைபடம் 1. இலங்கையில் வறுமையின் போக்கு (1990-2016)**




மூலம்: மத்திய வங்கி அறிக்கை, 2016

இருப்பினும் இவ் வறுமையினை துறைகள் அடிப்படையிலும், மாகாண அடிப்படையிலும் மற்றும் மாவட்ட அடிப்படையிலும் நோக்குகின்ற போது வறுமையானது அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. இது நாட்டில் வறுமையின் அளவு குறைவடைந்தாலும் இன்னும் மக்கள் மத்தியில் வறுமைநிலை குறையவில்லை என்பதை பிரதிபலிப்பதாக அமைகின்றது (மத்திய வங்கி அறிக்கை, 2016).

## ❖ இலங்கையில் துறை சார் வறுமையின் போக்கு

இலங்கையில் வறுமையினை துறைரீதியில் நோக்கும் பட்சத்தில் அவற்றை நகரத்துறை, கிராமியத்துறை, தோட்டத்துறை என பிரித்து நோக்கலாம். இதனை மையமாக வைத்து இதன் போக்கினை ஆண்டு (2000 ஆண்டு தொடக்கம் 2016 வரை) அடிப்படையில் நோக்குமிடத்து நகரத்துறையினர் மத்தியில் வறுமையின் போக்கானது குறைந்த வண்ணம் உள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதே போன்று கிராமியத்துறையிலும், தோட்டத்துறையிலும் 2000ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை வறுமையின் அளவானது குறைந்துகொண்டு செல்கின்றது. இருப்பினும் நகரத்துறையுடன் ஒப்பிடும் போது கிராமியத்துறையிலும், தோட்டத்துறையிலும் வறுமை உயர்வாகக் காணப்படுகின்றது. அதிலும் தோட்டத்துறையினை ஏனைய இரு துறைகளுடனும் ஒப்பிடும் பட்சத்தில் வறுமையின் போக்கு மிக உயர்வாக உள்ளது. அதாவது 2016 இனை எடுத்துநோக்குகின்ற போது நகரத்துறையில் 1.9% வறுமையினையும், கிராமியத்துறையில் 4.3% வறுமையினையும், தோட்டத்துறையில் 8.8% வறுமையினையும் அவதானிக்க முடிகின்றது. இதனை அடிப்படையாக வைத்து நோக்குகையில் மூன்று துறைகளிலும் வறுமையின் அளவு குறைவடைந்து கொண்டு சென்றாலும் துறைகளுக்கிடையிலான ஒப்பீட்டடிப்படையில் பலத்த வேறுபாடுகள் காணப்படுகின்றது. அதாவது நகரத்துறையுடன் ஒப்பிடும் போது கிராமத்துறை மற்றும் தோட்டத்துறைகளில் வறுமையின் அளவு உயர்வாக உள்ளதனை தெளிவாக அவதானிக்கலாம். அத்துடன் நகரத்துறையுடன் தோட்டத்துறையினை ஒப்பிடும் போது வறுமையின் போக்கு உயர்வாகவுள்ளது (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2016).

**வரைபடம்: 2 இலங்கையில் துறைசார் வறுமையின் போக்குகள் (2000-2016)**




மூலம்: மத்திய வங்கி அறிக்கை, 2016

### ❖ இலங்கையில் மாகாண அடிப்படையில் வறுமையின் போக்கு

மாகாண ரீதியாக வறுமையின் போக்கினை எடுத்துநோக்கினால் இலங்கையில் 9 மாகாணங்கள் காணப்படுகின்றது. இதில் வறுமை குறைந்த மாகாணமாக மேல் மாகாணம் காணப்படுகின்றது. இங்கு வறுமையின் போக்கானது 2006/2007 இல் 8.2% ஆகவும் 2009/2010 இல் 4.2% மாகவும் 2012/2013 இல் 2.0% ஆகவும் 2016இல் 1.7% என குறைவடைந்து கொண்டு செல்கின்றது. ஆனால் ஏனைய மாகாணங்களை இவற்றுடன் ஒப்பிடும் இடத்து வறுமையின் அளவு உயர்வாகவே காணப்படுகின்றது. அதாவது இங்கு 2016ஆம் ஆண்டினை நோக்குகின்ற போது வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் என்பவற்றில் வறுமையின் அளவு உயர்வாகக் காணப்படுகின்றதனை நோக்கமுடிகின்றது. அதாவது வட மாகாணத்தில் 7.7% வறுமையினையும், கிழக்கு மாகாணத்தில் 7.3% வறுமையினையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ் மகாணங்கள் வறுமையில் உயர்வாகக் காணப்பட காரணம் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தமாகும். அதனை அடுத்து

சப்ரகமுவ மகாணம் (6.7%) மற்றும் ஊவா மாகாணம் (6.5%) என்பன வறுமையில் உயர்வாகக் காணப்படுகின்ற மாகாணங்களாக உள்ளன.

**வரைபடம்: 3 மாகாண அடிப்படையில் ஆள்வீத வறுமைச்சுட்டெண் (2006-2016)**




மூலம்: மத்திய வங்கி அறிக்கை, 2016

### ❖ இலங்கையில் மாவட்ட அடிப்படையில் வறுமையின் போக்கு (2006-2016)

மாவட்ட அடிப்படையில் வறுமை நிலையானது 2009.⁚.2010 காலப்பகுதியில் மொனராகல மாவட்டத்தில் அதிகரித்த போக்கினை காட்டுகிறது. அதேபோல் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர் அளவு வறுமை 20.3 சதவீதமாக காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை 2012/2013 தரவின் அடிப்படையில் வடக்குமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே உயர் அளவு வறுமை 28.8 சதவீதமாக காணப்படுகின்றது. மொனராகல மாவட்டத்தில் 2009/2010 காலப்பகுதியில் 14.5 சதவீதமாகக் காணப்பட்ட வறுமையானது 2012/2013 காலப்பகுதியில் 20.8%

மாக அதிகரித்த போக்கினை காட்டுகின்றது. இதற்கு இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவிய வரட்சி நிலைமையே காரணமாகும். 2016ஆம் ஆண்டு காலப்பகுதியினை நோக்கும் போது கிளிநொச்சி மாவட்டமே (18.2%) வறுமை கூடிய மாவட்டமாகக் காணப்படுகின்றது. இரண்டாவது நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு வறுமையின் அளவானது 11.3% மாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை: 1 மாவட்ட அடிப்படையில் வறுமையின் போக்கு (2002-2016)**

| மாவட்டம் | 2002 | 2006/ 2007 | 2009/ 2010 | 2012/ 2013 | 2016 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 6.4 | 5.4 | 3.6 | 1.4 | 0.9 |
| கம்பஹா | 10.7 | 8.7 | 3.9 | 2.1 | 2.0 |
| களுத்துறை | 20.0 | 13.0 | 6.0 | 3.1 | 2.9 |
| கண்டி | 24.9 | 17.0 | 10.3 | 6.2 | 5.5 |
| மாத்தளை | 29.6 | 18.9 | 11.5 | 7.8 | 3.9 |
| நுவரேலியா | 22.6 | 33.8 | 7.6 | 6.6 | 6.3 |
| காலி | 25.8 | 13.7 | 10.3 | 9.9 | 2.9 |
| மாத்தறை | 27.5 | 14.7 | 11.2 | 7.1 | 4.4 |
| அம்பாந்தோட்டை | 32.2 | 12.7 | 6.9 | 4.9 | 1.2 |
| யாழ்ப்பாணம் | - | - | 16.1 | 8.3 | 7.7 |
| மன்னார் | - | - | - | 20.1 | 1.0 |
| வவுனியா | - | - | 2.3 | 3.4 | 2.0 |
| முல்லைத்தீவு | - | - | - | 28.8 | 12.7 |
| கிளிநொச்சி | - | - | - | 12.7 | 18.2 |
| மட்டக்களப்பு | - | 10.7 | 20.3 | 19.4 | 11.3 |
| அம்பாறை | - | 10.9 | 11.8 | 5.4 | 2.6 |
| திருகோணமலை | - | - | 11.7 | 9.0 | 10.0 |
| குருணாகல் | 25.4 | 15.4 | 11.7 | 6.5 | 2.9 |
| புத்தளம் | 31.3 | 13.1 | 10.5 | 5.1 | 2.1 |
| அநுராதபுரம் | 20.4 | 14.9 | 5.7 | 7.6 | 3.8 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பொலனறுவை** | 23.7 | 12.7 | 5.8 | 6.7 | 2.2 |
| **பதுளை** | 37.3 | 23.7 | 13.3 | 12.3 | 6.8 |
| **மொனராகலை** | 37.2 | 33.2 | 14.5 | 20.8 | 5.8 |
| **இரத்தினபுரி** | 34.4 | 26.6 | 10.5 | 10.4 | 6.5 |
| **கேகாலை** | 32.5 | 21.1 | 10.8 | 6.7 | 7.1 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், 2016

## வறுமைக் கோடு

வறுமைக்கோடு என்பது நாடொன்றில் நிறைவான வாழ்க்கை தரமொன்றினை அடைவதற்கு தேவைப்படுகின்ற வருமானத்தின் ஆகக்குறைந்த மட்டம் ஆகும். இதற்கான வரைவிலக்கணத்தை Rowntree என்பவர் 1910ல் முதன் முதலாக முன்வைத்தார். இவ்வரைவிலக்கணத்தின் படி "உணவு, வீட்டுவசதி, உடை, மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளை சீவனோபாய மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானமே வறுமைக்கோடாகும்". நாடுகளுக்கிடையில் வறுமைக்கோடானது தேவைகளை வரையறுப்பதில் காணப்படும் கலாசார வேறுபாடு, அரசாங்கங்களினால் இலவசமாக வழங்கப்படும் பொருட்கள் சேவைகளின் அளவுகள், அன்னியச்செலாவணி வீதங்கள், பணவீக்க வீதங்கள் என்பவற்றை பொறுத்து மாறுபடுகின்றது. குறிப்பாக பொருட்கள் சேவைகளின் விலைகளில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்படுவதால் காலத்திற்குக் காலம் வறுமைக்கோடுகள் மீள நிர்ணயிக்கப்படுகின்றது.

இலங்கையின் வறுமைக் கோட்டினை நோக்கும் போது 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ வறுமைக்கோடொன்று தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நிறுவப்பட்டு அது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் பல அணுகுமுறைகளைப் பயன்படுத்தி வேறுபட்ட அளவீட்டுத்தரவுகளின் கீழ் கணிக்கப்பட்ட பல வறுமைக் கோடுகளை எமது நாடு பயன்படுத்தி வந்துள்ளது. இன்று பயன்படுத்துகின்ற வறுமைக் கோடு முழு

வறுமைக்கோடாகும். இதன் பொருட்டு அடிப்படைத்தேவைகளின் செலவு அணுகுமுறை (Cost of Basic Needs Approach) என்பது கையாளப்படுகிறது. 2002ஆம் ஆண்டில் உத்தியோக பூர்வ வறுமைக்கோடானது 1423 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டது. 2021 சித்திரை மாதம் இவ் உத்தியோக பூர்வ வறுமைக்கோடாக 5177 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது (புள்ளி விபரத் திணைக்களம், 2021) இதன் கருத்து மாதமொன்றிற்கு மனிதனொருவன் 5177 ரூபாவை செலவு செய்யக்கூடிய நிலையில் காணப்படாவிடின் அவன் வறுமையின் பிடியில் சிக்கியவனாகக் காணப்படுவான் என்பதாகும். இலங்கையில் வறுமைக் கோடு உணவு வறுமைக் கோடு, உணவில்லாத வறுமைக்கோடு என்பவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

நாட்டின் பொதுவிலைமட்டம் 1990 தொடக்கம் 2021 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையினால் அதற்கேற்ப வறுமைக்கோடுகளும் அதிகரித்தமையைக் கீழ்வருமாறு காட்டுகிறது.

**அட்டவணை: 2 இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக்கோடு (2002-2021)**

| | Base year 2002 Rs. | Base year 2006/07 Rs. | Base year 2013 Rs. | 2019 Dec Rs. | 2020 Dec Rs. | 2021 Apr Rs. |
|---|---|---|---|---|---|---|
| National | 1423 | 2142 | 3730 | 4939 | 5147 | 5177 |
| கொழும்பு | 1537 | 2294 | 3878 | 5361 | 5588 | 5620 |
| கம்பஹா | 1508 | 2230 | 3873 | 5198 | 5418 | 5449 |
| களுத்துறை | 1523 | 2223 | 3776 | 5172 | 5390 | 5422 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | 1451 | 2157 | 3724 | 5116 | 5333 | 5364 |
| மாத்தளை | 1395 | 2110 | 3746 | 5024 | 5237 | 5267 |
| நுவரேலியா | 1437 | 2187 | 3763 | 5253 | 5475 | 5506 |
| காலி | 1466 | 2127 | 3606 | 4876 | 5082 | 5112 |
| மாத்தறை | 1395 | 2058 | 3584 | 4720 | 4919 | 4948 |
| அம்பாந்தோட்டை | 1338 | 2097 | 3436 | 4737 | 4937 | 4966 |
| யாழ்ப்பாணம் | - | 2303 | 3678 | 4827 | 5031 | 5061 |
| மன்னார் | - | - | 3853 | 4932 | 5141 | 5171 |
| வவுனியா | - | 2211 | 3812 | 4839 | 5043 | 5073 |
| முல்லைத்தீவு | - | - | 3689 | 4792 | 4995 | 5024 |
| கிளிநொச்சி | - | - | 3782 | 4739 | 4940 | 4968 |
| மட்டக்களப்பு | - | 2281 | 3776 | 5030 | 5243 | 5273 |
| அம்பாறை | - | 2185 | 3702 | 4939 | 5147 | 5177 |
| திருகோணமலை | - | 2253 | 3730 | 4891 | 5098 | 5128 |
| குருணாகல் | 1352 | 2106 | 3604 | 4865 | 5071 | 5100 |
| புத்தளம் | 1423 | 2159 | 3726 | 4820 | 5024 | 5053 |
| அநுராதபுரம் | 1380 | 2099 | 3529 | 4767 | 4968 | 4997 |
| பொலநறுவை | 1366 | 2144 | 3679 | 4956 | 5166 | 5196 |
| பதுளை | 1409 | 2121 | 3576 | 4839 | 5044 | 5073 |
| மொனராகலை | 1366 | 2086 | 3390 | 4650 | 4846 | 4875 |
| இரத்தினபுரி | 1451 | 2123 | 3625 | 4898 | 5105 | 5135 |
| கேகாலை | 1437 | 2144 | 3766 | 5136 | 5354 | 5385 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபத் திணைக்களம், 2021

### வறுமையை அளவிடும் குறிகாட்டிகள்

1. ஆள் வீதச் சுட்டெண் (Head Count Index)
2. வறுமை இடைவெளிச்சுட்டெண் (Poverty Gap Index)
3. வறியவர்களிடையேயான வருமானப் பரம்பல் (Income Distribution Among Poor)
4. திரண்ட வறுமைச் சுட்டெண்கள் (Composit Poverty Indices)

### 1. ஆள்வீத சுட்டெண் (Head Count Index)

ஆள்வீத சுட்டெண் என்பது நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் வறுமைக் கோட்டினை விடக் குறைந்த வருமானம் பெறும் நபர்களின் எண்ணிக்கையினை அல்லது வீதத்தினை வெளிப்படுத்தும் ஒரு சுட்டெண். இது பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

$$\mathbf{H = \frac{q}{n}}$$

**H =** ஆள்வீத சுட்டெண், **q =** வறுமைக் கோட்டிற்கு கீழ் வருமானம் பெறும் நபர்களின் எண்ணிக்கை, **n =** சனத்தெகையில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை

நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இச்சுட்டெண் கூட பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது. இச்சுட்டெண்ணானது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியைக் கவனத்தில் கொள்வதில்லை. உதாரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வருமானத்தில் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டால் கூட சுட்டெண் மாற்றமடையாமல் அப்படியே இருக்கும். மேலும் இச்சுட்டெண் ஆனது வறியவர்களிடையே காணப்படும் வருமான சமமின்மைகளைக் கவனத்தில் கொள்வதில்லை. உதாரணமாக வறுமைக்கோடானது ரூபா 3000 என எடுத்துக் கொண்டால் 3000 ரூபாவினை விட ஒரு ரூபா குறைவாக வருமானம் பெறும் நபரையும் 1000 ரூபா

குறைவாக வருமானம் பெறும் நபரையும் வறுமையடிப்படையில் வேறுபடுத்த இச்சுட்டெண் தவறுகின்றது.

## 2. வறுமை இடைவெளிச் சுட்டெண் (Poverty Gap Index)

இதனை வருமானம் துண்டுவிழுதல் சுட்டெண் என்றும் அழைப்பர். வறுமை இடைவெளிச் சுட்டெண்ணானது வறிய மக்களின் வருமானம் எவ்வளவினால் குறைவதன் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் காணப்படுகின்றனர் என்பதனை அளவிடுகின்றது. அதாவது இச்சுட்டெண் வறிய மக்களின் வருமானத்திற்கும் வறுமை கோட்டிற்கும் இடையிலான இடைவெளியைக் காட்டுகின்றது. இச்சுட்டெண் மூலம் நாட்டில் வறுமையின் தீவிரத்தை அளவிடலாம் எனக் கருதப்படுகின்றது. ஏனெனில் துண்டுவிழும் வருமானத்தினைக் கணிப்பதன் மூலம் வறிய மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவருவதற்குரிய வகையில் அரசாங்கங்கள் வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களை செயற்திறனாக அமுல்படுத்தலாம் எனவும் கருதப்படுகின்றது. இச்சுட்டெண் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\mathbf{I = q(z - \mu)}$$

இங்கு $\mathbf{q}$ = துண்டுவிழும் சராசரி வருமானம், $\boldsymbol{z}$ = வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள நபர்களின் எண்ணிக்கை, $\boldsymbol{\mu}$ = வறியவர்களின் சராசரி வருமானம்

எனினும் ஆள்வீதச்சுட்டெண்ணைப் போன்று இச்சுட்டெண்ணும் வறியவர்களிடையே காணப்படும் வருமானச் சமமின்மைகளைக் கவனத்தில் கொள்ளாமை ஒரு குறைபாடாகும்.

## 3. வறியவர்களிடையேயான வருமானப் பரம்பல் (Income Distribution Among Poor)

இந்த அளவீடானது விசேடமாக வறியவர்களிடையேயான வருமானப் பரம்பல் மீது கவனம் செலத்துகின்றதே ஒழிய முழுச் சனத்தொகையினதும் வருமானப் பரம்பல் மீது அக்கறை கொள்வதில்லை. வறியவர்களிடையேயான வருமானப் பரம்பலினை கணிப்பதற்கு லோறன்ஸ் வளையி (Lorenz curve)

மற்றும் கினி குணகம் (Gini Coefficient) என்பன பயன்படுத்தப்படுகின்றன. லோறன்ஸ் வளையி என்பது வருமானத்தின் திரண்ட வீதத்திற்கும் சனத்தொகையின் திரண்ட வீதத்திற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு வரைபட ரீதியான விளக்கமாகும். லோறன்ஸ் வளையினை வறியவர்களுக்கிடையிலான வருமானப் பரம்பலினை அறிய பயன்படுத்தும் போது இலகுவான விளக்கத்தினை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இவ்விரண்டும் வறுமைக் கோட்டிற்கு கீழ் காணப்படும் வறியவர்களின் எண்ணிக்கையினை அளவிடவில்லை என்பது இவற்றின் பிரதான குறைபாடாகும். அத்துடன் இவை வறுமையின் தீவிரத்தினையும் வெளிக்காட்டுவதில்லை (அமிர்தலிங்கம், 2008).

## 4. திரண்ட வறுமை சுட்டெண் (Composit Ioverty Indices)

இதில் இரண்டு வகையான சுட்டெண்கள் காணப்படுகின்றன. இச் சுட்டெண்கள் முன்னைய சுட்டெண்களில் காணப்படும் குறைபாடுகளை நீக்க முயற்சிக்கின்றன.

- சென் சுட்டெண் (Sen Index)
- வறுமையின் பா அளவீடு (The Pa Measure of Poverty)

### I. சென் சுட்டெண் (Sen Index)

சென் சுட்டெண் என்பது நோபல் பரிசு பெற்ற அமார்த்தியா சென் என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இச்சுட்டெண் வறியவர்களின் எண்ணிக்கை, வறியவர்களுக்கிடையிலான வருமானப்பரம்பல் மற்றும் வறுமையின் தீவிரம் என்பவற்றை பிரதிபலிக்கின்றது. அதாவது இச்சுட்டெண் ஆள்வீதச் சுட்டெண், வறுமை இடைவெளிச்சுட்டெண் மற்றும் கினிக் குணகம் என்பவற்றை ஒருங்கிணைக்கின்றமையினால் ஒரு பூரணமான வறுமைச்சுட்டெண்ணாகக் காணப்படுகின்றது. இச்சுட்டெண் பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

$$\mathbf{S = H[I + (1 - I)GP]}$$

$\mathbf{S} =$ சென் சுட்டெண், $I = \sum_{i=1}^{q} \left(\frac{z-y_i}{qz}\right)$ = வறுமை சுட்டெண்ணின் வீதமாக சராசரி வருமானத்தின் துண்டு விழும் தொகை, $y_i = \mathbf{i}$ ஆவது வறிய வீட்டுத்துறையின் வருமானம்

$\mathbf{z} =$ வறுமைக் கோடு, $\mathbf{qz} =$ வறுமைக் கோடு $\mathbf{z}$ இணைக் காட்டிலும் குறைந்த வருமானமுடைய வீட்டுத்துறையினரின் எண்ணிக்கை, $\mathbf{H} = \frac{q}{n}$ ஆள் வீதச் சுட்டெண், $\mathbf{n} =$ வீட்டுத்துறையினரின் மொத்த எண்ணிக்கை, $\boldsymbol{Gp} =$வறியவர்களிடையேயான கினிக் குணகம் $\mathbf{0} \leq \boldsymbol{Gp} \leq \mathbf{1}$.

## II. வறுமையின் பா அளவீடு (The $Pa$ Measure Of Poverty)

வறுமையின் பா அளவீடு என்பது 1981 இல் Foster, Greer மற்றும் Thorbecke ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சுட்டெண்ணானது வருமானச் சமமின்மையில் ஏற்படும் மாற்றங்கள், வருமானத்துண்டு விழும் தொகையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வறியவர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இச்சுட்டெண் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\mathbf{Pa} = \left(\frac{1}{n}\right)\left|\sum_{i=1}^{q}\left(g_i/_z\right)^a\right|$$

இங்கு $\boldsymbol{a} \geq \mathbf{0}$, $\boldsymbol{n} =$ வீட்டுத்துறையினரின் மொத்த எண்ணிக்கை, $\boldsymbol{g_i} = \mathbf{I}$ வது வீட்டுத்துறையின் வறுமையின் இடைவெளி, $\mathbf{q} =$ வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள வீட்டுத்துறையினரின் எண்ணிக்கை, $\mathbf{z} =$ வறுமைக் கோடு, $\mathbf{Pa} =$ வறுமையின் $\mathbf{Pa}$ அளவீடு.

## 5. பல்பரிமாண வறுமைச் சுட்டி- Multi Dimensional Poverty Index

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடித்தெகை மற்றும் சுகாதார அளவீட்டின் அடிப்படையில் 2016

ஆம் ஆண்டின் தலைக்குரிய பல்பரிமாண வறுமை விகிதம் இலங்கையில் 2.4% ஆகும்.

இவ் பல்பரிமாண வறுமையானது கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைதரம் போன்ற மூன்று பரிமாணங்களின் 10 குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டு அளவிடப்படுவதுடன் இவ் மூன்று பரிமாணங்களும் சமமான அளவில் நிறையிடப்படுகின்றன. அக்குறிகாட்டிகள் பாடசாலைக்குச் சென்ற வருடங்கள், பாடசாலை வரவு, போசாக்கு, மின்சாரம், குடி நீர், சுகாதராம், வீட்டின் தளம், சமையல் எரிபொருள் மற்றும் வீட்டுக்குச் சொந்தமான சொத்துக்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. தலைக்குரிய பல்பரிமாண வறுமை விகிதமானது இலங்கையில் குறைவாகக் காணப்பட்டாலும் சனத்தொகையில் 11.9% மானோர் அதாவது 2.5 மில்லியன் மக்கள் பல்பரிமாண வறுமைக்குள் அதிகம் பாதிக்கப்படகூடியவர்களாகக் காணப்படுகின்ற அதேவேளை 2016 இல் மொத்த சனத்தொகையில் 0.2% மானோர் கடுமையான பல்பரிமாண வறியவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2019).

## 6. லோறன்ஸ் வளைகோடு (Lorenz Curve)

உலக நாடுகளில் சார்பு வருமானப்பரம்பல் தெடர்பாக 1905 இல் அமெரிக்க புள்ளிவிபரவியலாளரான Lorenz என்பவரினால் கூறப்பட்ட ஒரு கோட்பாடு லோறன்ஸ் வளைகோடாகும். குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் மொத்த சனத்தொகையின் திரண்ட சதவீதத்தினர், நாட்டின் மொத்த வருமானத்தில் எத்தனை திரண்ட சதவீதத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதனைக் காட்டும் வளைகோடே லோறன்ஸ் வளைகோடாகும். வரைபடத்தில் 45 பாகை கோடு சமபரம்பல் வளைகோடு எனப்படுகிறது. இக்கோட்பாடானது நாட்டுக்குள்ளே வருமானமானது சமமாகப் பங்கிடப்பட்டிருப்பதை காட்டுகின்றது.

நடைமுறையில் எந்த ஒரு நாட்டிலும் இத்தகைய சமமான வருமானப் பங்கீடு காணப்படமாட்டாது. இதேபோல் லோறன்ஸ் வளைகோடானது 1 எனும் வடிவிலும் காணப்படமாட்டாது. இதன் கருத்து வருமானம் முழுவதும் 1 வீதமான சனத்தொகை மத்தியில் செறிந்திருக்கும். எனவே லோறன்ஸ் வளைகோடானது சமபரம்பல்

வளைகோட்டுக்கு கீழ் உள்ள அரைச் சதுரப்பகுதியில் அமைந்திருக்கும். லோறன்ஸ் வளையியில் ஏற்படும் மாற்றங்களின் மூலம் ஒவ்வொரு நாட்டினதும் வருமானச் சமமின்மையின் தன்மையைக் காட்ட முடியும். அதாவது லோறன்ஸ் வளையியானது சமபரம்பல் வளைகோட்டை நெருங்கிச் செல்லுமாயின் அது வருமானச்சமமின்மையின் அளவு குறைவடைந்து செல்வதாகவும், மாறாக லோறன்ஸ் வளையியானது சமபரம்பல் வளைகோட்டில் இருந்து விலகிச் செல்லச் செல்ல வருமானச்சமமின்மையின் அளவு அதிகரித்துச் செல்வதாகவும் காணப்படும் (Todaro & Smith (2015).

**வரைபடம்: 4 லோறன்ஸ் வளையி**




மூலம்: Todaro & Smith (2015)

படத்தில் $LC_1$ யை விட $LC_2$ வருமான சமமின்மையின் அளவு கூடுதலாக இருப்பதைக் காட்டுகின்றது. எனவே LC ஆன சமபரம்பல் வளைகோட்டை நெருங்கிச் செல்வதே சிறந்தது ஆகும்.

## கினி குணகம்- (Gini Coefficient)

1912 இல் இத்தாலி நாட்டு பொருளியலாளரான கினி என்பவரினால் சார்பு வருமானப் பங்கீடு தொடர்பாக லோறன்ஸ் வளைகோட்டைப் பயன்படுத்தி விளக்கப்பட்ட ஒரு கோட்பாடே கினி குணகம் ஆகும்.

**வரைபடம்: 7 கினி குணகம்**




மூலம்: Todaro & Smith (2015)

கினி குணகத்தின் பெறுமதியானது 1 இற்கும் 0 இற்கும் இடைப்பட்டதாக இருக்கும். இது 1 இனை நெருங்குமாயின் வருமானச்சமமின்மையின் அளவு அதிகரித்துச் செல்வதாகவும் மாறாக 0 இனை நெருங்குமாயின் வருமானச்சமமின்மையின் அளவு குறைவடைந்து செல்வதாகவும் காணப்படும். கினிகுணகத்தின் பெறுமதியானது 0 மாகக் காணப்படின் சமபரம்பல் வளைகோடும் லொறன்ஸ் வளைகோடும் ஒன்றாகக் காணப்படும். இத்தகைய சம வருமானப்பரம்பல் எந்த நாட்டிலும் காணப்படமாட்டாது. கினிகுணகத்தின் பெறுமதி 1 ஆகக் காணப்படின் நாட்டின் வருமானம் முழுவதும் 1 வீதமான சனத்தொகையினர் மத்தியில் செறிந்திருக்கும். இத்தகைய நிலையும் எந்நாட்டிலும் காணப்படமாட்டாது. எனவே கினிக்குணகம் 0 இற்கும் 1 இற்கும் இடைப்பட்டதாகவே காணப்படும். கினி குணகத்தின் பெறுமதி பூச்சியத்தை நெருங்குவதே சிறந்ததாகும். இலங்கையில் கினிகுணகத்தின் போக்கானது பின்வருமாறு அமைந்துள்ளது (பரமேஸ்வரன், 2018).

**அட்டவணை: 3 இலங்கையில் கினிகுணகத்தின் போக்கு (2003-2016)**

| ஆண்டு | கினிகுணகம் |
|---|---|
| 2003/2004 | 0.46 |
| 2006/2007 | 0.49 |
| 2009/2010 | 0.49 |
| 2012/2013 | 0.48 |
| 2016 | 0.46 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2019

கினிக்குணமானது 2012/2013 இல் வீட்டுத்துறையினரின் வருமான மற்றும் செலவீன அளவீட்டின் அடிப்படையில் 0.48% இருந்து 2016 இல் 0.45% மாக குறைவடைந்துள்ளது. இருப்பினும் வறுமைக் கோட்டிற்கு சற்றுமேலாக உள்ள வறுமையற்ற சனத்தொகையினர் உயர்ந்தளவில் பாதிப்படையக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளனர். இங்கு தேசிய வறுமைக் கோட்டிற்கு ஏற்படும் 10% அதிகரிப்பானது (ரூ.4,166 இருந்து ரூ.458>206 இல்) தலைக்குரிய வறுமை விகிதத்தை 6.1 சதவீதம் வரை அதிகரிக்கும். இதனால் வறுமைக் கோட்டிற்கு மேலான 10 சதவீதத்திற்குள் 400,000இற்கு அதிகமானோர் இதனுள் உள்வாங்கப்படுவார்கள். இங்கு குடும்ப அங்கத்தவருக்கு ஏற்படும் சுகயீனம் அல்லது இயற்கை அனர்த்தம் போன்ற அதிர்வுகளின் காரணமாக இத்தகைய மக்கள் வறியோராக மாறுவதற்கு அதிகளவான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2019).

## இலங்கையில் வறுமைக்கான காரணங்கள்

1. **வேலையின்மை:** இலங்கையில் வேலையின்மைக்கும் வறுமைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பது தெளிவாக கண்டறியப்பட்டுள்ளது. குடும்பத்தலைவர்கள் அல்லது உழைக்ககூடிய நபர்கள் வேலையின்றி இருக்கும் போது போதிய வருமானமின்றி வறுமையில் வாடுவது இயல்பானதாகும் என குறிப்பிடப்படுகிறது.

2. **மூலதன உருவாக்கம் போதியளவு காணப்படாமை:** இலங்கையில் மொத்த மூலதன உருவாக்கம் குறைவாகக் காணப்படுவது பொருளாதாரம் குறைவான வேகத்தில் வளர்வதற்குக் காரணமாக அமைகின்றன. மொத்த மூலதன உருவாக்கம் போதாமையினால் அனைத்துத் துறைகளினதும் வளர்ச்சி மந்தமடைவதாலேயே பொருளாதார வளர்ச்சி மெதுவடைகின்றது. இதனால் வேலையின்மை அதிகரித்து வறுமை அதிகரிப்பதும் தவிர்க்க முடியாததாகின்றது.

3. **குறைந்தளவான உள்நாட்டு சேமிப்பு:** இலங்கையில் உள்நாட்டு சேமிப்பு குறைவாகக் காணப்படுவது பொருளாதாரத்தினைப் பலவழிகளில் பாதிக்கின்றது. 1990-2004 இடைப்பட்ட காலப்பகுதியில் உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மொத்த உள்நாட்டு சேமிப்பானது இலங்கையில் 16வீதமாகவும் தென்கொரியாவிலும் மலேசியாவிலும் முறையே 34 மற்றும் 42 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் மொத்த உள்நாட்டு சேமிப்பும் சார்பளவில் இலங்கையில் குறைவாக உள்ளமையை உணர முடிகின்றது. உள்நாட்டில் சேமிப்பின் மூலம் முதலீட்டுக்கான போதிய நிதி உள்நாட்டில் கிடைக்காவிட்டால் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. பொருளாதார வளர்ச்சி தாமதமடைவதால் வறுமை ஒழிப்பிலும் எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடும்.

4. **அடிக்கடி மாறுபடும் அரசாங்கக் கொள்கைகள்:** இலங்கையில் வறுமை ஒழிப்பு தொடர்பாக பதவிக்கு வரும் அரசாங்கங்களின் கொள்கையானது அடிக்கடி மாறுபடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஒரு கொள்கை நடைமுறையில்

இருக்கும் போது அவற்றின் இலக்குகள் அடையப்பட்டமை பற்றிக் கவனத்தில் கொள்ளப்படாமல் அரசாங்கம் மாற்றமடைந்தவுடன் வறுமை ஒழிப்புத் திட்டமும் மாற்றப்படுகின்றது. ஜனசவிய மற்றும் சமூர்த்தி போன்ற திட்ட அமுலாக்கலில் காணப்படும் மாற்றங்களும் சிக்கல்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

5. **உட்கட்டுமான வசதிகள் போதாமை:** உட்கட்டுமான வசதிகளின் அபிவிருத்திக்கும் வறுமை குறைப்புக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இலங்கையின் பெரும்பாலான கிராமப்பகுதிகளில் உட்கட்டுமான வசதிகள் (வீதிகள், நீர் விநியோகம், மின்சார வசதிகள்) போதாமல் காணப்படுவது வறுமைக் குறைப்பில் பெரும் தடையாக உள்ளது.

6. **கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தும் வகையில் போதியளவு திட்டங்கள் செயற்படுத்தப்படாமை:** வளக்கிடைப்பனவிற்கேற்ப திட்டங்கள் செயற்படுத்தப்படாமை பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் ஆபிரிக்காவில் அல்லது இந்தியாவில் காணப்படுவது போல நீர்பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகக் காணப்படவில்லை. பிரச்சினை என்னவெனில் ஆற்று நீர் பயன்படுத்தப்படாமல் கடலில் கலப்பதாகும். எனவே உரிய திசை திருப்பத் திட்டங்கள் மூலம் நீர் சேமிக்கப்படுமானால் விவசாயத்துறை இன்னும் சிறப்பாக வளரமுடியும். இலங்கையில் குடாக்களும், கடல் நீர் ஏரிகளும் அதிகமாகக் காணப்படுவதால் மீன் வளம் அபரிவிதமாகக் காணப்படுகின்றது. ஆனால் இலங்கையானது மாலை தீவு, பாகிஸ்தான், சிலி, இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீனையும் கருவாட்டினையும் இறக்கமதி செய்கின்றது. உள்நாட்டு வளம் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுவது இதன் மூலம் தெளிவாகின்றது.

7. **சமூக ரீதியாக புறந்தள்ளப்படுதல் / ஓரங்கட்டப்படுதல்:** இனம், மதம், மொழி மற்றும் சாதி அடிப்படையில் நபர்கள் உயர் வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதிலிருந்து

தடுக்கப்படும் போது அதுவும் வறுமைக்கு ஒரு முக்கியமான காரணியாக அமைந்து விடுகின்றது.

8. **தங்கியிருக்கும் குணம் குறி:** இலங்கையில் வறுமையானது நீண்டகாலத்ததிற்குத் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு ஒரு முக்கியமான காரணமாக இது அமைகின்றது. அரசாங்கம் தொடர்ந்தும் இலவசமாக அல்லது மானியமாக உணவுப் பொருட்களையும் சேவைகளையும் தரவேண்டும் என மக்கள் நினைப்பது அவர்களை ஆற்றலுடன் உழைப்பதிலிருந்து தடுக்கின்றது. ஒவ்வொரு தேர்தலிலும் இலவச வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் பிரதான அரசியல் கட்சிகளே மக்களை இலவசமாக எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளிவிடுவதாகக் காணப்படுகின்றது.

## இலங்கையில் வறுமையைக் குறைக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சிதிட்டங்கள்

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு காலத்திற்கு காலம் பல நிகழ்ச்சிதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவற்றில் சில உடனடியாக வறுமையைக் குறைக்கும் நோக்குடனும் சில நீண்ட காலத்தில் படிப்படியாக உற்பத்திப் பெருக்கத்தினையும் வேலைவாய்ப்புக்களையும் உருவாக்குவதன் மூலம் வறுமையைக் குறைக்கும் நோக்குடனும் அமுல்படுத்தப்பட்டன.

இலங்கையில் வறுமையைத் தணிக்கும் முயற்சிகளை இரு பிரிவுகளாக நோக்கலாம்.

1) நீண்ட காலத்தில் படிப்படியாக உற்பத்திப் பெருக்கத்தினையும் வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதன் மூலம் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள்
2) குறுங்காலத்தில் உடனடி வறுமைக்குறைப்பினை அடையும் முறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.

### 1. நீண்டகால வறுமை தணிப்பு அல்லது முயற்சிகள்:

நீண்டகால வறுமைத்தணிப்பு முயற்சிகள் எனக் குறிப்பிடப்படுபவை பல நோக்கங்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட திட்டங்களாகவிருப்பினும், அவற்றின் அடிப்படை தாற்பரியமாக ஊடுருவி நிற்பது வறுமை என்னும்

எண்ணக்கருவாகும் (அமிர்தலிங்கம், 2008). இலங்கை ஒரு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையிலேயே வறுமையின் தோற்றப்பாடு என்ற கருத்து ஆராயப்பட்டது. ஆகவே இத் திட்டங்கள் யாவும் விவசாய அபிவிருத்தி என்பதன் பிண்ணனியில் அத்துறையினில் நிலவிய வறுமையினைத் தணித்தல் என்னும் எண்ணக்கருவினையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தன (சிறிகாந்தன், 2008). அந்தவகையில் பின்வரும் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

## I. நிலக்குடியமர்வு திட்டங்கள் (Land Settlement Schemes)

நிலக்குடியமர்வு திட்டங்கள் 1950களின் முற்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் சுதந்திரத்தின் பின்பே இத்திட்டம் தீவிரமாக முன்னேடுக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப்பின் வந்த முதலாவது தசாப்தத்தில் உலர்வலய நிலக்குடியமர்வானது பிரதான விவசாய அபிவிருத்திக் கொள்கையாக காணப்பட்டது. 1948 இலிருந்து 1953வரை உலர்வலயத்தில் குடியமர்த்தப்பட்ட விவசாயக்குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் நீர்பாசனமுடைய நெற்காணியும் 3 ஏக்கர் மேட்டு நிலக் காணியும் வழங்கப்பட்டன. நீர்பாசனமுடைய காணிகளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணமாகவும் அதிக விவசாயக்குடும்பங்களை குடியேற்றும் நோக்குடனும் அரசாங்கம் 1953ல் வழங்கப்படும் நீர்பாசனமுடைய நெற்காணியின் அளவை 3 ஏக்கர்களாகவும் மேட்டுநிலக் காணியின் அளவை 2 ஏக்கர்களாகவும் குறைத்தது. 1956ல் நில ஒதுக்கீடு 2 ஏக்கர் நெற்காணி மற்றும் 1ஏக்கர் மேட்டுநிலக்காணி என மேலும் குறைக்கப்பட்டது. விவசாய உற்பத்திப்பொருட்களில் குறிப்பாக அரிசியில் தன்னிறைவு அடைவதற்காகவும் சனத்தொகை அடர்த்தியைக் குறைப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன் கிடைத்ததா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. விவசாய நிலங்களின் பரப்பினை விரிவாக்குவதை விட உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் கூடிய பயனை அடைந்திருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. நிலக்குடியமர்வுத்திட்டங்கள் தொடர்ந்து யுத்தநிலமைக்கு வழிவகுத்த காரணிகளுள் பிரதானமானதெனக் கருதப்படுவதுடன் இன்றும் இலங்கை அரிசியை இறக்குமதி செய்யும் நாடாகவே காணப்படுகின்றமை இத்திட்டத்தின் வெற்றியைக் கேள்விகுரியதாக மாற்றுகின்றது (அமிர்தலிங்கம், 2008).

## II. நடுத்தர வர்க்கத்தினருக்கான நிலவுடமை மாற்றம் (Middle Class Land Alienation)

இத்திட்டத்தின் கீழ் நடுத்தர வர்த்தகத்தினரைச் சேர்ந்த தனிநபர்களுக்கு அபிவிருத்தியில் அவர்களை இணைக்கும் நோக்குடன் நிலஉடமை மாற்றம் செய்யப்பட்டது. நிலம் வழங்கப்பட்டவருக்கு கடன்பெறும் வசதியும் வழங்கப்பட்டது. 1955 வரை 6000 பேருக்கு ஏறக்குறைய 75000 ஏக்கர் காணி உடமை மாற்றம் செய்யப்பட்டது. 1956 தொடக்கம் 1966ற்கு இடையில் 8000 பேருக்கு ஏறக்குறைய 73000 ஏக்கர் காணி உடமை மாற்றம் செய்யப்பட்டது. குறிக்கோள் அடையப்படாமல் இத்திட்டமும் பின்பு கைவிடப்பட்டது.

## III. கிராமிய விரிவாக்கல் திட்டங்கள் (Village Expansion Schemes)

இக்கிராமிய விரிவாக்கல் திட்டத்தின் கீழும் பெருமளவு நிலங்கள் உடமை மாற்றம் செய்யப்பட்டன. குடும்பமொன்றுக்கு 1 தொடக்கம் 3 ஏக்கர் வரையான நிலம் வழங்கப்பட்டதுடன் வீடுகட்டுவதற்கும் கிணறு வெட்டப்படுவதற்கும் நிதி உதவி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நிலங்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 700,000ற்கும் அதிகமாகக் காணப்பட்டது.

## IV. இளைஞர்களைகுடியமர்வு செய்யும் திட்டங்கள் (Youth Settlement Scemes)

நாட்டின் கல்வி கற்ற இளைஞர்களிடையே காணப்பட்ட வேலையின்மையைக் குறைக்கும் நோக்குடன் 1956ல் இளைஞர்களைக் குடியமர்வு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில் விஞ்ஞான முறைகளைப்பயன்படுத்தி இலாபகரமான முறையில் உணவு மற்றும் பணப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் இளைஞர்களுக்கு நிலையான மாதாந்த வருமானத்தினை உறுதி செய்வதாகும். எனினும் 1970களில் இத்திட்டமும் கைவிடப்பட்டது.

## V. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டம் (Accelerated Mahaweli Development Programme)

இத்திட்டத்தின் கீழ் நிலக்குடியமர்வுத்திட்டத்தின் மற்றுமொரு முக்கிய பாகம் 1978 இருந்து நடைமுறைக்கு வந்தது. 1977இல் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் விவசாய அபிவிருத்திக் கொள்கையில் ஒரு முக்கிய அங்கமாக இது காணப்பட்டது. இத்திட்டமானது உலர்வலயத்தில் ஏறக்குறைய 265000 ஹெக்டேயர் புதிய நிலங்களையும் முன்பு அபிவிருத்தி செய்யப்பட்ட நீர்பாசன வசதி போதியளவில் கிடைக்காத ஏறக்குறைய 100000 ஹெக்டேயர் நிலங்களையும் பயிர்செய்கைக்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இத்திட்டமானது 1978 தொடக்கம் 1983 இற்கு இடைப்பட்ட ஆறு வருட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 1985ன் இறுதிப்பகுதியளவில் 47278 விவசாயிகள் H,C,B மற்றும் A வலயங்களில் குடியமர்த்தப்படடார்கள். இத்திட்டத்திற்கான செலவு 5 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே 1977 இன் பின் நெல் உற்பத்தியில் எற்பட்ட அதிகரிப்புக்கு பிரதான காரணமாகக் கூறப்படுகின்றது.

## VI. நெற்காணிகள் தொடர்பான குத்தகை சீர்திருத்தங்கள் (நெற்காணிகள் சட்டம் 1953 மற்றும் 1958)

நெற்காணி தொடர்பான குத்தகைச் சீர்திருத்தங்கள் விவசாயக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் அதிகளவான வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்தன. நெற்காணிகள் தொடர்பான குத்தகை நிலமைகளை ஒழுங்குபடுத்துவதற்கு 1958 இலும் இரு சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1953இல் கொண்டுவரப்பட்ட நெற்காணிகள் சட்டமானது வரையறுக்கப்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டதாகக் காணப்பட்டதுடன் பெரும்பாலும் எவ்வித விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் 1958ல் அறிமுகப்படுத்தப்பட்ட நெற்காணிகள் சட்டமானது குத்தகை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதில் சர்வாம்சமுயற்சியாக காணப்பட்டது.

A. 1953ன் நெற்காணிகள் சட்டம்: இச்சட்டத்தின் பிரயோகமானது மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இரு மாவட்டங்களிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது. இதற்கான காரணம் இரு மாவட்டங்களும் ஒரே மாதிரியான தன்மையினையும் ஒரே மாதிரியான பிரச்சினைகளையும் கொண்டிருந்தமையினாலாகும். இச்சட்டமானது நெற்காணிகளின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காகவேயன்றி குத்தகை விவசாயிகளுக்கு நன்மையளிப்பதற்காக மட்டும் கொண்டு வரப்படவில்லை என்பதை அப்போதைய விவசாய அமைச்சர் இச்சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது ஏற்றுக்கொண்டனர் (அமிர்தலிங்கம், 2008). அம்பாந்தோட்டையில் பெருமளவு காணிகள் நிலவுடமையாளர்களால் அன்றி கம்பறயாஸ் (Gambarayas) என அழைக்கப்பட்ட இடையீட்டாளர்களாலேயே பராமரிக்கப்பட்டது (அமிர்தலிங்கம், 2008). அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவுரிமையாளர்கள் முகாமையாளர்களுக்கு குத்தகையடிப்படையில் தமது காணிகளை வழங்கினர். இவ்விரண்டு பிரதேசங்களிலும் கம்பறாஸ் முகமையாளர்களுக்கு மட்டுமே குத்தகை பாதுகாப்பினை வழங்கியதுடன் அவர்கள் நிலவுரிமையாளர்களிற்கு வழங்கிய குத்தகையையும் குறைந்தது. குத்தகையில் ஈடுபட்ட சிறுவிவசாயிகள் எவ்வித நன்மையையும் அடையவில்லை.

B. 1958இன் நெற்காணிகள் சட்டம்: இச்சட்டமானது 1956இல் ஆட்சிக்கு வந்த S.W.R.D.பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. வரலாற்றில் முதல் தடவையாக சந்தைப்படுத்துதல், கடன் வசதிகள், பயிர்காப்புறுதிகள் மற்றும் நிலக்குத்தகை காலம் என்பவற்றை உள்ளடக்கியதாக சர்வாம்சரீதியான விவசாயக்கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டன. ஒரு புதிய விவசாய சேவைத் திணைக்களம் உருவாக்கப்பட்டு இக்கொள்கைகள் கண்காணிக்கப்பட்டன. இம்

முயற்சிகள் வறுமைத் தணிப்புக்கு உண்மையான பங்களிப்பினை வழங்கியுள்ளனவா என்பது தொடர்பாக முரண்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ள போதிலும், மக்கள் வாழ்க்கை தரத்தில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தமையினையும், விவசாயத்துறை சார்ந்த நவீனத்திற்கு வழிகாட்டியமையினையும், கடுமையாக வறுமைக்குள் சிக்கியிருந்தவர்களிற்கு ஒரு விடிவினை ஏற்படுத்தியதனையும் பொருளாதார – சமூக நலன்கள் சார்ந்த மேம்பாடுகளை உருவாக்கியதனையும் மறுக்க முடியாது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் சில குறைபாடுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## 2. உடனடி விளைவிற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்:

இங்கு குறிப்பிடப்பட்ட அரசமட்டத்திலான தேசிய மற்றும் பிரதேசம் சார்ந்த முயற்சிகளின் இலக்குகளை அடைவதற்கு சற்று நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலையில் பல வளர்முக நாடுகளில் பின்பற்றப்பட்டு வருவதுபோல, வறுமைத்தணிப்பு மூலோபாய முயற்சிகளாக இலங்கையிலும் குறுங்கால வறுமைத்தணிப்பு முயற்சிகள் பல காலங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு

### I. சமூகப்படி

1950களின் நடுப்பகுதியில் இருந்து ஜனசவியத் திட்டத்தின் ஆரம்பம் வரையில் வழங்கப்பட்டு வந்த சமூகத்தில் மிகவும் அடித்தளத்தில் வாழ்கின்ற ஆதரவற்ற வறியவர்களுக்காக வழங்கப்பட்ட “சமூகப்படி” ஆரம்பகாலங்களில் மாதத்திற்கு 15ரூபாயாக வழங்கப்பட்டது, 1970களின் இறுதிப்பகுதியில் 75 ரூபாவிற்கு இடையில் வழங்கப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகங்கள் மூலம் இவை வழங்கப்பட்டன.

### II. உணவு மானியத் திட்டம்

உணவு மானியம் என்பது இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானிய ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாயினும் சுதந்திரத்தின் பின்னும் அரசாங்கம்

இத்திட்டத்தினை தொடர்ந்து அமுல்செய்தது. ஆனால் நாட்டின் பொருளாதார நிலமை மோசமடைந்தமையினால் ஏனைய நலன்புரி சேவைகளில் குறைப்புச் செய்யப்பட்ட போதும் மானிய விலையில் அரிசி வழங்கும் முறைமை தொடர்ந்தும் பேணப்பட்டது. 1951 இல் கோதுமை மாவிற்கான மானியத்தை மீள அறிமுகப்படுத்தியதோடு அரிசி மானியமும் அதிகரிக்கப்பட்டது. டிசம்பர் மாதத்தில் அரிசிக்கான மானியம் மீண்டும் அதிகரிக்கப்பட்டது. 1950இன் இறுதிப்பகுதியில் அரிசி விலையானது இறக்குமதி விலையின் 1950-1951 இல் மானியங்கள் மொத்த அரசாங்க செலவின் ஐந்தில் ஒரு பகுதியாகக் காணப்பட்டன. 1952 இல் அரிசி மற்றும் கோதுமை மாவிற்கான செலவுகள் அபிவிருத்தி திட்டங்களின் செலவுகளை விட அதிகமாகக் காணப்பட்டன. 1953 இல் மோசமடைந்த பொருளாதார நிலமையின் காரணமாக உணவு மானியங்களைக் குறைக்க வேண்டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. இதற்கு மக்களின் எதிர்ப்பு கடுமையாக இருந்ததுடன் முழு நாடுமே ஆட்டம் காணும் வகையில் இடதுசாரிகளின் தலைமையில் மாபெரும் கர்த்தாலும் வேலை பகிஸ்கரிப்பும் இடம்பெற்றன. இதனால் பிரதமர் டட்லி சேனநாயக்க பதவி விலக வேண்டியேற்பட்டதுடன் உடனடியாக அரிசியின் விலை குறைக்கப்பட்டதோடு மானியமும் அதிகரிக்கப்பட்டது. எனினும் 1956 இல் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தோல்வியடைந்தது. இதன் பின் உணவு மானியத்தினை குறைக்கும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதுடன் 1977 வரை உணவு மானியம் தொடர்ந்து அமுலில் இருந்தது.

### III. உணவு முத்திரைத்திட்டம்

1977இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் மானியச் செலவினைக் குறைக்கும் நோக்குடன் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் கொள்கைகளுடன் இசைந்து செல்லும் வகையில் இத்திட்டத்தை அமுல்படுத்தியது. மொத்தமாக 7.8 மில்லியன் நபர்கள் அதாவது மொத்த சனத்தொகையில் 46 சதவீதமானோர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவார்கள் என மதிப்பிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மாதாந்தம் 700 ரூபாவிற்கு குறைவாக வருமானம் பெறும் ஒரு நபருக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைகளின் பெறுமதியானது குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையினையும் அவர்களின் வயதினையும் பொறுத்து

வேறுபட்டது. இதற்கு மேலதிகமாக மின்சார வசதியற்ற குடும்பங்களுக்கு மண்ணெண்ணையைக் கொள்வனவு செய்வதற்கான மண்ணெண்ணை முத்திரையும் வழங்கப்பட்டது. எனினும் தொடர்ந்து அதிகரித்த பணவீக்கத்தின் காரணமாக இவ்வுணவு முத்திரைகளின் கொள்வனவு சக்தி வீழ்ச்சியடைந்தது. உதாரணமாக இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு ஒரு ஆண்டின் பின் அதாவது 1980 ஆம் ஆண்டில் நாட்டின் பணவீக்கமானது 26 சதவீதமாக காணப்பட்டது. வறுமையைக் குறைக்கும் நோக்கம் செயற்றிறனாக இருந்திருக்க வேண்டுமானால் உண்மையில் இம்முத்திரைகளின் பெறுமதி காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அதிகரிக்கப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது.

## IV. ஜனசவிய

இத்திட்டம் 1989 இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜனசவிய என்பதன் கருத்து மக்களின் பலம் (Srength of the People) என்பதாகும். அத்திட்டமானது வறிய மக்களின் தொழில் திறனை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின வாழ்கை தரத்தினை உயர்த்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழில் திறன் விருத்தியுடன் இணைந்ததாக அரசாங்கம் நலன் பெறும் குடும்பங்களுக்கு அவர்கள் சிறந்த வாழ்கைத் தரத்தினை பேணும் வகையில் இரண்டு வருடகாலப்பகுதிக்கு உலர் உணவினையும் வழங்கியது. இத்திட்டத்தில் ஒருவர் உள்ளீர்க்கப்படுவதற்கான தகுதி விதியாக மாதாந்த வருமானம் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் மாதாந்த வருமானமானது 700 ரூபாவிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டது. தெரிவு செய்யப்படும் குடும்பங்கள் இரண்டு வருட காலப்பகுதியில் மாதாந்தம் 2500ரூபா கொடுப்பனவைப் பெற தகுதியுடையவர்களாவர். இத்திட்டத்தின் பிரதான நோக்கம் நலன் பெறும் குடும்பங்களின் சொந்த வருமானத்தினை அதிகரிக்கச் செய்து எதிர்கால நலத் திட்டங்களில் அவர்கள் தங்கியிருக்காத வகையில் வறுமை நிலையிலிருந்து பூரணமாக விடுபடுவதற்கு உதவுவதாகும். நுகர்வும் முதலீடும் இணைந்த வகையிலேயே இத்திட்டம் வடிவமைக்கப்பட்ட போதும் இத்திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## V. பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்:

இத்திட்டத்தின் பிரதான நோக்கம் பாடசாலை செல்லும் பிள்ளைகளிடையே காணப்படும் போசாக்கின்மையைக் குறைப்பதாகக் காணப்பட்டது. இத்திட்டமானது கிராம மட்டத்தில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் உப உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தினையும் கொண்டிருந்தது. இத்திட்டம் ஏறக்குறைய 10000 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டது. ஏறக்குறைய 4 மில்லியன் பிள்ளைகள் ஒரு நாளைக்கு 3 ரூபா பெறுமதியான முத்திரையைப் பெறுவதற்கும் தகுதி பெற்றிருந்தனர். இது பிள்ளைகள் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை பாடசாலைக்குக் கொண்டுவருவதற்காக வழங்கப்பட்டது. இந்நடவடிக்கையானது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்து சிறு விவசாயிகளுக்கு வருமானத்தினை அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. மிகவும் பின்தங்கிய கிராமங்களிலும் சேரிப்புறங்களிலும் வாழ்ந்த பிள்ளைகள் இத்திட்டத்தினால் கவரப்பட்டு பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதற்கு தூண்டப்படுவதற்கும் ஆதாரங்கள் காணப்பட்டன. இத்திட்டமானது ஏழைகள் அல்லாதோரையும் உள்ளடக்கியிருந்த படியால் வளங்களை வீண்விரயம் செய்யும் நடவடிக்கை எனவும் சிலவேளைகளில் விமர்சிக்கப்பட்டது. இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட சிறிய காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

## VI. சமுர்த்தி:

1994 இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் தேசிய அளவில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் சமுர்த்தி (சுபீட்சம்) என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தத் தொடங்கியது. இத்திட்டமானது குடும்ப அலகின் அபிவிருத்தி மீது விசேடகவனம் செலுத்தியது. குடும்ப மட்டத்திலான பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் பிரதானமாக கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக ஒரு குடும்பத்தினை தனியார் துறையில் அல்லது சுயதொழில் மூலம் அல்லது கூட்டாகத் தொழில் தொடங்குவதன்

மூலம் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளச் செய்து பொருளாதார ரீதியாக மேம்பாடடைய வைத்தலாகும். தேவைப்படுமிடத்து குடும்ப உறுப்பினர்கள் அரச துறையில் வேலை வாய்ப்பினைப் பெறும் வண்ணமும் வழிநடாத்தப்பட்டார்கள். இத்திட்டத்தினைக் கண்காணிக்கவும் தொழிற்படுத்தவும் சமூர்த்தி அதிகாரசபை நிறுவப்பட்டது.

**முடிவுரை:**

நாடொன்றின் அபிவிருத்திக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் வறுமை அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. தனியே மனிதத் தேவைகளின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்பதற்கப்பால் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல் என்கின்ற எண்ணக்கருவினை உள்வாங்கியிருந்தமையினையும் தெளிவாகக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது. இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியிலும் குறிப்பிட்டளவு சனத்தொகையினர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் முதலாவது நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோளானது "வறுமையை அனைத்து இடங்களிலும் அனைத்து வடிவங்களிலும் முடிவிற்கு கொண்டு வருதல்" எனும் இலக்கை கொண்டுள்ளது. இவ்விலக்கை அடைவதற்காக அனைத்து நாட்டு அரசாங்கங்களும் சரியான கொள்கை திட்டங்களை வகுப்பதன் மூலம் வறுமையற்ற நாட்டை உருவாக்க முடியும் என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை.

**உசாத்துணைகள்**


*அமிர்தலிங்கம், கோ.(2008). இலங்கைப் பொருளாதாரம், பூபாலசிங்கம் புத்தகசாலை, பக்கம் (138-164).*

*சிறிகாந்தன். இ. (2008). இலங்கை குறித்து ஒரு சிறப்பு பார்வை.பொருளாதார செல்வழி, பூபாலசிங்கம் புத்தகசாலை, பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கலகம், கொழும்பு. பக்கம் (425-439).*

*Central Bank of Sri Lanka. (2016). Annual Report, Central Bank of Sri Lanka, Colombo. pp.131-133.*

*Central Bank of Sri Lanka. (2019). Annual Report, Central Bank of Sri Lanka, Colombo. pp.144-146.*

*Department of Census and Statistics. Various reports 2000-2016. colombo.*

*Gunewardena, D. (2004). Poverty Measurement: Meanings, Methods, and Requirements. Colombo: Centre for Poverty Analysis*

*Parameswaran. v. (2018).Economics, Colombo.13.Vpp. 116-112, 110-115.*

*Sen, A. (1993). Capabilities and wellbeing. In M. N. Sen (Ed.), The Quality of Life (pp. 30-53). Oxford: Oxford University Press.*

*Todaro, M. P., & Smith, S. C. (2015). Economic Development. (12th edition), Pearson publishing.*

*Tamil Geography News. (2020). ,yq;ifapy; tWik. [ONLINE] Available at [https://tamilgeographynews838664512.wordpress.com/2020/02/18/%e0%ae%87%e0%ae%b2%e0%ae%99%ee0%ae%b1%e0%af%81%e0%ae%ae%e0%af%88/](https://tamilgeographynews838664512.wordpress.com/2020/02/18/%e0%ae%87%e0%ae%b2%e0%ae%99%ee0%ae%b1%e0%af%81%e0%ae%ae%e0%af%88/)[Accessed 18 February 2020] .*

*World Bank. (2002). World development report 2000/2002. New York: Oxford University Press. pp. 6-21.*

*World Population Review. (2020.Poverty Rate By Country. [ONLINE] Available at https://worldpopulationreview.com/country-rankings/poverty-rate-by-country [Accessed 5 February 2020].*

# முயற்சியாண்மை தசாப்தத்தில் சமூக முயற்சியாண்மைக்கோர் அறிமுகம்

நடராஜ் விமலினி[3]

## அறிமுகம்

இன்று காணப்படுகின்ற வணிக உலகில் பலவகையான முயற்சியாண்மை உருவெடுத்துள்ளன இருப்பினும் சமூக முயற்சியாண்மை தனக்கென ஒரு முக்கிய இடத்தினை பிடித்துள்ளது. இதற்கு பிரதான காரணம் சமூக முயற்சியாண்மையின் சமூக நோக்கமே ஆகும். இது சமூக அக்கறையை பிரதானமாக கொண்டு தமது புத்தாக்கச் ஏற்பாடுகளின் மூலம் சமூகத்திற்கு நிலையான அபிவிருத்தியை பெற்றுத்தரக் கூடியது எனவே இக் கட்டுரையானது சமூக முயற்சியாண்மை பற்றிய அறிமுகத்தையும் அது தொடர்பான அறிஞர்களின் கருத்துக்களையும் நவீன உலகின் பார்வையில் சமூக முயற்சியாண்மை பற்றிய கருத்துகளையும் மற்றும் இதில் ஏற்பட்டுள்ள தற்கால போக்குகளையும் பற்றி ஆராய்கின்றது.

## சமூக முயற்சியாண்மையின் அறிமுகம்

கடந்த சில ஆண்டுகளாக முயற்சியாண்மை மற்றும் முயற்சியாளர் விடயத்தில் உலகெங்கிலும் உள்ள பொருளியல் ஆய்வார்களினால் குறிப்பிடத்தக்கவாறு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது (Sulphey & Alkahtani, 2017). இதன் முக்கிய காரணம் முயற்சியாண்மை சமூகத்தினதும் அல்லது நாட்டினதும் பாரிய பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் கனிசமான அளவு பங்களிப்பை வழங்குவதாகும் (Partzsch & Ziegler, 2011). இது தவிர இன்று பலர் முயற்சியாண்மையை தங்கள் தொழிலாகவும் தங்கள் தொழில்பாதையாகவும் தெரிவு செய்கின்றனர். இதன் முக்கிய காரணம் வழமையான பெரிய தனியார் நிறுவனங்களை காட்டிலும் இதில் பொருளாதாரரீதியாகவும் உளரீதியாகவும் வெகுமதிகளை

[3] உதவி விரிவுரையாளர், முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

பெற முடியும் என்ற நம்பிக்கை இவர்களிடம் காணப்படுவதினாலாகும்.

சமூக முயற்சியாண்மை என்பது அதன் பெறுமதிசார் முன்மொழிவு (Value proposition) காரணமாகவும் மற்றும் சமூகத்தில் காணப்படும் முக்கிய பிரச்சனைகளுக்கு நிதி உதவியினை வழங்குவதினாலும் இது தற்போதைய பல்வேறு வகையான முயற்சியாண்மைகளின் பாதையில் இருந்து விலகி வேறுபட்டு காணப்படுகின்றது (Ahiarakwem & Anis 2012). சமூக தொழில்முனைவோர் சமூக மாற்றங்களை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளனர். மேலும் இது போன்ற தொழில்முனைவோர் ஒரே நேரத்தில் சமூக பிரச்சனைகள் மற்றும் பிரச்சனைகள் குறித்த குறிப்பிட்ட விடயங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் அதன் அமைப்பு முழுவதும் மாற்றத்தக்க முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்காகவும் செயற்படுகின்றனர். சமுதாயத்திற்கும் அதன் இன்றைய சமுக பிரச்சனைகளுக்கும் ஏதேனும் செய்யும் படி கட்டாயப்படுத்தும் சமூக அழுத்தம் சமூக தொழில்முனைவோரின் எழுர்ச்சிக்காக ஆதிக்கம் செலுத்தும் காரணிகளில் முக்கியதொன்றாகும் (Moizer & Tracey, 2010). ஆனால் நிதி தொடர்பான காரணிகள் நிறுவனத்தின் விஸ்திர தன்மையை உறுதி செய்வதில் பங்கு வகிக்கின்றது. இன்றைய காலகட்டங்களில் சுற்றுச் சூழல் பிரச்சனைகள் அனைத்தும நாடுகளிலும் காணப்படும் முக்கிய உலகலாவிய கவலைகளில் ஒன்றாகும். சுற்றுச் சூழல் முயற்சியாண்மை என்பது முயற்சியாண்மையின் துணைப்பிரிவாக காணப்படாலும் இது சமூக முயற்சியாண்மையின் துணைப்பிரிவாகும்.

தற்போது தனியார் மற்றும் இலாபநோக்கினாலான நிறுவனங்களின் சமூக பொறுப்பு சிந்தனைகளில் மற்றும் செயற்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மறுபுறம் இந்த சமூக அழுத்தங்களை தணிக்க குறிப்பாக செயற்படும் நிறுவனங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆயினும் கூட மேலே குறிப்பிட்ட இந்த இரண்டு நடைமுறைகளும் இலாப அதிகரிப்பு அல்லது நன்மதிப்பில் மட்டுமே முக்கியதுவம் கொடுப்பதன் காரணமாக அவற்றின் சமூக செயற்பாடுகளில் கட்டுப்பாடுகளை கொண்டுள்ளன. இப்போது எழுகின்ற முக்கிய கேள்வி என்னவென்றால் சமூக நோக்கத்தை நிறைவேற்றுவதும்

அதே நேரத்தில் நிதி நிலைத்தன்மையை பேணுவதும் ஆகும். இது ஆராய்ச்சியாளர்களையும் தொழில்முனைவோர்களையும் இந்த துறையில் மேலும் ஆராய தூண்டியுள்ளது (Brandsen & Karré, 2011; Sulphey & Alkahtani, 2017). இவ் ஆய்வுகளின் தீர்வாக சமூக முயற்சியாண்மை எண்ணக்கரு தோற்றம் பெற்றது. சமீப காலங்களில் வெற்றிகரமாக சமூக முயற்சியாண்மை மற்றும் முயற்சியாளர்களுக்கு உலகளாவியரீதியில் பல எடுத்துக்காட்டுக்கள் இருந்தாலும் இந்த விடயம் இன்னும் புதியதொன்றாகவே காணப்படுகின்றது.

அசோகா சர்வதேச நிறுவனம் ஒரு சமூக முயற்சியாண்மை நிறுவனமாகும். இது 1980 ஆம் ஆண்டில் பில் டிரேடன் (Bill Drayton) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவரே சமூக முயற்ச்சியாண்மை என்ற எண்ணக்கருவை முதன்முறையாக அறிமுகப்படுத்தியவராவார். இன் நிறுவனம் உலகளாவிய சமூகப்பணிகளுக்கு நிதி வழங்குவதன் மூலம் சமூக தொழில்முனைவோரை ஊக்குவிப்பதை இலக்காக கொண்டுள்ளது. அதன் பின்னர் 1997 ஆம் ஆண்டில் ஜெட் எமர்சன் (Jed Emerson) மற்றும் ஸ்டீபன் தேக் (Stephen Theke) ஆகியோர் இந்த கருத்தை கல்வித்துறைக்கு கொண்டு சென்றனர். மைக்குரோ கிரெடிட் மூலம் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை உருவாக்க கிராமீன் வங்கியை தொடங்கியதற்காக 2006ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை முஹம்மது யூனுஸ் வென்றார். இதன் மூலம் சமூகமுயற்ச்சியாண்மை சிந்தனையொரு பரந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டது.

சமூக முயற்சியாண்மையென்பது ஒரு நிறுவனமாகும். அது தனியார் இலாபத்தினை உழைக்கும் நோக்குடன் மட்டுமன்றி நேர்மறையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் விளைவுகளை உருவாக்கும் நோக்குடனும் செயற்படுகின்றது. கெர்லின் (Kerlin, 2010) ஆய்வின்படி, சமூக முயற்சியாண்மைக்கு ஏராளமான வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவை வெவ்வேறு பிராந்திய வேறுபாடுகளை பிரதிபலிக்கின்றன. உதாரணமாக அமெரிக்காவின் சமூக முயற்சியாண்மை வருமானம் மற்றும் சமூக மாற்றத்துக்கான சந்தை அடிப்படையிலான அணுகுமுறை என குறித்துக் காட்டுகிறது. ஐரோப்பாவில் சமூக முயற்சியான்மை

என்பது கூட்டுறவு அல்லது வணிக நிறுவனங்களின் பாரம்பரியமான ஒன்றிணைந்த சமூகம் சார்ந்த நடவடிக்கையாக அமைந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்தில் சமூகமுயற்சியாண்மை என்பது முக்கியமான சமூக நோக்கங்களுடன் கூடிய ஒரு வணிக மூலோபாயமாகும். இதன் இலாபத்தை பங்குதாரர்களுக்கு மற்றும் உரிமையாளருக்கு பகிரும் நோக்கினை விட வணிகத்தில் அல்லது சமூகத்தில் மறுமுதலீடு செய்யும் நோக்கிலேயே இயங்குகின்றது.

சில ஆய்வாளர்கள் சமூக முயற்ச்சியாண்மையின் ஆற்றல் மிக்க தன்மையினை இரண்டு முரண்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் மிக ஆழமாக ஆராய்கின்றனர். முதலாவதாக சமூக விளைவுகள் மற்றும் தாக்கங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதாவது சமூக செயற்பாட்டின் விளைவுகளை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இரண்டாவதாக சமூக வெளியீடுகளுடனான வருமானம் இலாபம் மற்றும் சந்தை பெறுமதியின் உருவாக்கத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். சமூக முயற்சியாண்மை கலப்பின மத்திய தரை அமைப்பினை (Hybrid middle Ground system) வெற்றிகரமாக முன்மொழிந்து உள்ளது. இவ் அமைப்பு இலாப நோக்கற்ற முகாமைத்துவ அணுகுமுறைகளுடன் கூடிய வியாபார மற்றும் வணிக நுட்பங்களை (business and commercial techniques) கொண்டுள்ளது (Mulloth, Horwitch & Hardi, 2013). பின்வரும் வரைபடம்.1 சமூக முயற்ச்சியாண்மை ஏனைய வணிகங்களில் இருந்து எவ்வாறு நகர்வடைகின்றது என்பதை விளக்குகின்றது.

**வரைபடம் 1: பல்வேறு வகையான நிறுவனங்கள்**




## சமூக முயற்சியாண்மை பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள்

தொழில்முனைவோரை பற்றிய உள்ளார்ந்த கவர்ச்சிகரமான, ஈர்க்கக்கூடிய மற்றும் ஏன், எப்படி செய்கின்றார்கள் என்ற நம்பமுடியாத கதைகள் உள்ளன. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் போன்ற சமூக தொழில்முனைவோர்களால் மக்கள் ஈர்க்கப்படுகின்றார்கள். ஏதோ காரணங்களுக்காக ஸ்டீவ் ஜாப்ஸ் போன்ற வணிக தொழில் முனைவோரை மக்கள் மிகவும் ஆச்சரியமான கண்ணோட்டத்தில் நோக்குகின்றனர். இவர்கள் சாதாரண நபர்களின் தெளிவான யோசனைக்கு எதிராக புதிய தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை உருவாக்கி வெற்றி பெற்றனர், இது அவர்களை சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கையை வியக்கதக்க முறையில் மேம்படுத்தியது (Gupta, Chauhan, Paul, & Jaiswal, 2020).

முயற்சியாண்மை என்ற சொல் ஒரு கலவையான பயன்களை கொண்டதொன்றாகும். நன்மையான பக்கத்தில், இது ஒரு வாய்ப்பினை சிறப்பாகவும், தனித்துவமான முறையிலும்

கையாளுவதற்கான திறனை உள்ளடக்கியுள்ளது. சமூக முயற்ச்சியாண்மை உலகில் தேவையான மாற்றங்களை உருவாக்குவதற்கான அல்லது கொண்டுவருவதற்கான இலக்கில் தனித்துவமான பார்வையுடன் பல்வேறு பரந்த கோணங்களில் சிந்தனைகளை ஒன்றினைக்கின்றது (Battilana & Lee, 2014). எதிர்மறையான பக்கத்தில், சமூக முயற்சியாண்மை செயற்பாடுகளிற்கும் அவற்றின் உண்மையான தாக்கம் வெளிப்படுவதற்கும் முன்னர் குறிப்பிட்டளவு கால அவகாசம் தேவைப்படுகின்றது.

சமூக முயற்சியாளர்கள் ஒரு தலைவர்கள். அவர்களுக்கு இரண்டு வகையான திறன்கள் தேவைப்படுகின்றன அல்லது கொண்டிருக்கின்றனர். அவையாவன வேறுபட்ட (மாறுபட்ட) சமூக பங்குதாரர்களுடன் தொடர்பினை பேணுவதற்கான திறன், மற்றும் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் திறன் (Smith, Gonin, & Besharov, 2013) என்பன ஆகும். சமூக முயற்சியாண்மை பற்றி வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சிலர் இதனை இலாபநோக்கற்ற அல்லது இலாபம் உழைக்கும் நிறுவனமாக குறிப்பிடுகின்றனர். மேலும் சிலர் சமூக முயற்சியாளர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளில் சமூகப் பொறுப்பை இணைத்துக்கொள்ளும் வணிக உரிமையாளர்கள் என குறிப்பிடுகின்றனர் (Smith et al., 2013; Pache, 2010).

## நவீன சமூகத்தின் பார்வையில் சமூக முயற்சியாண்மையின் நிலைப்பாடு

வணிக முயற்சியாளர்கள் வணிகச் செயற்பாடுகளில் சமூகத்தின் தேவை விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்துவதை போலவே சமூக முயற்சியாளர்கள் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வாக தங்கள் வணிகத்தின் செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்கின்றனர். சமூக முயற்சியாண்மை அமைப்புகளை மேம்படுத்துதல், புதிய அணுகுமுறைகளை வகுத்தல், மற்றவர்களால் கவனிக்கப்படாத அல்லது கைவிடப்பட்ட வாய்ப்புகளை பயன்படுத்துதல் மற்றும் சமுதாயத்தை சிறப்பாக மாற்றுவதற்கான தீர்வுகளை உருவாக்குதல் ஆகிய சமூக நல செயற்பாடுகள் மூலம் சமூக முயற்சியாண்மை

கட்டமைக்கப்படுகிறது. சமூக முயற்சியாண்மையினை பாரம்பரிய வணிக நிறுவனங்களின் தற்போதைய பாதையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு பல்வேறு அளவீடுகள் (Parameters) உதவுகின்றன (Ahiarakwem & Anis 2012).

## 1. தந்திரோபாயம்

சமூக முயற்சியாண்மையில் காணப்படும் சமூக இலக்கு, குறைவான செயற்பாட்டு மூலதனம் மற்றும் சந்தைசார் நிலை காரணமாக இது போட்டித் தன்மையான தந்திரோபாயத்தை காட்டிலும் கூட்டிணைநத் தந்திரோபாயத்தை (Co-operative strategy) பின்பற்றுகின்றது.

## 2. நிதியீட்டல்

வணிக நிறுவனங்கள் தனது நிதியீட்டல் நடவடிக்கைகளை சாதாரணப்பங்குகளை விநியோகிப்பதன் மூலமும் முன்னுரிமைப்பங்கு விலை விநியோகிப்பதன் மூலமும், கடன் முறிகள் மற்றும் குறுகியகால கடன்களின் மூலமும் நிவர்த்தி செய்கின்றன. மேற்குறிப்பிட்ட மூலாதாரங்களின் மூலம் இலாப நோக்கிலான சமூக முயற்சியாண்மை நிதியினை திரட்ட முடியும் மற்றும் இலாப நோக்கமற்ற சமூக முயற்சியாண்மை நிறுவனங்களும் கடனினைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் அல்லது நன்கொடையினை ஏற்பதன் மூலமும் மற்றும் வியாபாரம் அல்லது வாடகை போன்றவற்றினூடாகவும் நிதியினை பெறமுடியும். ஆகவே இலாபநோக்கிலான மற்றும் இலாபநோக்கற்ற சமூக அமைப்புகளுக்கு இடையிலான நிதியீட்டலில் காணப்படும் வேறுபாடு முதலீட்டாளர்களுக்கும் நன்கொடையாளருக்கும் இடையிலான தனித்தன்மையில் உள்ளது.

## 3. சந்தை

வணிக முயற்சியாளர்கள் சந்தைப்படுத்தல் சூழலில் செயற்படுகின்றனர். அங்கு சந்தை விலையிலும் பொருட்கள், சேவைகளின் தரத்திலும் கேள்வி மற்றும் நிரம்பல் மறைமுகமாக தாக்கம் செலுத்துகின்றது. இதற்கு மாறாக, சமூக முயற்சியாண்மை சந்தைப்படுத்தல் சூழலில் பொதுவாக செலவுகள் வருவாயால் முழுமையாக ஈடுகட்டப்படுவதில்லை.

## 4. உரிமைத்துவம் மற்றும் நிர்வாகம்

வணிக முயற்சியாண்மை நிறுவனங்கள் அதன் உரிமையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் பொறுப்பான இயக்குனர் குழுவினால் நிர்வகிக்கப்படுகின்றது. இலாப நோக்கமற்ற சமூக முயற்சியாண்மைகள் வேறுபட்ட நிர்வாக கட்டமைப்பினை கொண்டுள்ளது. அவர்கள் தங்களின் நிறுவனத்தில் ஒரு பகுதியை இலாப நோக்கில் செயற்படுத்த விரும்பினால், வணிக நிறுவன சபையினால் (Business Enterprise Board) நிர்வகிக்கப்படுமாறு துணை நிறுவனமொன்றை (Subsidiary Organization) அவர்கள் நிறுவலாம்.

## 5. சந்தை தோல்வி

சமூக நோக்கிலான நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு பின்புலத்தில் ஒரு கோட்பாடு காணப்படுகின்றது. இக்கோட்பாடானது சமூக சந்தைத் தோல்வியினாலேயே சமூக நிறுவனங்கள் உருவாக்கம் பெறுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக, வணிகச்சந்தை சக்திகள் (Market forces) சமூக தேவைகளை பூர்த்தி செய்வதில்லை. இவை சமூக தேவைகளுக்கு நிதியினை ஒதுக்கும் செயற்பாட்டை குறைந்த மட்டத்தில் கொண்டிருந்தது. வணிக முயற்சியாளரின் சமூக சேவைகள் குறித்த சிக்கல்கள் சமூக முயற்சியாளருக்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

## 6. இலக்கு

சமூக முயற்சியாளர்களின் இன்றியமையாத நோக்கம் பொது நலனுக்காக சமூக பெறுமதியினை (Social value) உருவாக்குவதாகும். அதே நேரத்தில் வணிகரீதியிலான முயற்சியாளர்கள் தனியார் இலாபத்தின் விளைவாக இலாபகரமான செயற்பாடுகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளனர். இவற்றுக்கிடையிலான வேறுபாடு மிகவும் அதிகமாக உள்ளது. வணிக முயற்சியாண்மையில், புதிய மற்றும் தரமான பொருட்கள் சேவைகளை வழங்குவதன் வாயிலாகவும் வேலைவாய்ப்புகளை வழங்குவதனூடாகவும் சமூகத்தில் மாற்றத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துகின்றனர். சமூக முயற்சியாளர்கள் சமூக பிரச்சினைகளுக்கான தீர்வினை

வணிகச் செயற்பாடுகள் மூலம் வழங்குவதன் ஊடாக குறிப்பிடத்தக்க அளவு வணிக சூழலின் தாக்கம் செலுத்துகின்றனர்.

7. செயற்றிறன் மதிப்பீடு

வணிக முயற்சியாளர்கள் அவர்களின் செயற்றிறன் மதிப்பீட்டு அளவீடுகளாக சிலவற்றை பயன்படுத்துகின்றனர். அவையாவன, கண்ணுக்கு புலப்பட கூடியவற்றை கணக்கிடல், எண்ணிக்கையிலான செயற்றிறன் அளவீடுகள் (Qualified measures of performance) உதாரணமாக நிதியியல் குறிகாட்டிகள், சந்தை பங்கு, வாடிக்கையாளர் திருப்தி, மற்றும் தரம். சமூக நோக்கினை இலக்காகக் கொண்ட சமூக முயற்சியாண்மை செயற்பாடுகளை மதிப்பீடு செய்வது வணிக முயற்சியாண்மையை காட்டிலும் சவாலான செயலாக உள்ளது. மேலும், சமூக தொழில்முனைவோர் நிறுவனம் பொறுப்புக்கூறக்கூடிய பல்வேறு நிதி மற்றும் நிதி அல்லாத பங்குதாரர்கள் அதிகளவிலும் வேறுபட்டதாகவும் இருப்பதால் இவர்களுடனான உறவினை பேணுவதில் அதிக சிக்கல்களை எதிர்நோக்குகின்றது.

## சமூக முயற்சியாண்மையை வடிவமைத்தல்

வணிக மாதிரிகள் (Business models) வணிகங்களுக்கு பயனுள்ளதான பாதைகளை உருவாக்குகின்றன மற்றும் இது வணிக தீர்மானங்களை எடுப்பவர்களுக்கு வணிகத்தில் போட்டி அனுகூலங்களை உருவாக்குவதற்கான தகவல்களை சேகரிக்கவும், சூழ்நிலைகளை பகுப்பாய்வு செய்யவும், தெளிவான தீர்மானங்களை எடுக்கவும் ஒரு சிறந்த கருவியாக காணப்படுகின்றது. ஆயினும்கூட அதிக போட்டி மற்றும் குறைந்த சந்தை பங்கை கொண்ட பாரம்பரிய வணிகங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன. வணிக மாதிரி புத்தகத்தில் (Business model innovation) செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக பின்வருவனவற்றை கூறமுடியும் (Afuah, 2014). அவையாவன தொழில்நுட்ப அழுத்தம், சந்தை கேள்வி, போட்டியாளரின் அழுத்தம், உள்வாரி தீர்மானம் எடுப்பவர்களின் செல்வாக்கு. ஆகவே ஒரு காரணியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முழு

வணிக மாதிரி உருவாக்கத்தை விவரிக்க முடியாது. தற்போது மாறி வரும் சூழலில் ஒரு வணிகத்துறை இலாபகரமானதாக இருக்க மாறுபட்ட வணிக மாதிரிகள் அத்தியாவசியமாகும். வணிக மாதிரி புத்தாக்கங்களின் மூலம் முக்கிய சொத்துக்கள், திறன்கள் மற்றும் வணிக உறவுகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

லிண்டர் மற்றும் கான்ட்ரல் (Linder & Cantrel) என்பவர்களால் உருவாக்கப்பட்ட நான்கு வணிக மாதிரிகள் பின்வருமாறு.

1. உணர்தல் மாதிரி (Realization model)

   நிறுவனங்கள் தங்களிடம் தற்போது காணப்படுகின்ற வணிக மாதிரியின் வினைத்திறனான செயற்பாடுகளை முழுமையாக பயன்படுத்துகின்றனர். மற்றும் தற்போதைய செயற்பாட்டு யுக்தியை கொண்டு வருவாயினை அதிகரிக்கின்றனர்.

2. புதுப்பித்தல் மாதிரி (Renewal model)

   நிறுவனங்கள் தங்களின் பொருட்கள் மற்றும் சேவை தளங்கள் (Platform), வியாபாரக் குறி, மற்றும் செலவு கட்டமைப்பு போன்றவற்றை புதுப்பிக்கின்றனர். இதனால் விலை/பெறுமதி (Price/Value) மாற்றம் அடைகின்றது.

3. விரிந்த மாதிரி (Extension model)

   வணிகங்கள் அதன் வர்த்தக நடவடிக்கைகளை பல்வேறு வழிகளில் பெருக்கிச் செல்லும் அவையாவன, புதிய சந்தைகள், பெறுமதிச்சங்கிலி செயற்பாடுகள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவை வரிசைகள்.

4. நீண்ட தூர பயண மாதிரி (Journey model)

   நிறுவனங்கள் ஒரு புதிய செயற்பாட்டு/இயக்க மாதிரியை இலக்காகக் கொண்டு நகர்கின்றது. இதில் பயணத்தை நிறுத்தவோ அதிலிருந்து திரும்பவோ மாட்டாது.

சமூக முயற்சியாண்மையில் முதல் இலக்காக சமூக நலன் காணப்படுவதால் இது பாரம்பரிய வணிகத்துடன் ஒப்பிடுகையில் வேறுபட்டதாக உள்ளது.

ஒரு புதிய வணிக மாதிரியை தேர்ந்தெடுப்பதற்கு சமூக முயற்சியாண்மையின் ஊந்துதல்கள் சமூகத்தில் காணப்படுகின்ற உள்ளுணர்வு சார்ந்த கேள்விகளில் தங்கியுள்ளது. சமூக முயற்சியாண்மை அதன் வணிக மாதிரி புத்தாக்கத்தின் போது சமூக நலனை பேணுவதிலும், நிலைபேறான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதிலும் சமநிலையைப் பேணுவதினை பிரதான இலக்காக கொண்டுள்ளது. பொருளாதார திறனை/நலனை கருத்திற்கொள்ளாமல் சமூக நலனை மாத்திரம் கருத்தில் கொண்டால் இது நீண்டகால வளர்ச்சியினை அடைய முடியாது மாறாக, பொருளாதார நலனை அதிகரிப்பதினை முதன்மை நோக்கமாக கொண்டு சமூக நலனை புறக்கணித்தால் அது பாரம்பரிய வணிக நடவடிக்கைகளை போன்றதாகிவிடும்.

வணிக நோக்கம் மற்றும் குறிக்கோள்களை உச்ச அளவில் அடைந்து கொள்வதற்கு பொருளாதார வாய்ப்புகளையும் சந்தை வாய்ப்புகளையும் நிலைத்து நிற்கக் கூடிய சமூக நலன் சார்ந்து தெரிவு செய்வதன் மூலம் சமூக முயற்சியாண்மை தோற்றம் பெறுகிறது. சமூக மற்றும் முகாமைத்துவ யுக்திகளுக்கிடையே சமநிலையினைப் பேணுவதன் மூலம் வணிகம் நிலைபேறான அபிவிருத்தியினை அடைந்து வெற்றியினை உறுதி செய்ய முடியும். இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**வரைபடம் 2: வணிக வகைகள் மற்றும் சமூக மற்றும் நிர்வாக தர்க்கத்திற்கு இடையிலான சமநிலை**




*Source: Gandhi and Raina (2018)*

## சமூக முயற்சியாண்மையின் தற்கால போக்குகள்

சமூக தொழில்முனைவோரின் இரண்டு ஒத்த மற்றும் சாத்தியமான முரண்பாடான கருத்துக்களை அடையாளம் காணமுடியும். ஒரு வணிக நிறுவனத்தின் சமூக நடவடிக்கை சார்ந்த பெறுபேற்றில், சமூக வெளியீடு, சமூக மாற்றம் மற்றும் சமூக தாக்கம் போன்ற காரணிகள் முன்னிலை பெறுகின்றன. சமூக தொழில்முனைவோர் நிறுவனத்தின் வருவாய் ஈட்டும் பகுதியில் முதலீடு செய்வதற்கும் மற்றும் சமூக விளைவுகளை அடைவதற்கும் பொறுப்பான பகுதியில் முதலீடு செய்வதற்கும் இடையே சரியான சமநிலையைப் பேண வேண்டும். இத்தகைய வெளிப்பாடான முரண்பாடுகள் மற்றும் சிக்கல்களை எதிர்கொண்டு ஒரு சமூக நிறுவனத்தினை நடத்துவதற்கான சவாலுக்கு வணிக முயற்சியாளர்கள் அவர்களின் கவனத்தை திருப்ப வேண்டும். எனவே சமூக முயற்சியாளருக்கு ஏற்றவகையில் பொதுவான

கட்டமைப்பும் தன்மையும் தேவைப்படுகின்றது (Gandhi & Raina, 2018). எனவே அவையாவன:

- அபிவிருத்தி தொடர்பான தந்திரோபாயம்

  சமூக முயற்சியாண்மை செயற்பாட்டில் அனைவருக்கும் ஒரு பொதுவான தளத்தினை உருவாக்குவதில் அபிவிருத்தி தந்திரோபாயம் முன்னிற்கின்றது. வருவாய் அதிகரிப்பினை நோக்காகக் கொண்ட வணிகம் அபிவிருத்தி பொறிமுறைகளை போன்றல்லாது, சமூக முயற்சியாண்மையின் அபிவிருத்தியானது சமூக நலனை அடிப்படையாக கொண்டு செயற்படும்.

- நிதியிடல்

  சமூக முயற்சியாண்மையில் நிதியிடல் இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. சிறு முயற்சியாளர்கள் அவர்களது சொந்த மூலதனத்தை மட்டும் (வெளியக முதலீடு, கடன் அற்ற நிலை) அடிப்படையாகக் கொண்டு ஒரு முயற்சியாண்மையை ஆரம்பிக்கும் நிலையினை பூட்ஸ்ட்ராப்பிங் (Bootstrap) என்பர். இது சிறு வணிகத்தின் நிதியீட்டல் பொறிமுறைகளில் ஒன்றாகும். இதில் நிதியீட்டலினை பாரம்பரிய முறைகளான வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் கடன்களின் மூலம் அல்லாது புத்தாக்கச் செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டும் கிடைக்கத்தக்க வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதன் மூலமாகவும் தங்களின் நிதியீட்டல் நடவடிக்கைகளை சமூக முயற்சியாளர்கள் மேற்கொள்கின்றனர். நிதியீட்டலுக்கான மற்றுமொரு மூலாதாரமாக துணிகர முதலீட்டாளர்கள் (Venture capitalists) காணப்படுகின்றனர். தற்போது, துணிகர வணிகத்தினால் ஒரு சிறிய தொடக்க வணிகத்திற்கும் அல்லது சமூக அமைப்புகளுக்கும் அதன் தரத்தினை கருத்திற்கொள்ளாமல், முயற்சியாண்மையின் தொழிற்பாடுகள், வளர்ச்சி செயற்பாடுகளில் ஒன்றிணையாது, பேரம் பேசுதல் மற்றும் கண்காணித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாது நன்கொடையாளர்களாக நிதியினை வழங்குதல். இங்கு துணிகர முயற்சியாளர்கள் சமூக முயற்சியாண்மையின் மூலம்

பெறும் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செய்யப்படாது தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டை புரிகின்றனர்.

- அணி (Team)

  சமூக முயற்சியாளர்கள் தங்கள் குறிக்கோள்களைப் பற்றி மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். சில சந்தர்ப்பங்களில் முயற்சியாளர்கள் அவர்களின் நிறுவன செயற்பாடுகளில் அத்துறை சார்ந்த அறிவினைக் கொண்டவர்களாக அல்லது அத்துறை சார்ந்த அனுபவம் அறிவு அற்றவர்களாக காணப்படலாம் ஆனால் மாற்றத்திற்கான விருப்பம் அனைவரிடமும் பொதுவானதொன்றாக காணப்படும். பாரம்பரிய வணிகத்தில் குறிப்பிட்ட துறை சார்ந்த அனுபவம், அறிவினை கொண்டவர்கள் மட்டுமே அத்துறையில் முயற்சியாளர்களாக காணப்பட்டனர். தற்போது பல துறைகளை சார்ந்தவர்கள் ஒரு முயற்சியாண்மையை கட்டமைப்பதன் மூலம் குறித்த முயற்சியாண்மையில் பல்வேறுபட்ட வணிகச் செயற்பாடுகளில் வெற்றியினை பெறுகின்றனர்.

சமூக முயற்சியாளர்களினால் செயற்படுத்தப்படும் நடைமுறைகளின் நிலைபேறான அபிவிருத்தி வேறுபட்ட படிகளின் அல்லது கோணங்களின் வழியாக இடம்பெறும், அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு காணப்படுவதால் புதிய சிந்தனைகள் எல்லையற்ற வகையில் உருவாகும். இங்கு புதிய கருத்துக்களை அல்லது சிந்தனைகளை சிறப்பாக பயன்படுத்தவும் அதனை குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்காக பட்டை தீட்டவும் தடைகள் காணப்படுவதில்லை. இந்த அபிவிருத்தி செய்முறைகள் வணிக அபிவிருத்தி செய்முறைகளிலிருந்து கணிசமாக வேறுபடுகின்றன மற்றும் சமூக முயற்சியாண்மையில் முயற்சியாளர்கள் வணிக அபிவிருத்தி மாதிரியை பயன்படுத்துவதினை தவிர்க்கின்றனர்.

Gandhi and Raina (2018) தனது ஆய்வில் தற்போதைய சமூக முயற்சியாண்மைகளின் வளர்ச்சி கட்டங்களை/ படிகளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. தூரநோக்கு மற்றும் நோக்கை மதிப்பாய்வு செய்தல்.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு தூரநோக்கு மற்றும் நோக்கம் காணப்படும். அது நிறுவனத்தை அதன் நீண்டகால இலக்கு மற்றும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு செயற்பட உதவும். எனவே சமூக முயற்சியாண்மையின் முக்கிய நோக்கம் சமூக நலனாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு நிறுவனம் செயற்படுவதை உறுதி செய்ய முடியும் (Guclu, Dees, & Anderson, 2002).

2. நிறுவனம் இடரினை ஏற்றுக்கொள்ளும் தன்மையினை உருவாக்குதல் (Establishing the risk willingness of the organization)

சில பங்குதாரர்கள் (Stakeholders) ஆபத்தான முதலீடுகளை விரும்புவதில்லை மற்றும் சிலர் ஆபத்தான முயற்சிகளில்/முதலீடுகளில் தைரியமாக ஈடுபடுகின்றனர். வணிக நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது சமூக முயற்சியாண்மைகள் அதிக ஆபத்தான முதலீடுகளில் ஈடுபடுகின்றன ஏனெனில் சமூக முதலீடுகள் நிதிசார் வருவாயினை ஏற்படுத்தாது. எனவே இத்தகைய சமூக முதலீடுகளின் மூலம் ஏற்படும் ஆபத்தினை ஏற்கக்கூடியதாக சமூக நிறுவனம் இருக்க வேண்டும்.

3. வணிகத்தின் தூரநோக்குக்கான வெளியீடுகளை உருவாக்குதல்.

இங்கு நிறுவனம் தூரநோக்குக்கினை அடிப்படையாகக் கொண்டு முதன்மையான முடிவுகளை அடைவதை இலக்கு வைத்துச் செயற்படும். இந்த கட்டத்தின் படிமுறையில் இறுதி பயனாளர்களும் இணைத்துக்கொள்ளப்படுவர், இதனால் அவர்களின் தேவையினை நன்கு புரிந்து கொள்ளவும், தூரநோக்கின் முடிவுகளை மாற்றியமைக்கவும் முடியும்.

4. புதிய கருத்துக்களை உருவாக்கலும் அதனை வெளிப்படுத்தலும்.

பணிக்கூற்றினை(நோக்கத்தினை) மறுசீரமைப்பதன் மூலம் புதிய கருத்துக்கள் உருவாகின்றன. அவை அடையாளங்காணப்பட்ட சமூக தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டு தெளிவுபடுத்தப்படுகின்றன அல்லது

நிவர்த்தி செய்யப்படாத சமூக தேவைக்கான சந்தை இடைவெளியினை சமூகத்தில் கண்டறிகின்றனர்.

5. அடைகாத்தல் (Incubation)

புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட்டு அது தெளிவுபடுத்தப்பட்டு அவை சிறிய பகுதிகளாக ஆரம்பிக்கப்படுகின்றன, ஏனெனில் இந்தக் கட்டத்தில் துணிகர முதலீட்டாளர்களின் தலையீடு காணப்படுவதில்லை.

6. வணிகத்திட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட கட்டங்கள் பங்குதாரர்களால் வெற்றிகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் சமூக முயற்சியாளர்கள் வணிக திட்டத்தை உருவாக்க முடியும். இந்த கட்டத்தில், முயற்சியாளர்கள் முழு சந்தை செயற்படுத்தலுக்கு தயாராகி வருகின்றனர்.

7. பொறுப்புணர்வுடன் முழுமையாக நடைமுறைப்படுத்தல்

இக்கட்டத்தில் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் இதன் துணை நடவடிக்கைகள் இடம்பெறும்.

சமூக முயற்சியாண்மை ஆனது தூரநோக்கு மற்றும் நோக்கினை மதிப்பாய்வு செய்து இடரை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவினை அடையாளம் காண்பதன் மூலம் தமது நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் நோக்கத்தினை உருவாக்கிக்கொள்வது ஊடாக புதிய கருத்துக்களை உருவாக்கி அதனை மேம்படுத்தி வணிக திட்டத்தினூடாக பொறுப்புணர்வுடன் கூடிய சமூக பிரச்சினைகளுக்கு தீர்வான சமூக முயற்சியாண்மை கட்டமைத்துக் கொள்ள முடியும் இதனை கட்டமைப்பதற்கு இப் படிமுறைகள் உதவுகின்றன. இதனை வரைபடம் 3 இன் மூலம் விவரிக்கலாம்.

காபன் உமிழ்வை இழிவு மட்டத்தில் பேணுகின்ற புதிய முயற்சிகளின் தோற்றமும் சூழலுக்கு நேசமான பசுமை உற்பத்திகளின் அதிகரிப்பும் புதுப்பிக்கக்கூடிய வளங்களின் அதிகரித்த பயன்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படும் வணிக வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு சமூக முயற்சியாண்மையின் அபிவிருத்தி படிமுறைகள் பாரிய

பங்காற்றுகிறது. இதனூடாக சமூக முயற்சியாண்மையின் வளர்ச்சிக் கட்டத்தின் இறுதியில் கட்டமைக்கப்படுகின்றன புதிய சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட சமூக முயற்சியாண்மையானது நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது.

**வரைபடம் 3: சமூக முயற்சியாண்மையின் வளர்ச்சி கட்டங்கள்**




*Source: Gandhi and Raina (2018)*

## முடிவுரை

வணிக முயற்சியாண்மை தமது வணிகக் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக சமூக பொறுப்புகளை வெளிப்படுத்தி வருகின்றது இருப்பினும் அவர்களின் பிரதான நோக்கு இலாபமே ஆகும். ஆனால் சமூக முயற்சியாண்மையானது சமூக பிரச்சினைகளுக்கு தீர்வாக வணிக முயற்சிகளை கட்டமைத்து அதன்மூலம் இலாபத்தையும் எட்டிக் கொண்டு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு நிலைபேறான அபிவிருத்தியை பரிசாக வழங்குகின்றது.

## உசாத்துணை


*Ahiarakwem, K., & Anis, H., 2012. A business Approach to Social Entrepreneurship. In International Technology Management Conference (pp. 45-54). IEEE.*

*Afuah, A. (2014). Business model innovation: concepts, analysis, and cases. routledge.*

*Battilana, J., & Lee, M. (2014). Advancing research on hybrid organizing–Insights from the study of social enterprises. Academy of Management Annals, 8(1), 397-441.*

*Brandsen, T., & Karré, P. M. (2011). Hybrid organizations: No cause for concern?. International Journal of Public Administration, 34(13), 827-836.*

*Guclu, A., Dees, J. G., & Anderson, B. B., 2002. The process of social entrepreneurship: Creating opportunities worthy of serious pursuit. Center for the advancement of Social Entrepreneurship, 1, 1-15.*

*Gupta, P., Chauhan, S., Paul, J. and Jaiswal, M.P., 2020. Social entrepreneurship research: A review and future research agenda. Journal of Business Research, Vol. 15, p p. 12-14.*

*Kerlin, J. A. (2010). A comparative analysis of the global emergence of social enterprise. VOLUNTAS:*

*international journal of voluntary and nonprofit organizations, 21(2), 162-179.*

*Moizer, J. and Tracey, P., 2010. Strategy making in social enterprise: The role of resource allocation and its effects on organizational sustainability. Systems research and behavioral science, Vol. 27, No. 3, p p.252-266.*

*Mulloth, B., Horwitch, M., & Hardi, P. (2013, July). Achieving the hybrid middle ground in modern social entrepreneurship: A conceptual discussion with NYC-based clean technology enterprises as cases in point. In 2013 Proceedings of PICMET'13: Technology Management in the IT-Driven Services (PICMET) (pp. 921-927). IEEE.*

*Pache, A.C., 2010, the art of managing conflicting institutional logics: the case of social integration enterprises. In Academy of Management Proceedings, Vol. 17, p p. 1-6.*

*Partzsch, L. and Ziegler, R., 2011. Social entrepreneurs as change agents: a case study on power and authority in the water sector. International environmental agreements: politics, law and economics, Vol. 11, No. 1, p p.63-83.*

*Smith, W.K., Gonin, M. and Besharov, M.L., 2013. Managing social-business tensions: A review and research agenda for social enterprise. Business Ethics Quarterly, Vol. 23, No. 3, p p.407-442.*

*Sulphey, M.M. and Alkahtani, N., 2017. Economic security and sustainability through social entrepreneurship: the current Saudi scenario. Journal of security and sustainability issues, Vol. 6, No. 3, p p. 17-22.*

*Gandhi, T., & Raina, R. (2018). Social entrepreneurship: the need, relevance, facets and constraints. Journal of Global Entrepreneurship Research, 8(1), 9.*

## மேலதிக வாசிப்பு

*Austin, J., Stevenson, H., & Wei–Skillern, J. (2006). Social and commercial entrepreneurship: same, different, or both?. Entrepreneurship theory and practice, 30(1), 1-22.*

*Fraizer, L., & Madjidi, F. (2011). ICT and social entrepreneurship: Implications of change making for the future ICT workforce. ACM SIGITE Research in IT, 8(2), 3-10.*

*Li, Y. (2014, August). Business model innovation of social entrepreneurship firm: A case study of TerraCycle. In 2014 International Conference on Management Science & Engineering 21th Annual Conference Proceedings (pp. 507-514). IEEE.*

# சார்பு வருமானக் கருதுகோள்: ஓர் மீளாய்வு

**கணேசமூர்த்தி கஜேந்தினி**[4]

## அறிமுகம்

அண்மைய காலங்களில் ஜேம்ஸ் டியுசென்பெறியின் (James Duesenberry) சார்பு வருமான கருதுகோளின் முக்கியத்துவம் தொடர்பாக பல ஆய்வுகள் மீளாய்வு செய்து வருவதுடன் பல விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன. இக்கருதுகோளினுடைய உந்துதல் மற்றும் முன் கண்காணிப்புத் திறனை ஆதரிக்கும் வலுவான சான்றுகள் இருந்த போதிலும், இது நீண்ட காலத்திற்கு முன்பே நவீன பொருளாதார பாடப்புத்தகங்களில் முறையான முக்கியத்துவத்தினை (formal treatment) பெறுவதை நிறுத்திக் கொண்டது (Sanders, 2010). சார்பு வருமானக் கருதுகோள் என்பது விலைகள், வருமானம் மற்றும் சமூக நுகர்வு போன்றவற்றின் நுகர்வோர் தெரிவு தொழிற்பாடாகும். இதன் படி சமூக நுகர்வு, குறிப்பாக சமூகம் சார்ந்த பார்வையில் நுகர்வோன் தனது தெரிவினூடாக தனது தனிப்பட்ட அந்தஸ்தினை பெற முயல்கின்றான். இதன்படி Duesenberry இன் கருத்துருவாக்கம் ஏனைய முக்கிய நுகர்வு கோட்பாடுகளின் "தனிநபர் விருப்பங்கள் ஒன்றுக்கொன்று சார்ந்ததாக காணப்படுகின்றன, அதிலும் குறைந்தது அந்நபர் சார்ந்த சமூக அமைப்புடன் சார்ந்து காணப்படும்." என்ற எண்ணக்கருவுடன் சேர்ந்து முதன்மை பெறுகின்றது. இவர், வருமான நிலைக்கும் சேமிப்புக்கும் இடையிலான தொடர்பினை புரிந்து கொள்வதன் மூலம் சார்பு வருமான கருத்தாயவு பங்கினை முக்கியப்படுத்தினார். குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் வீட்டுத் துறையினரின் குறுக்குவெட்டு தரவுகளின்படி ஏனைய சமூக பொருளாதார காரணிகளின் கட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் சேமிப்பு விகிதம், வருமானத்துடன் சேர்த்து அதிகரித்துக் காணப்பட்டதினை Duesenberry கண்டறிந்தார். ஆயினும் ஐக்கிய

---

[4] விரிவுரையாளர், பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

அமெரிக்காவின் மொத்த காலத்தொடர் தரவுகளின் படி சேமிப்பு விகிதம் வருமானத்துடன் சேர்ந்து அதிகரிக்கவில்லை.

## சார்பு வருமானக் கருதுகோள்

கெயின்சின் நுகர்வுக் கோட்பாடு அனுபவரீதியான ஆய்வுகளுடன் பொருந்தாத காரணத்தினால் இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர், பல பொருளியலாளர்கள் அனுபவ ரீதியான தரவுகளைக் கொண்டு நுகர்வுக் கோட்பாட்டினை விருத்தி செய்ய முயற்சித்தார்கள். இவர்களில் டியுசென்பெறி (Duesenberry) என்ற பொருளியலாளர், 1949ம் ஆண்டு பிற்பகுதியில் நுகர்வுக் கோட்பாட்டினை விருத்தி செய்வதற்கு முதல் முதலில் முயன்றார். இதன் விளைவாக 1949 ஆம் ஆண்டிற்கான வருமானம் மற்றும் நுகர்வுக்கான தரவுகளைப் பயன்படுத்தி சார்பு வருமான நுகர்வுக் கோட்பாட்டினை முன்வைத்தார். இதுசார்பு வருமானக் கருதுகோள் எனவும் அழைக்கப்படும்.

இவ் சார்பு வருமானக் கருதுகோள் வீட்டுத்துறையினரின் நுகர்வு மட்டத்தினை, சம வருமானம் பெறும் குழுக்களுடன் அவர்களின் வருமானம் மற்றும் செலவு மட்டத்துடன் தொடர்புபடுத்துகிறது. அத்துடன் இக் கருதுகோள் நுகர்வுடன் தொடர்புடையதாக வீட்டுத்துறையினரின் போட்டிகரமான நுகர்வு நடத்தையினையும், மற்றவரைப் போல நுகர முயற்சி செய்யும் நுகர்வு நடத்தையினையும் முக்கியத்துவம் கொடுத்து விளக்குகின்றது.

சார்பு வருமான நுகர்வுக் கோட்பாட்டின்படி, வீட்டுத்துறையினர் குறைந்த வருமானம் பெறுபவர்களாக இருந்தாலும் அவர்கள் வாழ்கின்ற சமூகத்தில் உயர் வருமானம் பெறும் வீட்டுத்துறை சமூகம் காணப்படும் போது, அவர்களுக்கு இணையாக நுகர்வினை மேற்கொள்ளும் பொருட்டு கிடைக்கும் குறைந்தவருமானத்தில் பெரும் பகுதியினை உயர்வருமானம் பெறுபவர்களை விட அதிகமாக நுகர்விற்காக செலவிடுவார்கள். இவ்வாறு உயர் வருமானம் பெறும் வீட்டுத்துறை குழுக்களால் தூண்டப்பட்டு மேற்கொள்ளப்படும் நுகர்வாக காணப்படுவதனால் இதனை டியுசென்பெறியின் ‘செயல் விளைவு’ (Demonstration effect) எனக் குறிப்பிட்டார்.

சார்புவருமான கருதுகோளின்படி நுகர்வுச் செலவின்பகுதி, வீட்டுத்துறையினருடன் தொடர்புடையதான வருமான மட்டத்தினால் தீர்மானிக்கப்படும். அதாவது, வருமானத்தின் நுகர்விற்காக வீட்டுத்துறையினரால் செலவிடப்படும் பகுதியானதுநுகர்வு மட்டம், நுகர்வுக் கோலம் மற்றும் வீட்டுத்துறையினரின் அமைப்புஎன்பவற்றினால் தீர்மானிக்கப்படும்.

சார்பு வருமான நுகர்வுக்கோட்பாட்டினை பின்வரும் இயல்புகளினூடாக விளக்க முடியும். இதன் பொருட்டு குறைந்த வருமானம், உயர்வருமானம், சமமான வருமானம் பெறும் வெவ்வேறுபட்ட வீட்டுத்துறைகளில் x என்ற வீட்டுத்துறையினரை எடுத்து வெவ்வேறுபட்ட வருமானம் பெறும் ஏனைய வீட்டுத்துறையினரின் வருமானத்திற்கு ஏற்ப அமையும் நுகர்வின் நடத்தைக்கு ஏற்ப, x இனது நுகர்வு நடத்தை மாற்றத்தினை ஆராய்வு செய்வதன் மூலம் பின்வருமாறு பிரதான முடிவுகளை பெறமுடியும்.

- x உள்ளிட்ட வீட்டுத்துறையினா் அடங்கிய வருமான குழுவின் வருமானம் சமவிகிதத்தினால் அதிகரிக்கும் போது அவ் வீட்டுத்துறைனரின் நுகர்வு மட்டமும் அதே வீதத்தினால் அதிகரிக்கும். மாறாக அவ்வருமானக் குழுவின் வருமானம் வீழ்ச்சியடையும் போது x வீட்டுத்துறை உள்ளடங்களாக அவர்களது நுகர்வு மட்டமும் அதே அளவினால் வீழ்ச்சியடையும். அதாவது வருமானம் குறிப்பிட்ட சமமான அளவினால் மாற்றமடையும் போது $\Delta C/\Delta Y$ ஆனது எல்லா வீட்டுத்துறையினருக்கும் சமமாக காணப்படும்.
- குறித்த x வீட்டுத்துறையின் சார்பு வருமானம் சம அளவில் மாறாமல் இருக்கும் போது, இவ்வீட்டுத்துறையின் முழுவருமானம் அதிகரித்தால் x இனது மெய் நுகர்வு மற்றும் சேமிப்பும் உயர்வடையும். ஆனால் $\Delta C/\Delta Y$, வருமான உயர்விற்கு முதல் காணப்பட்டது போலவே $\Delta C/\Delta Y$ சமமாக மாறாமல் காணப்படும்.
- வீட்டுத்துறை x இனது வருமானம் மாறாத நிலையில் சமஅளவிலான சார்பு வருமானத்துடன் காணப்படும் போது,

ஏனைய வீட்டுத்துறையினரின் வருமானம் அதிகரித்தால் x இன் $\Delta C/\Delta Y$, மாறாத வருமானத்துடன் அதிகரிக்கும்.

- வீட்டுத்துறை x, குறைந்த வருமானக் குழுவிலிருந்து உயர் வருமானக் குழுவிற்கு முன்னேற்றம் அடையும் போது x இனது $\Delta C/\Delta Y$ குறைவடையும்.

மேற்கூறப்பட்ட இயல்புகளில் x குறைந்த வருமானக் குழுவிலிருந்து உயர் வருமானக் குழுவிற்கு முன்னேற்றம் அடையும் போது $\Delta C/\Delta Y$ குறைவடையும் என்ற கருத்து கெயின்சின் உண்மை வருமான கருதுகோளினை போன்றமைந்து கெயின்சின் நுகர்வு கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கின்றது. ஆயினும் ஏனைய இயல்புகள் கெயின்சின் நுகர்வு கோட்பாட்டிலிருந்து முற்றுமுழுதாக விலகி மாறுபட்டு நிற்கின்றது.

மேலும், முழு வருமானக் கருதுகோள் மற்றும் சார்பு வருமானக் கருதுகோள் இரண்டும் வீட்டுத்துறையினரின் வருமான விகிதம் அதிகரிக்கும் போது, இவ் அதிகரிப்பானது அவ் வீட்டுத்துறையினரின் நுகர்வு விகிதத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் அதாவது வீட்டுத்துறையினரின் சார்பு வருமானம் சமமாக காணப்படும் போது, முழுவருமானத்தில் செலவிடத்தக்க வருமானத்தின் பங்கு அதிகரித்தால் அவர்களின் நுகர்வு மேலும் அதிகரிக்கும். இவ் அதிகரிப்பின் போது சராசரி நுகர்வு நாட்டம் (APC) மாறாமல் காணப்படும், அதேவேளை எல்லை நுகர்வு நாட்டத்திற்கு (MPC) சமமாகக் காணப்படும். எவ்வாறாயினும் வீட்டுத்துறையினரின் வருமானம் குறைவடையும் போது நுகர்வில் எவ்வாறான மாற்றம் ஏற்படும் என்பது தொடர்பான விளக்கத்தில் முழு வருமான நுகர்வுக் கோட்பாட்டின் முடிவிலிருந்து சார்பு வருமான நுகர்வு கோட்பாட்டின் விளக்கம் மாறுபட்டு நிற்கின்றது.

முழு வருமானக் கருதுகோளின் படி, வீட்டுத்துறையினரின் வருமானம் குறைவடையும் போது, அவர்களின் நுகர்வும் அதே விகித்தில் குறைவடையும் என விளக்கும் அதேவேளை சார்பு வருமானக் கருதுகோளானது வீட்டுத்துறையினரின் வருமானம் குறைவடையும் போது அதே விகிதத்தில் நுகர்வு குறைவடையாது என வாதிடுகிறது. இதற்கு ரெட்சட் விளைவே (ratchet effect)

காரணம் எனவும் டுயுசென்பெறி (Duesenberry) விளக்கமளிக்கின்றார்.

## ரெட்சட் விளைவு

வருமானம் குறைவடையும் போது நுகர்வு வீழ்ச்சியடையும் நிலையில், அதற்கு எதிராக நுகர்வு குறைவடையாமல் வீட்டுத்துறையினர் செயற்படுவார்கள் என்பதனை விளக்குவதற்காக ரெட்சட் விளைவு முன்வைக்கப்படுகிறது. டுயுசென்பெறியின் கருத்துப்படி மெய் வருமானம் அதிகரிக்கும் போது உண்மை நுகர்வும் அதிகரிக்கும், ஆனால் மெய்வருமானம் குறைவடையும் போது அவ்வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியின் அளவிற்கு ஏற்ப நுகர்வினையும் குறைவடையச் செய்ய மாட்டார்கள். இதன்படி வீட்டுத்துறையினர் நீண்டகாலத்தில் நிலையான வாழ்க்கைத்தரத்தினை பேணுவதுடன், இதன் விளைவாக வருமானம் வீழ்ச்சியடையும் போது நுகர்வு வருமானம் வீழ்ச்சியடையும் அளவினை விட மிகக் குறைந்தளவே குறைவடையும். இதனால் வருமானம் வீழ்ச்சியடையும் அளவிற்கு சமமாக நுகர்வு வீழ்ச்சியடையாது என்ற முடிவிற்கு சார்பாக ரெட்சட் விளைவு வாதிடுகின்றது. மேலும் வருமானம் வீழ்ச்சியடையும் அளவிற்கு நுகர்வும் வீழ்ச்சியடையாததனால் சராசரி நுகர்வு நாட்டம் (APC) உயர்வாகக் காணப்படும் அதேவேளை, எல்லை நுகர்வு நாட்டம் (MPC) வீழ்ச்சியடையும் என ரெட்சட் விளைவு விளக்குகின்றது.

சான்றாக, வீட்டுத்துறை x இனது வருமானம் ரூபா 2000 இல் இருந்து ரூபா 2100 ஆக அதிகரிக்கும் போது, x இனது நுகர்வுக்கான செலவும் ரூபா 1600 இல் இருந்து ரூபா 1680 ஆக அதிகரிக்கும். இதன் விளைவாக, எல்லை நுகர்வு நாட்டம் மற்றும் சராசரி நுகர்வு நாட்டம் என்பன சமமாகக் காணப்படும். இதனை பின்வருமாறு நிறுவ முடியும்.

$$MPC = \Delta C/\Delta Y$$

$$160/200 = 0.8$$

$$APC = C/Y$$

1600/2000 = 0.8

MPC = APC =0.8

மாறாக, வீட்டுத்துறை x இனது வருமானம் ரூபா 2000 இல் இருந்து ரூபா 1900 ஆக குறைவடையும் போது, x இனது நுகர்வுக்கான செலவு அதே அளவினால் குறைவடையாமல், ரூபா 1550 இல் இருந்து ரூபா 1500 ஆக மட்டுமே குறைவடையும். இதன் விளைவாக, சராசரி நுகர்வு நாட்டம் அதிகரித்தும், எல்லை நுகர்வு நாட்டம் குறைவடைந்தும் காணப்படும்.

MPC = ΔC/ΔY

-50/-100 = 0.5

APC = C/Y

1500/1900 = 0.79

ஆகவே, APC>MPC

இவர் தனது கருதுகோளை விளக்க ரெட்சட் விளைவுடன், செயல் விளைவினையும் (Demonstration effect) விளக்குகிறார். செயல் விளைவு என்பது, ஒரு தனிநபர் குறித்த சமூகத்தில் காணப்படும் ஏனைய குடும்பங்களைப்போல் அல்லது, அருகாமையிலுள்ள மற்றவர்களைப்போல் நுகர்வினை மேற்கொள்ளும் பொருட்டு, அவர்களைப்போல் பிரதிசெய்து நுகர்வு மட்டத்தினைப் பேணுவார். இவ்விளைவினுள் இரண்டு பிரதான அம்சங்கள் காணப்படுகின்றது. முதலாவது, சராசரி நுகர்வு நாட்டம் குறைவடையமாட்டாது, ஏனெனில் அனைத்துக் குடும்பங்கினதும் வருமானம் சம விகிதத்தில் அதிகரிப்பும்போது, சார்பு வருமானத்தினுடைய பங்கீடு மாற்றமடையாமல் காணப்படுவனால், நுகர்வுச் செலவு விகிதம் சார்பு வருமானத்தில் தங்கியிருப்பதுடன் மாற்றமடையாமலும் காணப்படும். இரண்டாவதாக, செயல் விளைவின் காரணமாக, குறித்த சமூகத்தில் தனிநபருடைய வருமானம் சார்பளவில் குறைவாகக் காணப்படுமெனக் கருதப்பட்டால், தனிநபருடைய குடும்ப நுகர்வுக்காக செலவிடப்படும் வருமானம், அவருடைய

வருமானத்தில் அதிகமாகக் காணப்படும். மாறாக, குறித்த குடும்பம் வாழும் சமூகத்தில் வருமானம் சார்பளவில் அதிகமாகக் காணப்படுமெனில், அக்குடும்ப நுகர்வுக்காக செலவிடப்படும் வருமானம், சார்பளவில் குறைவாகாகக் காணப்படும், ஏனெனில் இங்கு செயல் விளைவுகாணப்படமாட்டாது.

சார்பு வருமானக் கருதுகோளிற்கிணங்க சமூகத்தின் வருமானம் அதிகரிக்கும் போது, சார்பு வருமான பங்கீடு மாற்றமடையாமல் காணப்படும், இது மொத்த நுகர்வுத் தொழிற்பாட்டுடன் நகர்வடையமாட்டாது, ஆனால் இதனுடைய நுகர்வுத் தொழிற்பாடு மேல்நோக்கி நகர்வடையும். இதனை வரைபடம் மூலமாக விளங்கிக்கொள்ள முடியும்.




வரைபடம் 1: வருமானம் அதிகரிக்கும் போது சார்பு வருமானக் கருதுகோள் (Ahuja, 2002)

சிலவேளை A எனும் குடும்பம் $Y_1$ எனும் வருமான மட்டத்தினைக் கொண்டிருக்கும் போது, அவர்களின் நுகர்வு மீதான செலவு $Y_1A$ ஆக அமையும். தற்போது வருமானம் $Y_2$ ஆக அதிகரித்தால் நுகர்வுச் செலவு $Y_2B$ ஆக அமையாமல் $Y_2A'$ ஆக அதிகரிக்கும். இங்கு APC மாறாமல் காணப்படும் போது, நுகர்வுச் செலவு வருமான மாற்றத்தின் விகிதத்திற்கு ஏற்ப அதிகரித்துள்ளது. இதுபோன்றே, B எனும் குடும்பத்தின் வருமானம் $Y_2$ ஆக

காணப்படும் போது, நுகர்வுச் செலவு $Y_2B$ ஆகும். அவ்வாறே வருமானம் $Y_3$ ஆக அதிகரித்தால், நுகர்வுச் செலவு $Y_3B'$ ஆக அமையும்.

இவ்வாறு நுகர்வின் மீது செலவிடப்படும் வருமானவிகிதம் அதிகரிக்கும் ஒவ்வொரு வருமான மட்டத்திலும் சமமாகக் காணப்படும் போது, முழு வருமானம், முழு சேமிப்பு, முழு நுகர்வு என்பன அதிகரிக்குமாயினும், சமூகத்தினுடைய மொத்த நுகர்விற்கான வருமானவிகிதமும் மாற்றமடையால் காணப்படும்.

## சார்பு வருமான நுகர்வுக் கோட்பாட்டினுடைய குறைபாடுகள்

பொருளியலாளர்கள் சார்பு வருமானக் கருதுகோள் தொடர்பான விளக்கத்தினை ஏற்றுக்கொள்வதில் பல குறைபாடுகள் உள்ளது எனவும் அவற்றினை இனங்கண்டும் உள்ளனர். சார்பு வருமானக் கோட்பாட்டின்படி, வருமானம் மற்றும் நுகர்வில் ஏற்படும் மேல்நோக்கிய அல்லது அதிகரிப்புடன் கூடிய மாற்றம், வருமானத்தில் ஏற்படும் மாற்றம் அதிகமாகவோ அல்லது சிறிதாகவோ உள்ளது என்பதை கருத்தில் எடுக்கமாட்டாது. ஆனால் அனுபவ ரீதியான ஆய்வுகளின்படி, வருமானத்தில் எதிர்பாராமல் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் அதிகளவில் ஏற்படும் இவ்வதிகரிப்பு, நுகர்வில் சிறியளவிலான அதிகரிப்பையே ஏற்படுத்துவதுடன் தொடர்புடையது.

சார்பு வருமானக் கருதுகோள், நுகர்வின் மட்டத்தினை மாற்றமுடியாது என்கிறது. ஆனால் நுகரப்படும் விகிதம் குறுங்காலத்தில் மாற்றமடையாமல் காணப்பட்டாலும், நீண்ட காலத்தில் மாற்றமடைய கூடியது என வாதிடுகின்றது. மக்களின் வருமானம் தொடர்ச்சியாக குறைவடைந்தால், நீண்டகாலத்தில் அவர்களின் முந்தைய வாழ்க்கைத் தரத்தினை பேணும்பொருட்டு, சேமிப்பினை மேற்கொள்ள முனையமாட்டார்கள். இது நீண்டகாலத்தில் நுகர்வு மட்டத்தினை ஈடுசெய்யக்கூடியது. ஆயினும், சார்பு வருமானக் கருதுகோள் வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியுடன், ஆனால், விகிதாசாரத்தை விட குறைவாக நுகர்வுச் செலவினுடைய மீண்டெழும் தன்மையுடன் தொடர்புபடவில்லை. இவ்வாறு விமர்சகர்களுடைய மறுபரிசீலனை வாதம் விகிதாசாரத்துடன் தொடர்புடையது.

வருமானம் மற்றும் நுகர்வு என்பவற்றில் ஏற்படும் மாற்றம் ஒரே போக்கிலேயே காணப்படும், அதாவது பொருளாதாரத்தில் ஏற்படும் மந்தநிலை மொத்த நுகர்வுச் செலவில் ஏற்படும் வீழ்ச்சியுடன் தொடர்புடையது என இக்கருதுகோள் வாதிடுகின்றது. ஆயினும் 1948 – 1949 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட பொருாதாரமந்த காலத்தில், செலவிடத்தக்க வருமானத்தில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், நுகர்வுச் செலவீனத்தில் அதிகரிப்பு காணப்பட்டது. இது, வருமானம் மற்றும் நுகர்வானது மாறுபட்டபோக்கில் மாற்றத்தினைக் கொண்டிருக்கும் என்பதனை தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், முந்திய நுகர்வுக் கோட்பாட்டினை விட டுயுசென்பெறிஇனுடைய சார்பு வருமானக் கோட்பாடு முன்னேற்றகரமான உள்ளது என்றும் கூறப்படுகின்றது.




வரைபடம் 2: சார்பு வருமானக் கருதுகோள் (Dwivedi, 2012)

நீண்டகால நுகர்வுத் தொழிற்பாடு, $C_{LR} = bY$ எனும் வளையி மூலம் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள நுகர்வுத் தொழிற்பாட்டின்படி, சிலவேளை நீண்டகாலத்தில் வீட்டுத்துறையினர் கொண்டிருக்கும் வருமானம் $OY_2$ இற்கு சமமாகக் காணப்பட்டால், $CY_2$ வரை நுகர்வினை மேற்கொள்வர். இவ் நுகர்வு மற்றும் வருமான மட்டத்தில், சராசரி நுகர்வு நாட்டம்

$APC = CY_2/OY_2$ ஆகும். தற்போது, வீட்டுத்துறையினரின் வருமானம் குறுங்காலத்தில் $OY_1$ இற்கு குறைவடையும எனின் முழு வருமானக் கருதுகோளின்படி, நுகர்வு மட்டமானது, $MY_1$ என்ற அளவிற்கு வீழ்ச்சியடைவதுடன், $APC = MY_1/OY_1$ ஆகும். இந்நிலையில், சராசரி நுகர்வு நாட்டம் சமமாகக் காணப்படும். ஏனெனில், வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக, வீட்டுத்துறையினரின் நுகர்வு வீழ்ச்சியடையும், இதுவிகிதமாக அமையும் ($MY_1/OY_1 = CY_2/OY_2$).

மாறாக, சார்பு வருமான நுகர்வுக் கோட்பாட்டின்படி, வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி அதே அளவிற்கு நுகர்வினை குறைவடையச் செய்யாமல், அதனை விட குறைந்தளவிலேயே வீட்டுத்துறையினரின் நுகர்வினை குறைவடையச் செய்யும். ஏனெனில் வீட்டுத்துறையினர் அவர்களின் வாழ்க்கைத்தர நிலையினை சீராகப் பேணும் பொருட்டு, குறுங்காலத்தில் வருமானம் குறைவடைந்தாலும் அதற்கு எதிராகச் செயற்பட்டு, நுகர்வினை குறைவடையாமல், குறித்த அதேயளவிற்கு நுகர்வு மட்டத்தினை பேணுவார்கள். இப்புள்ளி $C_sC$ என்ற கோட்டின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இதற்கிணங்க, வருமானம் $OY_2$ இலிருந்து $OY_1$ இற்கு குறைவடையும் போது, நுகர்வு $MY_1$ என்ற மட்டம் வரை குறைவடையாது, மாறாக, $NY_1$ வரையே நுகர்வு குறைவடையும். சார்பு வருமான கருதுகோளின்படி, வருமானத்தில் $Y_1$ வரை ஏற்படும் வீழ்ச்சியே நுகர்வின் குறைவிற்கு காரணமாகும். ஆயினும், வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள $C_1 = bY$ இன்படி Y2 –Y1 என்றளவான வருமான வீழ்ச்சி, நுகர்வில் BM வரை வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும், மாறாக நுகர்வில் BN வரையே குறைவடையச் செய்துள்ளது. இங்கு $BN < BM$ என்பது தெளிவானதாகும். ரெட்சட் விளைவின் காரணமாக எதிர்பார்த்த நுகர்வு வீழ்ச்சியை விட குறைந்த மட்டத்திலேயே குறைவு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவானதாகும். வரைபடத்தின் படி, ரெட்சட் விளைவு நுகர்வினை N வரை பேணுகின்றது. வரைபடத்தில், புள்ளி C மற்றும் N இனை இணைப்பதன் மூலம் $C_sC$ என்ற குறுங்கால நுகர்வுத் தொழிற்பாட்டினை பெறமுடியும். மேலும் சேமிப்பின்மையாகக் காணப்படும். இதன்படி, வீட்டுத்துறையினரின் வருமானம் வீழ்ச்சியடையும் போது,

அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரிதாக மாற்றம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, சேமிப்பதற்காக ஒதுக்கப்படும் விருமானத்தினளவை நுகர்விற்காக செலவிடுவர்.

மேலும் டியுசென்டவெறியினுடைய (Duesenberry) நுகர்வுக் கருதுகோளில் குறுங்கால சராசரி நுகர்வு நாட்டம் (APC), நீண்டகால APC யை விட அதிகமாகக் காணப்படும். வரைபடத்தில், குறுங்கால சராசரி நுகர்வு நாட்டம் ($APC_{SR}$) ஆனது நீண்டகால நுகர்வு நாட்டத்தினை ($APC_{LR}$) விட அதிகமாகும். மேலும், குறுங்கால நுகர்வுத் தொழிற்பாட்டில் ($C_SC$) புள்ளி N இல்

$$APC_{SR} = NY_1 / OY_1$$

மற்றும், நீண்ட கால நுகர்வுத் தொழிற்பாட்டில் (OC) புள்ளி M இல்

$APC_{LR} = MY_1 / OY_1$ ஆகும்.

வரைபின்படி, NY1 , MY1 ஆகும், எனவே $NY_1 / OY_1$,$MY_1 / OY_1$ ஆகும். இதனூடாக குறுங்கால APC, நீண்ட கால APC யினை விட கூடுதலாக உள்ளதனை நிரூபிக்கின்றது. இதுவே சார்பு மற்றும் முழு வருமான கருதுகோள்களிற்கிடையேயான பாரிய வேறுபாடாகும்.

### சார்பு வருமான விளைவு தொடர்பான ஆய்வுகள்

ஒரு நபரின் நுகர்வு நடத்தை மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வின் நிலை (wellbeing) யினையும் தீர்மானிப்பதில் சார்பு வருமானக் கருதுகோள் முக்கிய பங்கினை வசிக்கின்றது என்பதனை அதிகளவான ஆய்வுகள் கண்டறிந்துள்ளது. சார்பு வருமானத் தொடர்புகள் பல காணப்பட்டாலும் சொந்த வருமானம் பொதுவாகவே பயன்பாட்டில் நேர்மறையான விளைவுகளையே கொண்டிருக்கும். ஆனால் சார்பு வருமானம் விளைவுகள் தொடர்பாக ஒருமித்த முடிவுகள் பெறப்படவில்லை. தத்துவார்த்த (theoretical) வாதங்களின்படி, ஒப்பிட்டு விளைவினூடாக எதிர்மறையான தாக்கங்களும், தகவல் விளைவினூடாக

நேர்மறையான தாக்கங்களும் பெறப்படும் (Senik, 2004). அதிலும் குறிப்பாக சார்பு வருமானக் கருதுகோள் ஆய்வு முடிவுகளின் படி சார்பு வருமானத்தின் விளைவுகள் எதிர்மறையானதாகவும் மற்றும் நேர்மறையானதாகவும் பெறப்பட்டுள்ளது. ஆய்வுகளின் படி சார்பு வருமானக் கருதுகோள் வாழ்க்கைத் திருப்தியுடன் நேர்மறைத் தொடர்புகளை ரஷ்யா மற்றும் ஐரோப்பியாவில் கண்டறியப்பட்டுள்ளது (Senik, 2004 :Senik, 2005). ஆயினும் ஜேர்மன் நாட்டுத்தரவுகளின் படி எதிர்மறைத் தொடர்பு காணப்படுகின்றது (Ferrer - I - Carbonell, 2005).

மேலும் சார்பு வருமானம், வருமானம் மற்றும் பொருளாதாரம் சார் திருப்தியுடன் ஐரோப்பாவில் நேர்மறைத் தொடர்பினையும் (Senik, 2008) டென்மார்க் தரவுகளின்படி, சார்பு வருமானம், பொருளாதாரம் சார் திருப்தியுடன் நேர்மறைத் தொடர்புகளையும் கொண்டுள்ளது (Clark et al, 2009). மாறாக சார்பு வருமானம் ஐக்கிய அமெரிக்க மக்களின் மகிழ்ச்சியுடன் எதிர்மறை விளைவுகளைக் கொண்டுள்ளதுடன் (Mcbride, 2001; Luttmer, 2005), பிரித்தானிய ஆய்வுகளின் படி தொழில் திருப்தியுடனும் எதிர்மறை விளைவுகளையே கொண்டிருந்தது (Clark and Oswald, 1994).

Schalembier (2016) சார்பு வருமான கருதுகோளின் சர்வதேச நாடுகளுக்கிடையிலான வாழ்க்கைத் திருப்தி வேறுபாடுகளில் (சர்வதேச நாடுகளிடையேயான ஒப்பீட்டு விளைவு) தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதா என்பதனை ஒப்பீட்டு ஆராய்ந்தார். ஆய்வு முடிவுகள் நாடுகளுக்கிடையில் வாழ்க்கைத் திருப்தி வேறுபாடுகளில் சார்பு நாட்டு ஒப்பீட்டு விளைவுகள் தாக்கம் கொண்டிருப்பதனை கண்டறிந்தது. மேலும் அனைத்து நாடுகளிலும் உள்ள குறைந்த வருமான வகுப்புகளில் உள்ளவர்கள், ஏனைய நாடுகளின் தாக்கத்திற்கு உள்ளாகின்றதுடன் தனிநபரது பண்புகள் இத்தகு ஏனைய நாடுகளில் ஒப்பீட்டுத்தாக்கங்கள் எவ்வாறு வாழ்க்கைத் திருப்தியில் விளைவவுகளை ஏற்படுத்தும் என்பதனைத் தீர்மானிக்கும் என்ற முடிவினையும் இவ்வாய்வு கண்டறிந்தது.

Duesenberry, Eckstein & Fromm மற்றும் Davis & the authors களினால் ஆய்வு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட சார்பு வருமான

கருதுகோளின் ஒருமித்த தன்மையினை கண்டறிவதற்காக கனடா, இந்தியா, ஜப்பான், ஸ்வீடன், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் காலத்தொடர் தரவுகளைப் பயன்படுத்தி 1951 - 1968 ஆண்டுகளில் Sing & Kumar (1971) களினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவுகளின் படி சார்பு வருமானக் கருதுகோள் முக்கிய பிரதிபலிப்பினை அனைத்து நாடுகளிலும் காட்டியிருந்தாலும், வெவ்வேறுபட்ட முன்மொழிவுகளின் பிரதிபலிப்புக்கள் வேறுபட்டது. குறிப்பாக Duesenberry இன் சார்பு வருமான கருதுகோளினை விட ஏனைய முன்மொழிவுகளின் பிரதிபலிப்புக்கள் நாடுகளில் சிறப்பாக கண்டறியப்பட்டது.

சார்பு வருமானக் கருதுகோள் தொடர்பான ஆய்வுகள் வெவ்வேறு பின்னணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுள் White (2020) ஐக்கிய அமெரிக்காவில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையில் கறுப்பின மற்றும் வெள்ளையின மாணவர்களுக்கிடையில் நிதிநிலைமை தொடர்பான அழுத்தங்கள் மற்றும் சார்பு வருமானம் சார் நுகர்வு தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகள் சார்பு வருமானக் கருதுகோளிற்கு ஆதரவாக காணப்படுகின்றது. இதன்படி கறுப்பின கல்லூரி மாணவர்கள் தங்களுடன் கற்கும் ஏனைய வெள்ளையின மாணவர்களில் நுகர்வு மட்டத்தினால் தமது நடத்தையினை மாற்றுவதினால் இவர்களது நிதிநிலைமை சார் அழுத்தங்கள் அதிகரிக்கின்றது என ஆய்வு முடிவு அமைந்தது.

சார்பு வருமானக் கருதுகோள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழு வருமானக் கருதுகோளின் படி தனிநபர் ஆரோக்கியமானது சராசரி வருமானத்துடன் மேம்பட்டாலும் அம் முன்னேற்றம் குறைந்து செல்லும் விகிதத்திலேயே காணப்படும். அதேவேளை சார்பு வருமானக் கருதுகோளின்படி ஆரோக்கியம், சமூகத்தில் காணப்படும் வருமான சமமின்மையில் தங்கியுள்ளது என்றும், வருமான சமமின்மை ஆரோக்கியத்தில் தீங்கான விளைவினையே ஏற்படுத்துகின்றது (Wilkinson, 1996). தொடர்புடையதாக Lindley & Lorgelly (2005) நாடுகளுக்கிடையிலான குழுத்தரவுகளைப் பயன்படுத்தி சார்பு வருமானக் கருதுகோளின் நிலைதன்மை தொடர்பாகவும், மற்றும் ஆரோக்கியம் மற்றும் வருமான சமமின்மைக்கு இடையிலான தொடர்பு தொடர்பாகவும் ஆய்வு

செய்தார்கள். மேலும் சார்பு வருமான கருதுகோள் நீண்டகாலமாக ஆரோக்கியம் மற்றும் வருமான சமமின்மை தொடர்பாக காணப்படவில்லை என்றும், ஆரோக்கியம் மற்றும் வருமான சமமின்மைக்குமிடையே தொடர்புகள் காணப்படவில்லை என்றும் ஆய்வு முடிவுகள் பெறப்பட்டது.

மேலும் வருமானம் மற்றும் இறப்பு விகிதம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை ஆய்வு செய்யும் பொருட்டு சார்பு வருமானம் ஒரு வருமானக் கருதுகோளுடன் பரிசீலிக்கப்பட்டுள்ளது. Schalembier (2016) ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைமுறை தொடர்பான பிரித்தானியாவின் கணக்கெடுப்பினை ஆதாரமாகக் கொண்டு இவ்விரு கருதுகோள்களினதும் முக்கியத்துவத்தினை ஆராய்ந்தார்கள். ஆய்வு முடிவின்படி சார்பு வருமானம் தொடர்பாக இறப்பு மற்றும் வருமானத்திற்கான தொடர்பில் பிராந்திய ரீதியிலான வருமான பங்கீட்டில் குறைந்தளவிலான முக்கியத்துவத்தினை பெற்றிருந்தது. அதேவேளை கூடியளவிலான முக்கியத்துவத்தினை முழுவருமானக் கருதுகோள் பெற்றிருந்தது.

சார்பு வருமானக் கருதுகோள் பாகிஸ்தான் வீட்டுத்துறையினரின் நுகர்வுத் தொழிற்பாட்டில் தாக்கம் செலுத்துகின்றதா என்பதனை Himayatullah Khan (2014) ஆய்வு செய்தார். ஆய்வு முடிவுகள் வீட்டுத்துறையினர் Dusenberry’s ன் சார்பு வருமானக் கருதுகோளினை பின்பற்றுகிறார்கள் என்றும் வீட்டுத்துறையினரது நுகர்வு நடத்தை தற்போதைய வருமான மட்டத்தில் மட்டுமல்லாமல் கடந்த காலத்தில் அவர்களிடம் காணப்பட்ட உயர் வருமான மட்டம் மற்றும் ஏனைய வீட்டுத்துறையினரின் நுகர்வு வடிவம் என்பவற்றினாலும் தாக்கமடைகின்றது என்பதனை வெளிப்படுத்தின.

Dainlami et al. (2018) வீட்டுத்துறையின் சக்தி மூலங்கள் தெரிவு மற்றும் நுகர்வு தொடர்பாக சார்பு வருமானக் கருதுகோளின் பிரதிபலிப்பு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட ஆய்வு முறைகளின் படி சார்பு வருமானக் கருதுகோளானது சக்தி மூலகங்களின் தெரிவு மற்றும் நுகர்வில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையே வீட்டுத்துறையினரிடம் செல்வாக்குச் செலுத்துகின்றது.

Khalil et al. (2021) சார்பு வருமானக் கருதுகோள் மற்றும் அபிலாசை வருமானக் கருதுகோள்கள், தீர்மானத்தின் போது நேர்மறை அல்லது எதிர்மறையான பயன்பாட்டினை பெறுகிறார்கள் என்பது தொடர்பாக ஆய்வு செய்தார்கள். சார்பு வருமானக் கருதுகோளின் படி தீர்மானம் மேற்கொள்பவர்கள் நேர்மறை பயனை தெரிவு செய்கின்றார்கள். ஆனால் இவ்வாய்வு முடிவினானது தீர்மானத்தின் போது சார்பு வருமான விளைவினை விட அபிலாஸ` வருமான விளைவு ஆதிக்கம் செலுத்தும் போது உயர்நிலையிற்கு முக்கியத்துவம் கொடுத்து தேர்வினை மேற்கொள்வர்.

## முடிவுரை

Duesenberry இனால் முன்வைக்கப்பட்ட சார்பு வருமானக் கருதுகோளானது பல்வேறு பின்வந்த ஆய்வுகளினால் அங்கீகரிக்கப்பட்ட அதேவேளை, பல ஆய்வுகளினால் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. ஆனாலும் சார்பு வருமான நுகர்வுக் கோட்பாடானது பல துறைசார்ந்து பல நாடுகளிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளமை இக்கருதுகோளின் முக்கியத்துவத்தினை இன்றுவரை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது. மேலும் பல ஆய்வாளர்கள், நிதிசார் திருப்தி என்ற எண்ணக்கருவினை நோக்கும் போது முழு வருமானத்தினைப் போன்றே சார்பு வருமானமும் முக்கியமானது என்பதனை வலியுறுத்தியுள்ளார் (Cheung & Lucas, 2016). அதேவேளை சார்பு வருமானம் சார் நுகர்வு நடத்தை காரணமாக அதிகரிக்கும் அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கு தனிநபர்கள் தமது விருப்பத்தினை விட நிதிசார் தீர்மானத்தினை முழு வருமான மட்டத்தில் எடுக்கும் வருமானத்திட்டத்தில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளனர் (Boyce et al., 2010).

## *உசாத்துணைகள்*

*Ahuja, H.L., (2002). Macro Economics: Theory and policy Advanced. New Delhi: S.Chand and Company Limited, Ninth Edition.*

*Ahuja, H.L., (2007). Macro Economics: Theory and policy Advanced analysis. New Delhi: S.Chand and Company Limited, Revised Edition.*

*Boyce, C. J., Brown, G. D., & Moore, S. C. (2010). Money and happiness: Rank of income, not income, affects life satisfaction. Psychological science, 21(4), 471-475.*

*Brown, S., Gray, D., & Roberts, J. (2015). The relative income hypothesis: A comparison of methods. Economics Letters, 130, 47-50.*

*Cheung, F., & Lucas, R. E. (2016). Income inequality is associated with stronger social comparison effects: The effect of relative income on life satisfaction. Journal of personality and social psychology, 110(2), 332.*

*Clark, A. E. & Oswald, A. J. (1994) Unhappiness and unemployment. The Economic Journal, 104, 648-659.*

*Clark, A.E., Westergård-Nielsen, N., Kristensen, N., 2009. Economic satisfaction and income rank in small neighbourhoods. J. Eur. Econ. Assoc. 7 (2–3), 519–527.*

*Danlami, A. H., Applanaidu, S. D., & Islam, R. (2018). Axiom of the relative income hypothesis and household energy choice and consumption in developing areas: Empirical evidence using Verme model. Kasetsart Journal of Social Sciences, 39(3), 422-431.*

*Dornbusch, R. and Fischer, S., (2005). Macro Economics. New Delhi: Tata McGraw-Hill Publishing Company Limited, 6th Edition.*

*Duesenberry, J.S., 1949. Income, Saving and the Theory of Consumer Behaviour. Harvard University Press, Cambridge.*

*Dwivedi, D.N., (2012). Macro Economics: Theory and Policy. Tata McGraw-Hill Publishing Company Limited, 3rd Edition*

*Ellison, G. T. (2002). Letting the Gini out of the bottle? Challenges facing the relative income hypothesis. Social science & medicine, 54(4), 561-576.*

*Ferrer-i-Carbonell, A., 2005. Income and well-being: an empirical analysis of the comparison income effect. J. Public Econ. 89 (5), 997–1019.*

*Himayatullah Khan. (2014). An Empirical Investigation of Consumption Function under Relative Income Hypothesis: Evidence from Farm Households in Northern Pakistan. International Journal of Economic Sciences, Vol. III, No. 2/2014, pp. 43- 52*

*Khalil, E. L., Aimone, J. A., Houser, D., Wang, S., Martinez, D., & Qian, K. (2021). The aspirational income hypothesis: On the limits of the relative income hypothesis. Journal of Economic Behavior & Organization, 182, 229-247.*

*Khan, H. (2014). An empirical investigation of consumption function under relative income hypothesis: Evidence from farm households in northern Pakistan. International Journal of Economic Sciences, 3(2), 43.*

*Kosicki, G. (1987). A test of the relative income hypothesis. Southern Economic Journal, 422-434.*

*Lindley, J., & Lorgelly, P. (2005). The relative income hypothesis: does it exist over time? Evidence from the BHPS.*

*Luttmer, E.F., 2005. Neighbours as negatives: relative earnings and well-being. Quart. J. Econ. 120 (3), 963–1002.*

*McBride, M., 2001. Relative-income effects on subjective well-being in the cross section. J. Econ. Behav. Organ. 45 (3), 251–278.*

*Sanders, S. (2010). A model of the relative income hypothesis. The Journal of Economic Education, 41(3), 292-305.*

*Schalembier, B. (2016a). The impact of exposure to other countries on life satisfaction: an international application of the relative income hypothesis. Social Indicators Research, 128(1), 221-239.*

*Schalembier, B. (2016b). The impact of exposure to other countries on life satisfaction: an international application of the relative income hypothesis. Social Indicators Research, 128(1), 221-239.*

*Senik, C., 2004. When information dominates comparison: learning from Russian subjective panel data. J. Public Econ. 88 (9), 2099–2123.*

*Senik, C., 2008. Ambition and jealousy: income interactions in the 'Old' Europe versus the 'New' Europe and the United States. Economica 75 (299), 495–513.*

*Singh, B., & Kumar, R. C. (1971). The Relative Income Hypothesis-A Cross Country Analysis. Review of Income and Wealth, 17(4), 341-348.*

*White, K. J. (2020). Financial stress and the relative income hypothesis among Black college students. Contemporary family therapy, 42(1), 25-32.*

*Wilkinson R.G. (1996). Unhealthy societies: The afflictions of inequality. London: Routledge.*

# வங்கித்தொழிலில் தொழில்நுட்பத்தின் பிரயோகம்

ஜெயரஞ்சன் பிரஷீனா[5]

## அறிமுகம்

தொழில்நுட்பமானது மக்களின் தேவைகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதனால், அது, பாரம்பரிய வங்கித்தொழிலில் முன்னொருபோதும் காணப்படாத வாய்ப்புக்களை வழங்கக்கூடியதான டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சகாப்தத்திற்கு வங்கிகளை இட்டுச் செல்கின்றது. நடமாடும் பணப்பைகள், இலத்திரனியல் பணப்பைகள், முற்கொடுப்பனவு அட்டைகள், தொடர்பற்ற அட்டைகள், மணிக்கட்டு பட்டிகளுக்கூடான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட மாற்றுவழி ஏற்பாடுகள் என்பன கவர்ச்சிமிக்கவனவாக தோற்றம்பெறும் அதேவேளை சிலர் வங்கிக்கு நேரடியாக செல்லும் மனப்போக்கு காணப்படுகின்றது. தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் அதன் மீதான நுகர்வோரின் நம்பிக்கை அதிகரித்து வருகின்றமை காரணமாக வங்கித்தொழில் உற்பத்திகள் வழங்கலிலான மாற்றங்கள் வினைத்திறனானதும் காத்திரமானதுமானதுமாக இருக்கும் (கார்பே-வால்வெர்டே, 2017)

தொழில்நுட்பத்தால் தூண்டப்படும் எதிர்காலம் பின்டெக் (FinTech) மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நிறுவனங்கள் கடந்தகாலங்களில் பல புதுமைப் படைப்புகளுக்கு இட்டுச்சென்றுள்ள அதேவேளை நிதியியல் சூழலமைப்பை தீவிரமாக மாற்றியமைத்து வருகின்றன (பைரூஸ் மற்றும் விக்ரமசிங்க, 2019). வாடிக்கையாளர்களின் மாறிவரும் இயக்கவாற்றல்களுக்கும் டிஜிட்டல் நிதியியல் சேவைகளுக்கான கேள்விக்கும் ஈடுகொடுக்கின்ற விதத்தில் தொழில்நுட்ப அறிவு பெற்ற வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை அவை வழங்குகின்றன. பின்டெக் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நிறுவனங்கள் நிதிச்சேவைகளில் நுழைவதற்கான தடைகளைக் குறைப்பதற்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருப்பதுடன் தகவலினால் தூண்டப்படும்

---

[5] விரிவுரையாளர் (தகுதிகாண்), மனித வள முகாமைத்துவத்துறை, வணிக கற்கைகள் பீடம், வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை.

நிதிச்சேவைகள் மீது தங்கியிருக்கும் தன்மையை உயர்த்தி புதிய வர்த்தக மாதிரிகளின் எழுச்சியைத் தூண்டுகின்றது. பின்டெக் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நிறுவனங்களின் துரித வளர்ச்சி மாற்றமானது வங்கிகளின் வர்த்தக மாதிரிகளை அதிக சவால் மிக்கதும் போட்டித்தன்மை மிக்கதாகவும் மாற்றியிருக்கிறது. செலவுச் சிக்கனமாக இருப்பதன் மூலமும் வாடிக்கையாளர் சனத்தொகையினை அடிப்படையாகக் கொண்டு பணி வழங்குவதன் மூலமும் புதிதாக நுழைபவற்றுடன் போட்டியிடுவதற்கு வங்கிகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் விருத்தியடைவது அவசியமாகும். எனினும், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சகாப்தத்தினால் வழங்கப்படுகின்ற வாய்ப்புக்களை முழுமையாகத் தழுவிக்கொள்வதற்கு இடர்நேர்வுகளுடன் இசைந்து செல்லக்கூடிய வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கூடாக வழிப்படுத்துவதற்கு வங்கிகள் இயலுமை கொண்டனவாகவிருக்க வேண்டும் (கார்பே - வால்வெர்டே, 2017).

## வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்

அண்மைக்காலங்களில் வங்கித்தொழில் துறையானது வளர்ந்துவருகின்ற பின்வரும் தொழில்நுட்பங்களை நோக்கி கவரப்பட்டுக் காணப்படுகின்றது.

### 1. திறந்த வங்கித்தொழில்

திறந்த வங்கித்தொழிலில், மூன்றாம் தரப்பு பிரயோகங்கள், பிரயோகச் செய்நிரலாக்க இடைமுகங்களுக்கூடாக இணங்கப்பட்ட வாடிக்கையாளர் தரவுகளை அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படும். இது, தனியொரு இலத்திரனியல் தளத்தினூடாக வெவ்வேறுபட்ட வங்கிகளுக்கு அணுகுவழியினை இயலச்செய்வதன் மூலம் வங்கித்தொழில் அதிக வசதியினையும் தெரிவினையும் வழங்குகின்றது (தேஷ்பாண்டே, 2018)

### 2. மேகக் கணனிப்படுத்தல் (Cloud Computing)

மேகக் கணனிப்படுத்தல் (Cloud Computing) என்பது கணனி செயன்முறைப்படுத்துகின்ற வளங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, நுகர்வு செய்யப்படுகின்றன மற்றும்

பகிரப்படுகின்றன என்பவற்றிலுள்ள மாறுதலொன்றாகும். சேவை வழங்குனர்கள் தரவு மையங்களை வழங்குகின்றமையினால் வங்கிகள் தங்களது கோரிக்கைகள் மீதான செயன்முறைப்படுத்தல் மற்றும் சேமிப்பு வசதிகளின் அணுகுவதற்காக சொந்தத் தரவு மையங்களைப் பேணவேண்டிய தேவைப்பாடு இல்லை.டிக்லவுட் கணனிப்படுத்தலானது செலவுச்சிக்கனம், செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மை மற்றும் உயர்ந்த பாதுகாப்பு என்பவற்றை வழங்குகின்றது. எனினும், இது தரவுகளின் அந்தரங்கம், இடைத்தடங்கலற்ற அணுகுவழி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியதாக இருக்கின்றது (தேஷ்பாண்டே, 2018).

3. இலத்திரனியல் நுழைவும் (இ-நுழைவு) மற்றும் உறுதிப்படுத்தலும்

வங்கித்தொழிலில் வர்த்தக உறவுகளைக் கட்டியெழுப்புகின்றபோது நேருக்கு நேரான இடைத்தொடர்பு முக்கிய அம்சமாக அமைகின்றது. எனினும், வங்கிகள் தொழில்நுட்பம் மீது தங்கி இருப்பதனாலும் வாடிக்கையாளர்கள் குறைந்தது ஒரு முறையேனும் வங்கிக்குச் செல்ல விரும்பாதமையினாலும் வாடிக்கையாளர்களின் இலத்திரனியல் நுழைவு தேவைமிக்கதாக மாறி வருகின்றது. இதன் நன்மைகள் தெளிவாகப் புலப்படுகின்ற போதிலும் பணம் தூயதாக்கலுக்கெதிரான, தீவிரவாத நிதியிடலை ஒழித்தல், வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனித்தல் போன்ற தேவைப்பாடுகளைக் கடைப்பிடித்தல் என்பவற்றில் சவால்மிக்கனவாயிருக்கும் (தேஷ்பாண்டே, 2018).

4. மெய்நிகர் நாணயம்

மெய்நிகர் நாணயம் என்பது மறையீட்டியலைப் பயன்படுத்துகின்ற பரிமாற்று ஊடகமாக தொழிற்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட சொத்தொன்றாவதுடன் மத்திய வங்கியுடன் தங்கியிராது சுதந்திரமான முறையில் செயற்படுகின்றது.

நாணயத் தாக்கங்கள், ஊக அழுத்தம், பாதுகாப்பு மீறல்கள், ஒழுங்குவிதிகள் போதாமை, பணம் தூயதாக்கல் என்பவற்றிலான இடர்பாடுகள், வரி ஏய்ப்புக்கள் போன்ற இணைந்து காணப்படும்

இடர்நேர்வுகளின் காரணமாக மெய்நிகர் நாணயம் பற்றி ஒழுங்கு முறைப்படுத்துபவர்கள் எச்சரிக்கையாக இருக்கின்றனர். இவ்இடர்பாடுகளின் காரணமாக சில ஒழுங்குமுறைப் படுத்துநர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளைக் கையாள்கின்றனர் (தேஷ்பாண்டே, 2018).

5. பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பமும் சங்கிலித்தொடர் பதிவேடுகளும்

பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் என்பது பங்குபற்றுநர்கள் பேரேட்டின் ஒரேமாதிரியான சொந்த பிரதியினைக் பெறக்கூடிய வலயமைப்பு முழுவதும் பகிரக்கூடிய சொத்து தரவுத்தளமொன்றாகும். இணைப்புச் சங்கிலி தொடர் பதிவேடுகள் என்பது சங்கிலித் தொடர்ராக தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பகிரப்பட்ட பேரேட்டு தொழிநுட்பத்தின் மாறுபாடொன்றாகும். கொடுகடன் தகவல்களைத் தொகுத்தல வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளும் தகவல்களைப் பகிர்தல், பணம் தூயதக்கல் மற்றும் சட்டரீதியற்ற நிதியின் ஏனைய வடிவங்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றில் இதன் பயன்பாட்டை சில நாடுகள் ஆராய்ந்து வருகின்றன. சங்கிலித்தொடர் பதிவேடுகள் உள்ளடங்கலாக பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்ப அபிவிருத்திகள், தரவுகளின் அந்தரங்கத் தன்மையைப் பேணுதல், தொழில்துறை தரங்களின் பற்றாக்குறை தொடர்பில் கவனங்களைத் தூண்டுகின்றன (தேஷ்பாண்டே, 2018).

## தொழில்நுட்பத்தில் அதிகம் தங்கியிருக்கும் காரணத்தால் வங்கித்துறையின் வளர்ந்துவரும் இடர்நேர்வுகள்

- பணம் தூயதாக்கல், உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளல் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியிடுதல் போன்றவற்றின் இடர்நேர்வுகள்

குழப்பம் தரும் புதிய கண்டுபிடிப்புகளால் பாரம்பரிய வங்கித்தொழிலைப் பிரதியீடுசெய்வது வங்கித்தொழிலின் காத்திரமான கண்காணிப்பின் இயலுமையைக் குறையச் செய்கின்றது. பின்டெக் மற்றும் இலத்திரனியல் வங்கித் தொழில் அபிவிருத்திகள் போன்றன இ-வாடிக்கையாளர் நுழைவு நேருக்குநேரான இடைத்தொடர்புகளை நீக்குதல், பணம்

தூயதாக்கல், உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளல் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியிடல் அச்சுறுத்தல்களின் உயர்ந்த மட்டமொன்றினை தோற்றுவிப்பதனை நோக்கி வங்கிகளை கட்டாயப்படுத்துகின்றது (கார்பே-வால்வெர்டே, 2017).

- தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணையப் பாதுகாப்பு

வங்கித்தொழிற் துறையின் டிஜிட்டல்மயப்படுத்தலை நோக்கிய நிறுத்தமுடியாத போக்கானது தொழில்நுட்பம் மற்றும் இணைய இடர்நேர்வு வெளிப்பாடுகளை அதிகரிக்கின்றது. அண்மைக்கால அதிகூடிய உலகளாவிய இணையத்தள தாக்குதல்கள், அதன் நவீனத்தன்மை மற்றும் நிகழும் தன்மையின் அதிகரிப்பு நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மைக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கின்றது (கார்பே-வால்வெர்டே, 2017).

- அந்தரங்கமும் தகவல் பாதுகாப்பும்

அந்தரங்கத்தினைப் பேணுவதற்கான வாடிக்கையாளர் உரிமை மற்றும் தரவுப் பாதுகாப்பு என்பன வங்கியினுடைய புதிய பரிமாற்று செயற்பாட்டு சூழலினால் தோற்றுவிக்கப்படும் சவால்களுடன் வளர்ந்துவரும் பிரச்சனையொன்றாக மாறிவருகின்றன. உலகளாவிய ரீதியிலான தரவுக்கசிவுகள், உணர்வுமிக்க வாடிக்கையாளர் தகவல்கள் பாதுகாக்கப்படாவிட்டால், தவறானவர்களிடம் சென்றடையும் என்பதை நிரூபிக்கின்றன (தேஷ்பாண்டே, 2018).

- மனிதத்தன்மை மற்றும் உள்ளுணர்வு சார்ந்த தீர்மானமெடுத்தல் என்பவற்றின் மறைவு

வங்கிகளின் தீர்மானமெடுத்தல் செயன்முறையில் பாரிய தகவல் பகுப்பாய்வின் ஆதிக்கம் மற்றும் இயந்திரவழி பயில்நெறிமுறைகள் என்பன கணனியில் முறைமையில் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளில் முழுமையாகத் தங்கியிருக்கும் இடர்நேர்வுகளைத் தோற்றுவித்து தொழில்துறையினை சமூகத்திலிருந்து மேலும் பிரித்துவைக்கின்றன (தேஷ்பாண்டே, 2018).

## சவால்கள்

சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் மாற்றங்களை மேற்கொள்ளுதல், மத்திய வங்கியின் வகிபாகத்திற்கு சவால்விடுவதுடன் தொழில்நுட்பத்தினால் தூண்டப்படும் வங்கித்தொழிலில் வங்கிகள் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் கீழே கலந்துரையாடப்படுகின்றன.

- சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தல்.

துரித தொழில்நுட்ப வளர்ச்சிகள், நடைமுறையிலுள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைக் காலங்கடந்தவையாக்குகின்றன. புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களை அறிமுகப்படுததுவதில் பின்பற்றப்படும் நீண்ட செயன்முறையானது இச்சூழ்நிலையை மேலும் சிக்கலானதாக்குகின்றது. இலங்கையை பொறுத்தவரையில், கணனிக்குற்றவியல் சட்டம் மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் என்பன தகவல் முறைமை மற்றும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கள் போன்றவற்றோடு தொடர்புடைய விடயங்களை ஆளும் பிரதான சட்டவகைகளாக விளங்குகின்றன. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டும் குறித்துரைத்த ஒழுங்குமுறைப்படுத்தலானவை தகவல் பாதுகாப்பு, முறைமைகள் கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்ற விடயப்பரப்புக்களை உள்ளடக்குகின்றன. எனினும், தகவல் பாதுகாப்பு, மெய்நிகர் நாணயம் மற்றும் மேகக் கணனிப்படுத்தல் செயன்முறைகள் என்பன சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலினூடாக போதுமானளவு தீர்க்கப்பட வேண்டியவையாக இருந்துவருகின்றன (கார்பே-வால்வெர்டே, 2017).

- மத்திய வங்கியின் சவால்மிக்க வகிபாகம்

மெய்நிகர் நாணயம் மற்றும் பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் போன்ற புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றும் சமூக வழக்கானது மத்திய வங்கியின் விலை உறுதித்தன்மை மற்றும் நிதியியல் முறைமை ஆகிய இரு குறிக்கோள்களுக்கும் சவால்களைத் தோற்றுவிக்கின்றன. தொழில்நுட்ப முன்னேற்றங்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் மேற்பார்வைக்குள் கவனமான முறையில் கொண்டுவரப்படாவிடின் பாரியளவிலான ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மாற்றுவழி நிதியியல் முறைமை தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது (தேஷ்பாண்டே, 2018).

- வங்கிகளின் சவால்மிக்க வகிபாகம்

வங்கிகள் டிஜிட்டல் சகாப்தத்தில் முன்னோக்கிச் செல்லுகின்ற அதேவேளை தொடர்ச்சியாக பரிணமிக்கின்ற சவால்களை அறிந்துகொள்வதையும் அதன்மீது எதிர்ச்செயலாற்றுவதையும் எதிர்கொள்கின்றன. தமது வியாபார இலக்குகளை எய்துகொள்ளுவதற்கு இணையாக புதிய துவாரங்கள் / பரிணமிக்கும் இணையத்தாக்குதல்கள்/ சாத்தியமான பணம் தூயதாக்கல் / தீவிரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தலுடன் இணங்காமை என்பவற்றைத் தீர்ப்பதற்கு எச்சரிக்கையான பாதுகாப்புப் பொறிமுறைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. வங்கிகளின் பணிப்பாளர் சபையும் உயர்முகாமைத்துவமும் நிபுணத்துவமானது தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையில் தொழில்நுட்பத்துடன் இணைந்த இடர்நேர்வுகளைப் புரிந்துகொள்ளவேண்டும் (கார்பே-வால்வெர்டே, 2017).

## முடிவுரை

உலகின் பிற பகுதிகளும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்டு டிஜிட்டலுக்குச் செல்வதால், வங்கித் துறையும் டிஜிட்டலாக இருக்க வேண்டும் என்பதில் முழுமையான அர்த்தம் உள்ளது. உலகில் பெரும்பாலான மக்கள் தங்கள் பணத்தை வைத்து வங்கிகளை நம்புவதால், வங்கித் துறை பல வழிகளில், உலக மக்கள்தொகையில் பெரும் தொகையின் வாழ்வாதாரங்களுக்கு

பொறுப்பாகும். எனவே, வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வங்கிகளால் வெகுமதி அளிக்க வேண்டியது முக்கியமானது மட்டுமல்ல, அவசியமானது. வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களையும் அவர்களின் வைப்புகளையும் மிகுந்த கவனித்துக்கொள்கின்றன என்பதைக் காட்ட வேண்டும்.

டிஜிட்டலுக்குச் செல்வதே இதைச் செய்வதற்கான வழி. இது மக்களின் பணத்தின் பாதுகாப்பைச் சேர்க்கிறது மற்றும் அவர்களின் வாழ்க்கையை சிறப்பாகச் செய்ய உதவும் பல வசதிகளை அவர்களுக்கு வழங்குகிறது. வங்கிகளில் நீண்ட வரிசையில் நிற்கும் நாட்கள் முடிந்துவிட்டன. இப்போது, மக்கள் பரிவர்த்தனைகளை செய்ய இணையத்தைப் பயன்படுத்தலாம்.

இது அவர்களின் நேரத்தை மிச்சப்படுத்துகிறது, இது அவர்கள் வாழ்க்கையில் மற்ற முக்கியமான வி'யங்களுக்கு பயன்படுத்த முடியும். மேலும், சிலருக்கு, ஒரு வங்கியைப் பார்வையிடுவது ஒரு கடினமான பணி. ஒரு நாள் வேலைக்குச் சென்று வங்கியைப் பார்வையிட முடியாத பலர் உள்ளனர். எனவே, அந்த நிகழ்வுகளிலும் டிஜிட்டல் வங்கி ஒரு பெரிய நிவாரணமாக வருகிறது.

### *உசாத்துணைகள்*


*Carbó-Valverde, S. (2017). The impact on digitalization on banking and financial stability. Journal of Financial Management, Markets and Institutions, (1), 133-140.*

*Deshpande, B. (2018). Digitalization in banking sector.*

*Fairooz, H. M. M., & Wickramasinghe, C. N. (2019). Innovation and development of digital finance: a review on digital transformation in banking & financial sector of Sri Lanka. Asian Journal of Economics, Finance and Management, 69-78.*

# இலங்கையின் நிதியியல் முறைமை

**சந்திரன் வேவியாலினி**[6]

## அறிமுகம்

ஒரு நாட்டின் கொடுப்பனவு ஊடகமான பணக்கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பல்வேறு அமைப்புக்களையும் உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பு நிதியியல் முறைமையாகும். நிதியியல் முறைமையானது வீட்டுத்துறை, நிறுவனத்துறை, வெளிநாட்டுத்துறை ஆகிய பிரதான பொருளாதார அலகுகளின் நிதிச் செயற்பாடுகளை சீர்படுத்தும் நிதி நிறுவனங்கள், நிதிச் சந்தைகள், நிதிக் கருவிகள், நிதி உட்கட்டமைப்பு வசதிகள், நிதி மேற்பார்வை செய்யும் நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பணம் செலுத்துதல் மற்றும் பத்திர பரிவர்த்தனைகளில் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதி செய்வதே நிதி அமைப்பின் மிக முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும். நிதி உட்கட்டமைப்பு என்பது பெரிய மதிப்பு மற்றும் சிறிய மதிப்பு செலுத்துதல்களைச் செயல்படுத்துவதற்கான பல்வேறு அமைப்புக்களைக் குறிக்கின்றது. தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான நிதிக் கடமைகளைத் தீர்ப்பதற்கு நிதி நிறுவனங்களின் கணக்குகளில் பணத்தை மாற்றுவதற்கு பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு முறைகள் உதவுகின்றன.

## நிதி நிறுவனங்கள்

இலங்கை நிதி நிறுவன அமைப்பு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. இலங்கை மத்திய வங்கி

[6] உதவி விரிவுரையாளர், வர்த்தகத்துதுறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

2. நிதி இடை நிறுவனங்கள்
    a. வைப்புக்களை ஏற்று கடன் வழங்க அனுமதி பெற்ற நிறுவனங்கள்
        i. அனுமதிப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்
        ii. அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
        iii. பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்
        iv. கூட்டுறவு கிராமிய வங்கிகள்
        v. சனச வங்கி
        vi. வேறு கடன் கொடுக்கும் கூட்டுறவு சங்கங்கள்
    b. ஊழியர் சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியம்
    c. காப்புறுதிக் கம்பனிகள்
    d. முதலீட்டுக் கம்பனிகள்
    e. குத்தகைக் கம்பனிகள்
3. நிதிச்சேவை வழங்கும் நிறுவனங்கள்
    a. வணிக வங்கிகள்
    b. நிதி முகாமைத்துவ நிறுவனங்கள்
    c. நிதி இடைத்தரகர் நிறுவனங்கள்
    d. முதனிலை வணிகர்கள்
4. நிதி மேற்பார்வை மற்றும் நிதிக்கண்காணிப்பு நிறுவனங்கள்
    a. இலங்கை மத்திய வங்கி
    b. பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு
    c. காப்புறுதிச் சபை

### நிதிச் சந்தைகள்

குறுங்கால நீண்டகால நிதிச்சேவைகளை நிறைவேற்றிக் கொள்தவற்காக நிதிக்கருவிகளை கொள்வனவு செய்தலும்இ விற்பனை செய்தலும் நடைபெறுகின்ற சந்தை நிதிச் சந்தை எனப்படும். நிதிச் சந்தை இரு பிரதான பிரிவுகளைக் கொண்டது.

- பண சந்தை

- மூலதனச் சந்தை

## பணச் சந்தை

ஒரு வருடத்திலும் குறைந்த காலத்தில் முதிர்ச்சி அடைகின்ற திறைசேரியுண்டியல்கள்இ வணிகப்பத்திரங்கள்இ வைப்புச் சான்றிதழ்கள் போன்ற குறுங்கால நிதிக்கருவிகளின் வியாபாரம் நடைபெறுகின்ற சந்தை பணச்சந்தையாகும். பணச்சந்தையின் முக்கிய பணி பொருளாதாரத்தில் திரவத்தன்மை முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதாகும். பணச் சந்தையின் முக்கிய வழங்குனர்களாக அரசாங்கம், வங்கிகள் மற்றும் தனியார் கம்பனிகள் காணப்படுகின்ற வேளையில் பிரதான முதலீட்டாளர்களாக வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் ஓய்வூதிய மற்றும் சேமநிதிகள் காணப்படுகின்றன.

பணச்சந்தையின் கீழ் உள்ளடங்கும் உப சந்தைகளாக அமைபவை:

- வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை
- திறைசேரியுண்டியல்கள் சந்தை
- வணிகப் பத்திரச் சந்தை
- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை

அழைப்புக்கடன் சந்தை என்பது வணிக வங்கிகள் தமது நாளாந்த திரவத் தன்மையில் காணப்படும் சமமின்மையை சீர்படுத்திக் கொள்ளும் சந்தையாகும். இங்கு திரவ பற்றாக்குறையுள்ள வங்கிஇ திரவமிகையுள்ள வங்கியிடமிருந்துஇ மிகக் குறுங்காலக் கடனைப் பெற்றுக்கொள்ளும்.

வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை ஒரு ஓரிரவுச் சந்தையாக விளங்குவதுடன் வர்த்தக வங்கிகளுக்கிடையே கடன் வழங்கல் மற்றும் கடன்பாடுகளுக்கு வசதியளிப்பதன் மூலம் வர்த்தக வங்கிகள் அவற்றின் உடனடித்திரவதட தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முக்கியமாக உதவுகின்றது. இக்கொடுக்கல் வாங்கல்கள் அவற்றின் தன்மையில் மிகக் குறுகிய காலத் தன்மையினைக்

கொண்டனவாக இருப்பதுடன் சந்தையில் திரவத்தன்மையின் கேள்வி மற்றும் நிரம்பலைப் பிரதிபலிப்பதாகவுமுள்ளது. அழைப்புப் பணச் சந்தைக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் வங்கிகளுக்கிடையிலான அழைப்பு வீதம் என அழைக்கப்படுகின்றது. சராசரி நிறைவேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் என்பது கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியினால் நிறைவேற்றப்பட்ட சராசரி அழைப்பு பண வீதமாகும். இது ஒவ்வொரு வேலை நாளன்றும் இலங்கை மத்திய வங்கியினால் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

## திறைசேரி உண்டியல் சந்தை

திறைசேரி உண்டியல் சந்தை என்பது அரசாங்கம்இ ஒரு வருடத்துக்கும் குறைந்த காலத்தில் கடனைப் பெறுவதற்காக பயன்படுத்தும் நிதிக் கருவியான திறைசேரி உண்டியல் பரிமாற்றப்படும் சந்தையாகும். திறைசேரி உண்டியல் சந்தை உயர்ந்த திரவத்தன்மை கொண்ட சந்தைச் சாதனமாக இருப்பதுடன் இது நிதியியல் நிறுவனங்களுக்கான திரவத்தன்மை மற்றும் முதலீடுகளின் மாற்று மூலமொன்றாகவும் காணப்படுகின்றது.

மேலும் திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீத அசைவுகள் குறுங்கால கொடுகடன் சந்தைக்கான அடிப்படை அளவுக்குறியீட்டினை வழங்குகின்றன. எனவே திறைசேரியுண்டியல் சந்தையின் தொகை அளவிலும் வீதத்திலும் ஏற்படும் மாற்றங்கள் நிதியியல் நிறுவனங்களின் செலவு, இலாபத் தன்மை மற்றும் திரவத் தன்மை என்பவற்றைப் பாதிக்கின்றன. மத்திய வங்கி அதன் சிறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகையில் பிணையமாகப் பயன்படுத்தப்படும் முக்கிய பிணையங்களாகவும் திறைசேரி உண்டியல்கள் விளங்குகின்றன.

## வணிகப்பத்திரச் சந்தை

வணிகப்பத்திரச் சந்தை என்பது வர்த்தக நிறுனங்கள், குறுங்கால நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தும் வணிகப் பத்திரங்கள் பரிமாற்றப்படும் சந்தையாகும்.

வணிகப் பத்திரங்களென்பது தனியார் துறைக்கம்பனிகள் தமது சொந்தப் பயன்பாட்டிற்கு நிதிகளைத் திரட்டுவதற்காக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் இடையேற்பாட்டாளர்களின் மூலம் வழங்குகின்ற குறுங்கால பிணையமயப்படுத்தாத (பிணையிடப்படாத) படுகடன் பிணையங்களாகும். வர்த்தகப் பத்திரங்கள் பொதுவாக கொடுகடன் நம்பகத்தன்மை கொண்ட (உயர்தரமிடப்பட்டவை) நிறுவனங்களினால் பாரிய பெறுமதிகளைக் கொண்ட இனங்களில் வழங்கப்படுவதுடன் இவை கொடுப்பனவுக்கான மேலதிக வங்கி உத்தரவாதங்களையும் கொண்டிருக்கின்றன. வர்த்தகப் பத்திரங்கள் வழமையாக கழிவிடல் வீதங்களில் விற்பனை செய்யப்படுகின்ற போதும் சில வட்டியைக் கொண்டனவாகவும் இருக்கின்றன.

## வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என்பது வணிக வங்கிகளுக்கிடையே அந்நியச் செலாவணி கொள்வனவும் விற்பனையும் செய்யப்படும் சந்தையாகும். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இரண்டு முக்கிய தொழிற்பாடுகள் காணப்படுகின்றன.

- ஒரு நாட்டின் நாணயத்தினை மற்றொரு நாட்டின் நாணயத்திற்கு மாற்றுதல்.
- செலாவணி வீதத்தில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்களை பல்வேறுபட்ட பெறுமதிச் சாதனங்களினூடாகக் குறைப்பதற்கு உதவுதல்.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மேற்குறிப்பிட்ட பண்புகள் பின்வருவனவற்றிற்கு வசதியளிக்கின்றன.

- இறக்குமதிகளுக்கு நிதியிடுதல்
- ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுதல்
- ஏனைய வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

## மூலதனச் சந்தை

ஒரு வருடத்துக்கு மேலான முதிர்ச்சிக்காலத்தினையுடைய நிதிக்கருவிகள் மற்றும் கம்பனிகள் பங்குகள் பரிமாற்றப்படும் சந்தை மூலதனச் சந்தையாகும்.

மூலதனச் சந்தையின் நோக்கம் நீண்ட கால நிதிகளைத் திரட்டுவதற்கு வசதியளிப்பதாகும். மூலதனச் சந்தையின் முக்கிய வழங்குநர்களாக அரசாங்கம்இ வங்கிகள் மற்றும் தனியார் கம்பனிகள் விளங்குகின்ற வேளையில் முக்கிய முதலீட்டாளர்களாக ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்களும் காப்புறுதிக் கம்பனிகளும் காணப்படுகின்றன.

மூலதனச் சந்தையின் கீழ் உள்ளடங்கும் உப சந்தைகளாக அமைபவை

- திறைசேரி முறிகள் சந்தை
- கம்பனி முறிகள் சந்தை
- பங்குச் சந்தை

## திறைசேரி முறிகள் சந்தை

திறைசேரி முறிகள் சந்தை என்பது அரசாங்கம் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடனைப் பெற்றுகக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் திறைசேரிமுறிகள் பரிமாற்றப்படும் சந்தையாகும். இலங்கை அரசாங்கத்தின் முகவரொருவர் என்ற முறையில், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி முறிகளை வழங்குவதுடன் உரிய திகதியில் வட்டியைக் கொடுப்பனவு செய்து.

முதிர்ச்சியில் முதல் தொகையினைச் செலுத்துகின்றது. பாராளுமன்றத்தினால் ஆண்டுதோறும் ஒப்புதலளிக்கப்படும் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வருடாந்த கடன்பாட்டு இலக்கின் நியதிகளில், இலங்கை அரசாங்கம் திறைசேரி முறிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது.

## கம்பனி முறிகள் சந்தை

கம்பனி முறிகள் சந்தை என்பது தனியார் துறைக் கம்பனிகள் நடுத்தர மற்றும் நீண்டகால நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக கம்பனி முறிகளை பரிமாற்றம் செய்கின்ற சந்தையாகும்.

கம்பனி முறிகள் என்பது தனியார் துறைக் கம்பனிகளின் நடுத்தர மற்றும் நீண்ட காலப் பிணைகளாகும். வழங்குநர் முதிர்ச்சியில் வட்டியையும் முதல் தொகையையும் செலுத்துவதற்கு கடப்பாடுடையவராவார். குறித்துரைக்கப்பட்ட சொத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டாத கம்பனி முறிகள் தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படுகின்றன.

## பங்குச் சந்தை

பங்குச் சந்தை என்பது வரையறுக்கப்பட்ட கம்பனிகள்இ பொது பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தையாகும்.

பங்குரிமை மூலதனச் சந்தைத் தொழிற்பாடுகள், மற்றைய பெரும்பாலான சந்தைகளைப் போன்றே நாட்டின் அரசியல் மற்றும் சமாதான சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப உயர்ந்த உணர்திறனைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. மேலும், சந்தையின் செயலாற்றமானது சந்தையின் முக்கிய தொழிற்பாட்டாளர்களின் ஆற்றல் வாய்ந்த அடிப்படைகள் மற்றும் இலாபத்தன்மை என்பனவற்றுடன் மிக நெருக்கமாகத் தொடர்புபட்டிருக்கிறது. முதலீடுகள் மற்றும் கடன்வழங்கல் நடவடிக்கைகளினூடாக பங்குரிமை மூலதனச் சந்தையில் நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகை குறைவாக இருப்பதனால் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டில் பங்குரிமை மூலதனச் சந்தைத் தொழிற்பாடுகளின் தாக்கம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவுள்ளது.

பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை என்பவற்றின் பிரதான வேறுபாடுகள்:

| பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|
| ஒரு வருடத்துக்கு குறைந்த காலத்தில் முதிர்ச்சிடையும் குறுங்கால நிதிக் கருவிகள் பரிமாற்றப்படும் சந்தையாகும். | ஒரு வருடத்துக்கு மேலான காலத்தில் முதிர்வடையும் நடுத்தர மற்றும் நீண்டகால நிதிக்கருவிகள் பரிமாற்றப்படும் சந்தையாகும். |
| பணச்சந்தைக் கருவிகளாக திறைசேரி உண்டியல்கள், வணிகப் பத்திரங்கள், வைப்புச் சான்றிதழ்கள் காணப்படுகின்றன. | மூலதனச் சந்தை கருவிகளாக திறைசேரி முறிகள், தொகுதிக் கடன்கள், பங்குகள் காணப்படுகின்றன. |
| பணச்சந்தையின் உப சந்தைகளாக அழைப்புக் கடன் சந்தை, திறைசேரி உண்டியல்கள் சந்தை, வணிகப்பத்திரச் சந்தை, அண்ணிய செலாவணிச் சந்தை என்பன காணப்படுகின்றன. | மூலதனச் சந்தையின் உப சந்தைகளாக திறைசேரி முறிச் சந்தை, கம்பனி முறிச்சந்தை, பங்குச் சந்தை என்பன காணப்படுகின்றன. |

## நிதிக்கருவிகள்

இலங்கை நிதிச் சந்தையினுள் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் நிதிக்கருவிகளை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

1. அரசாங்கம் வெளியிடும் கடன் கருவிகள்
    a. திறைசேரியுண்டியல்கள்
    b. திறைசேரி முறி
    c. அரச கடன் பத்திரங்கள்
2. கம்பனிகள் வெளியிடும் கடன் கருவிகள்
    a. வர்த்தகப் பத்திரங்கள்
    b. கடன் முறிகள்
3. வணிக வங்கிகள் பயன்படுத்தும் உபகரணங்கள்

a. வைப்புச் சான்றிதழ்
b. சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட முறிகள்
c. குத்தகை
d. அழைப்புக்கடன்
e. வியாபாரப் பங்குகள்

## நிதி உட்கட்டமைப்பு வசதிகள்

நிதி முறைமையின் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டினையும் வாழ்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு துணையாக அமைகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளே நிதி உட்கட்டமைப்பு வசதிகள் எனப்படும். இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நிதி உட்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:

### மெய் நேர மொத்த தீர்ப்பனவு முறை (RTGS)

மெய்நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது இலத்திரனியல் நிதியத் தீர்ப்பனவு முறைமையொன்றாக இருப்பதுடன் இது, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்தி அதேநேர அடிப்படையில் ஒவ்வொரு கொடுப்பனவு அறிவுறுத்தல்களையும் தனிப்பட்ட முறையிலும் மீட்புச் செய்ய முடியாத விதத்திலும் செயன்முறைப்படுத்தி தீர்ப்பனவு செய்து வருகின்றது.

மெய்நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவு செய்யப்பட்டுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி இலங்கையில் காசல்லா கொடுப்பனவுகளில் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு வகைகூறுகிறது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களில் பெரும்பாலானவை வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள், அரச பிணையங்கள் சந்தை, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ரூபாப் பிரிவின் கொடுக்கல்வாங்கல்கள், வாடிக்கையாளரின் அவசரக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் தீர்ப்பனவு முறைமையின் கீழான தேறிய கடப்பாடுகள் என்பனவற்றுடன் தொடர்புபட்டவைகளாகக் காணப்படுகின்றன.

தீர்ப்பனவு இடர்நேர்வுகளைத் தணிக்கும் வழிமுறையொன்றாக, இலங்கை மத்திய வங்கி, லங்கா செகுயர் முறைமையிலுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் பிணைகளுக்கெதிராக கட்டணங்களின்றி பங்கேற்கின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குகின்றது.

## லங்கா செக்யுர் (Lanka Secure) – பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை

லங்கா செக்யுர் முறைமையானது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினையும் பத்திரங்களற்ற மத்திய வைப்பக முறைமையினையும் உள்ளடக்குகிறது. லங்கா செக்யுர், அரச பிணையங்களையும் மத்திய வங்கிப் பிணையங்களையும் இலத்திரனியல் அல்லது படிவங்களற்ற வடிவத்தில் வழங்குவதற்கும் அத்தகைய பத்திரங்களற்ற பிணையங்களை வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கும் வசதிகளை வழங்குகின்றது. இதன்படி, பிணையங்களை விற்பனை செய்யும் பங்கேற்பாளர் லங்கா செகுயரிலுள்ள அவரது பிணையங்கள் கணக்கில் போதுமான தகுதியுடைய பிணையங்களையும் கொடுக்கல் வாங்கல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு வாங்கும் பங்கேற்பாளர் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அவரின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியத்தினையும் கொண்டிருக்குமிடத்து கொடுக்கல்வாங்கல்கள் முறைமையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. இம்முறைமையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட அனைத்துப் பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களும் மாற்றமுடியாதவையாகும்.

பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை ஒரு தலைப்பு பதிவகமாகவும் அதேபோன்று அரச பிணையங்களுக்கான கட்டுக்காப்பாளராகவும் விளங்குகின்றது. பிணையங்களின் சொத்துடமையானது பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமையிலுள்ள நன்மைபெறும் மட்டத்தில் பதிவுசெய்யப்படுகிறது. பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமையிலுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் உடமையாளர்கள் இணையத்தளத்தினை அடிப்படையாகக்

கொண்ட வசதியான லங்கா செகுயர் வலையமைப்பினூடாக எந்தவொரு நேரத்திலும் தமது முதலீடுகள் தொடர்பான நாளது வரையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு

காசோலை, வங்கி வரைவுகள் மற்றும் அதே நேரமல்லாத நிதிய மாற்றல்கள் போன்ற சில்லறைக் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவிற்கு இலங்கை மத்திய வங்கி வசதிகளை வழங்குகின்றது. 2002 இல் இலங்கை மத்திய வங்கி காசோலை தீர்ப்பனவு வசதிகளை வழங்குவதற்கு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு அதிகாரமளித்தது.

2006 மேயில் (May), லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையை அறிமுகப்படுத்தியது. இது காசோலை பிம்பப்படுத்தலை இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிப்பதற்கும் காசோலைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் வசதியளிக்கின்றது. காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையானது நாடு முழுவதும் என்ற ஒரே சீரான காசோலை தீர்ப்பனவு நேரத்தினை அறிமுகப்படுத்தியமையானது ரி + 1 (ரி என்பது லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் தீர்ப்பனவிற்காக காசோலையைப் பெற்ற நாளினையும் 1 என்பது அடுத்துவரும் வேலைநாளினையும் குறிக்கிறது) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் காசோலையின் பெறுகைகளை அவர்களது வாடிக்கையாளர்களின் கணக்குகளில் அடுத்துவரும் வேலை நாளன்று வரவு வைப்பதனை இயலச்செய்தது. இம்முறைமையின் கீழ் மறுக்கப்பட்ட திருப்பப்பட்ட காசோலைகளுக்குப் பதிலாக காசோலை திருப்பல் பற்றிய அறிவித்தல் வழங்கப்படுகின்றன.

காசோலை பிம்பப்படுத்தல் முறைமையின் கீழ் தேறிய தீர்ப்பனவு மீதிகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் ஒவ்வொரு வேலை நாளிலும் இரண்டு தடவைகள் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமைக்கு செய்யப்படுகின்ற தொழில்நுட்ப மேம்பாடுகள் ரி + 1 தீர்ப்பனவிற்காக

ஏற்றுக்கொள்ளப்படும் காசோலைகளுக்கான வெட்டு நேரத்தினை லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் விரிவாக்குவதற்கும் உள்முகக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் வெட்டு நேரத்தினை முன்கொண்டு செல்வதற்கும் இயலுமைப்படுத்தியதன் மூலம் காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் வினைத்திறன் உயர்வடைந்தது.

## ஐக்கிய அமெரிக்க டொலர் காசோலை/ வரைவுத் தீர்ப்பனவு முறைமை

லங்கா கிளியர் பிரைவெற் லிமிடெட், இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடனான அவர்களது "நொஸ்ர" கணக்குகள் மீதான காசோலைகள்/வரைவுகள் மற்றும் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளால் வாடிக்கையாளர் சார்பில் வழங்கப் பல காசோலைகள்/ வரைவுகள் ஆகிய இரண்டையும் தீர்ப்பனவு செய்வதற்கான ஐ.அ.டொலர் காசோலை/ வரைவுத் தீர்ப்பனவு முறைமையினையும் தொழிற்படுத்துகின்றது.

மரபுசார்ந்த ஐ.அ.டொலர்/ வரைவுத் தீர்ப்பனவு பொறிமுறையின் கீழ், வாடிக்கையாளர்களுக்கு வரவு வைப்பதற்கு மூன்று வாரங்களுக்கும் மேல் எடுத்தது. நீண்ட தீர்ப்பனவுச் செயன்முறையினைத் துரிதப்படுத்தும் பொருட்டு 2002 இல் லங்கா கிளியர் பிரைவெற் லிமிடெட், ஐ.அ.டொலர் வரைவுத் தீர்ப்பனவு முறைமையினைத் தொடங்கியது. இதன் விளைவாக, ஐ.அ.டொலர் வரைவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு எடுத்துக் கொண்ட நேரம் மூன்று வாரங்களிலிருந்து மூன்று நாட்களாகக் ரி + 3 ஆக குறைக்கப்பட்டது.

லங்கா கிளியர் பிரைவெற் லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்தும் நோக்குடன் 2019 யூலையில் ஐ.அ.டொலர் வரைவு இணையம் ஊடான பிம்பம் மாற்றல் முறைமையினை அது தொடங்கியது. இவ் இணையம் ஊடான பிம்பம் மாற்றல் முறைமையானது வெப்தளம் அடிப்படையிலமைந்த இணையம் ஊடான தீர்ப்பனவு முறைமையொன்றாகத் தொழிற்படுவதுடன் தீர்ப்பனவிற்காக ஐ.அ.டொலர் காசோலைகள்/ வரைவுகள் பௌதீக ரீதியாகச் சமர்ப்பிக்க வேண்டிய தேவையினை இல்லாதொழிக்கின்றது.

இணையம் ஊடான பிம்பம் மாற்றல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் ஐ.அ.டொலர் காசோலைகளை/ வரைவுகள் தீர்ப்பனவு செய்வதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம், ரி + 3 இலிருந்து ரி + 1 ஆக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் அதேநேர கணனி வழி கொடுப்பனவு முறைமை (SLIPS)

இலங்கை வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் அதேநேர கணனி வழி கொடுப்பனவு முறைமை என்பது வங்கிகளுக்கிடையிலான கணனி வழி அதேநேர ஐ.அ.டொலர் நிதிய மாற்றல் முறைமையொன்றாகும். இது லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினூடாக டிஜிட்டல் முறைமையிலான கையொப்ப முறையில் வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் கொடுப்பனவுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் ஆரம்பிக்கின்ற வங்கியிலிருந்து பெறுகின்ற வங்கி வரையிலான கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துகின்றது. மேலும், லங்கா கிளியர், தீர்ப்பனவில் பங்கேற்கும் வங்கிகளின் கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கு தீர்ப்பனவுக் கோவையினை உருவாக்குகின்றது.

இலங்கை வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் அதேநேர கணனி வழி கொடுப்பனவு முறைமை இலங்கையிலுள்ள ஏழு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் பங்கேற்புடன் 2015 யூலை 22 இல் ஆரம்பமானது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான ஐ.அ.டொலர் கொடுப்பனவு முறைமை வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் கொடுக்கல்வாங்கலொன்றுக்கான குறைந்த செலவை வழங்குகின்றதுடன் கொடுக்கல்வாங்கல்களுக்காக எடுக்கும் நேரத்தினையும் சரியான நேரத்தில் இடம்பெறுவதனையும் மேம்படுத்துவதுடன் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவின் வினைத்திறனையும் உயர்த்தியிருக்கிறது.

## பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியானது தேசிய கொடுப்பனவுகள் ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படுகின்றது. இது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களிடையேயான கணனி வழி அதேநேர நிதிய மாற்றல்கள்/ கொடுப்பனவுகளுக்கு உதவியளிப்பதன் மூலம் வங்கி வாடிக்கையாளர்கள் நாளொன்றில் எந்தவொரு நேரத்திலும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதனையும் தன்னியக்க கூற்றுப் பொறி, செல்லிடத் தொலைபேசி, இணையத்தளம் போன்றவற்றினூடாக வங்கியல்லா நேரங்களிலும் கூட கொடுப்பனவுகளை மேற்கொள்வதனையும் இயலச்செய்கிறது.

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி கொடுப்பனவுகளுக்கான அதேநேர வங்கி மாற்றல்களை ஒரு விநாடிக்குள் மேற்கொள்ளவும் வாடிக்கையாளர்கள் 24x7 மற்றும் ஆண்டின் 365 நாட்களும் இலத்திரனியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் உதவியளிக்கின்றது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக் கொடுப்பனவுகள் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு அதேநேர அடிப்படையில் வரவு வைக்கப்பட்ட போதும், வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவுகள் ஒவ்வொரு வியாபார நாளும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் இரண்டு சுற்றுக்களில் இடம்பெறுகின்றன.

## நிதி மேற்பார்வை நிறுவனங்கள்

நிதியமைப்பொன்றின் நிலைபேறான தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக சட்டங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசினால் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களே நிதி மேற்பார்வை நிறுவனங்கள் எனப்படும். இலங்கையில் காணப்படுகின்ற நிதி மேற்பார்வை நிறுவனங்களுக்கு உதாரணங்களாவன

1. இலங்கை மத்திய வங்கி
2. பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு
3. இலங்கை காப்பறுதிச்சபை

## இலங்கை மத்திய வங்கி (Central Bank of Sri Lanka)

இலங்கை பொருளாதாரத்தில் நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்குதல் மூலமாக பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை அடைந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட சுயாதீன நிறுவனம் இலங்கை மத்திய வங்கியாகும். இலங்கை மத்திய வங்கி 1949 ஆண்டு 58 ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்துக்கமைய 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியானது, பின்வரும் இரு குறிக்கோள்களை அடையும் வகையில் செயற்படுகிறது.

- பொருளாதார மற்றும் விலை உறுதி பேணல்.
- நிதியியல் முறைமையின் உறுதி பேணல்.

இவ்விரு குறிக்கோளுக்கூடாகவும் இலங்கையின் உற்பத்தி வளங்களை அபிவிருத்தி செய்து, ஊக்கவித்து அதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதே மத்திய வங்கியின் பரந்த அடிப்படையிலான நோக்கமாகும்.

### பொருளாதார மற்றும் விலை உறுதி பேணல்

பொதுவிலை மட்டம் மாறாமல் அல்லது மிகக் குறைந்தளவில் மாறுகின்ற தன்மையே விலை உறுதிபாடாகும். அதாவது பணவீக்க வீதத்தினை பூச்சியமாக அல்லது அதற்கு கிட்டியதாக பேணும் நிலையே விலை உறுதிப்பாடாகும். விலை உறுதிநிலையை பேண மத்திய வங்கியானது நாணய கொள்கையினை கையாள்கின்றது. இதன் பொருட்டு பண நிரம்பலையும் வட்டி வீதத்தினையும் கருவிகளாக பயன்படுத்துகின்றது.

### விலை உறுதிப்பாட்டின் முக்கியத்துவம்

1) பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்
2) வினைத்திறனுடைய வகையில் வளங்களை பங்கீடு செய்தல்

3) உற்பத்தியாளரதும் நுகர்வோரினதும் முதலீட்டாளரதும் ஆபத்துக்களைக் குறைத்தல்
4) பொருளாதாரத் திட்டத்தினை தயாரித்தல்

விலை உறுதிப்பாடு அல்லது குறைந்தளவு பணவீக்கம் நிலவும் போது பொருளாதாரங்கள் நல்ல நிலையில் இயங்கி, அதிகளவு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் நிலையான பொருளாதளர அபிவிருத்தியையும் ஏற்படுத்தும்.

## நிதியியல் முறைமையின் உறுதி பேணல்

பொருளாதாரம், நிதியியல், அரசியல் மற்றும் வேறு எத்துறையிலும் ஏற்படும் உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த அதிர்வுகளில் இருந்து நிதியியல் முறைமையை பேணிப் பாதுகாப்பதே நிதியியல் முறைமையின் உறுதிப்பாடாகும். நாட்டு மக்களுக்கு நிதியியல் முறைமை மீதான நம்பகத்தன்மையை பேணிப்பாதுகாப்பதே இந் நோக்கத்தின் முக்கிய எதிர்பார்ப்பாகும்.

நிதியியல் முறைமையின் உறுதியினை ஏற்படுத்த மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாக அமைபவை.

1. வங்கித்துறையின் திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்தல்.
2. நிதி நிருவனங்களைக் கண்காணித்தல் மற்றும் நிர்வாக நடைமுறைகளை ஏற்படுத்தல்.

**விலை உறுதி** – குறைந்த பணவீக்கத்தினை பேணுதல்

**நிதியியல் முறைமையின் உறுதி பேணல்** - உள்ளக மற்றும் வெளியக அதிர்ச்சிகளுக்கு முகம் கொடுக்கவல்ல உறுதியான நிதி நிறுவன கட்டமைப்பொன்றை பேணுதல்.

## பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது பங்குப் பரிவர்த்தனை, பங்குத்தரகர்/ வணிகர்கள், கூறுநம்பிக்கை கம்பனிகள், பங்குச் சந்தை கடன் வசதி வழங்குவோர் கொடுகடன் தரமிடல் முகவர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், பங்குரிமைமூலதன மற்றும் தனியார் படுகடன் பிணையங்களின் தீர்வகங்கள் என்பனவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாகும்

### இலங்கைக் காப்புறுதிச் சபை

இலங்கைக் காப்புறுதிச் சபை காப்புறுதிக் கைத்தொழிலை அதாவது காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் தரகர்களை ஒழுங்குமுறைப்படுத்துகிறது.

இவ்வொழுங்கு முறைப்படுத்துநர்கள் ஒவ்வொருவரினதும் பணிப்பாளர்கள் சபையில் நிதியியல் முறைமை உறுப்பாட்டிற்கு பொறுப்பாக இருக்கும் துணை ஆளுநர் இலங்கை மத்திய வங்கியை பிரசன்னப்படுத்துகின்றார்.

### *உசாத்துணைகள்*


*Central Bank Annual Report (2019). Financial System. Retrieved from https://www.cbsl.gov.lk/ta*

*https://www.govdoc.lk/grade-13-school-syllabus-and-teachers-guide-tamil-medium*

*Parameshwaran, V.,2008. Economics, KSK Publocation, Colombo.*

*Rajeshwaran, N., 2021. Capital and Money Market, Kumaran Book House, Chennai – 600 026*

## இணைப்பு 01: பொருளியலாளர்

**அபிஜித் விநாயக் பானர்ஜி (Abhijit Vinayak Banerjee)**

அபிஜித் விநாயக் பானர்ஜி 21 பிப்ரவரி 1961 இல் பிறந்தார். இவர் இந்தியாவில் பிறந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஆவார்.



2015 இல், பானர்ஜி தனது இணை ஆராய்ச்சியாளரான Massachusetts Institute of Technology (MIT) பேராசிரியரான எஸ்தர் டு∴ப்லோவை மணந்தார். பானர்ஜி 1999 இல் MIT யில் பொருளாதாரத்தில் டு∴ப்லோவின் PHDயின் கூட்டு மேற்பார்வையாளராக இருந்தார். டு∴ப்லோ MIT யில் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சிப் பொருளாதாரப் பேராசிரியராகவும் உள்ளார். இவர் தற்போது Massachusetts Institute of Technology இல் பொருளாதாரப் பேராசிரியராக உள்ளார். பானர்ஜி 2019ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் நினைவு பரிசை எஸ்தர் டு∴ப்லோ மற்றும் மைக்கேல் க்ரீமர் ஆகியோருடன் உலகளாவிய வறுமையை ஒழிப்பதற்கான சோதனை அணுகுமுறைக்காக பகிர்ந்து கொண்டார். அவரும் எஸ்தர் டு∴ப்லோவும் இணைந்து நோபல் பரிசை வென்ற ஆறாவது திருமணமான தம்பதிகள் ஆவார். பானெர்ஜி அப்துல் லத்தீ∴ப் ஜமீல் வறுமை நடவடிக்கை ஆய்வகத்தின் இணை நிறுவனர் ஆவார். இவர் வறுமை நடவடிக்கைக்கான கண்டுபிடிப்புகளின் ஆராய்ச்சி இணைப்பாளராகவும், நிதி அமைப்புகள் மற்றும் வறுமைக்கான கூட்டமைப்பின் உறுப்பினராகவும் உள்ளார்.

பானர்ஜி, பொருளாதார ஆய்வின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சிக்கான பணியகத்தின் தலைவராகவும், தேசிய பொருளாதார ஆராய்ச்சி பணியகத்தின் ஆராய்ச்சி கூட்டாளியாகவும், பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி மையத்தில் ஒரு ஆராய்ச்சியாளராகவும்

இருந்தார். இவர் ஏழை பொருளாதாரத்தின் இணை ஆசிரியர் ஆவார். இந்தியாவில் வரவிருக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகமான பிளாக்கர் பல்கலைக்கழகத்தின் கல்வி ஆலோசனைக் குழுவிலும் பணியாற்றுகிறார். அவரது புதிய புத்தகம், எஸ்தர் டு∴ப்லோவுடன் இணைந்து எழுதிய, ‘‘குட் எகனாமிக்ஸ் ∴பார் ஹார்ட் டைம்ஸ (Good Economics for Hard Times)’’, இது அக்டோபர் 2019 இல் இந்தியாவில் ஜக்கர்நாட் புக்ஸ் மூலம் வெளியிடப்பட்டது.

2013 ஆம் ஆண்டில், ஐ.நா பொதுச்செயலாளர் பான் கி-மூன் அவர்களால் 2015 க்குப் பிறகு மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை மேம்படுத்தும் நிபுணர் குழுவிற்கு நியமிக்கப்பட்டார். 2014 இல், உலகப் பொருளாதாரத்திற்கான கீல் நிறுவனத்திடமிருந்து (Kiel Institute for the World Economy) பெர்ன்ஹார்ட்-ஹார்ம் பரிசைப்ஸ (Bernhard-Harms-Prize) பெற்றார்.

அபிஜித் பானர்ஜிக்கு 2019 ஆம் ஆண்டில் பொருளாதார அறிவியலுக்கான நோபல் நினைவு பரிசு வழங்கப்பட்டது, மேலும் அவரது இரண்டு இணை ஆராய்ச்சியாளர்களான எஸ்தர் டு∴ப்லோ மற்றும் மைக்கேல் க்ரீமர் ஆகியோருடன் உலகளாவிய வறுமையை ஒழிப்பதற்கான சோதனை அணுகுமுறைக்காக வழங்கப்பட்டது. இவர்களின் சோதனை ஆராய்ச்சி முறைகள் இப்போது முற்றிலும் வளர்ச்சி பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன.” ஜனவரி 2020 இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தால் இவருக்கு டாக்டர் ஆ∴ப் லெட்டர்ஸ் வழங்கப்பட்டது.

நோபல் பரிசு அவர்கள் தேர்ந்தெடுத்த துறையான வளர்ச்சிப் பொருளாதாரம் மற்றும் ரேண்டமைஸ் கன்ட்ரோல்டு ட்ரையல்களின் பயன்பாட்டிற்கான முக்கிய அங்கீகாரமாகும். இது இந்தியாவில் கலவையான உணர்ச்சிகளைத் தூண்டியது. அங்கு அவரது வெற்றி தேசியவாத உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது, அதே நேரத்தில் அணுகுமுறை மற்றும் ஏழைகளுக்கு ஆதரவான கவனம் ஆகியவை இந்தியாவின் தற்போதைய அரசாங்கத்தின் சித்தாந்தம் மற்றும் பரந்த வளர்ச்சி உரையாடலின் மறுப்பாகக் காணப்பட்டன.

## இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள்

### அட்டவணை 01: இலங்கையின் சொத்து உரிமைகள் சுட்டி

| ஆண்டு | சொத்து உரிமைகள் சுட்டி (0-100) |
|---|---|
| 2013 | 40 |
| 2014 | 40 |
| 2015 | 35 |
| 2016 | 40 |
| 2017 | 48 |
| 2018 | 47 |
| 2019 | 45 |
| 2020 | 48 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 02: இலங்கையின் ஊழல் விடுதலை சுட்டி

| ஆண்டு | ஊழல் விடுதலை சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 33 |
| 2015 | 37 |
| 2016 | 38 |
| 2017 | 30 |
| 2018 | 31 |
| 2019 | 29 |
| 2020 | 35 |
| 2021 | 40 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 03: இலங்கையின் நாணய சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | நாணய சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 85 |
| 2015 | 85 |
| 2016 | 85 |
| 2017 | 85 |
| 2018 | 85 |
| 2019 | 85 |
| 2020 | 85 |
| 2021 | 85 |

***Source: (The World Bank and The Global Economy Data, 2021)***



அட்டவணை 04: இலங்கையின் வணிக சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | வணிக சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 74 |
| 2015 | 73 |
| 2016 | 70 |
| 2017 | 73 |
| 2018 | 76 |
| 2019 | 75 |
| 2020 | 77 |
| 2021 | 75 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 05: இலங்கையின் தொழிலாளர் சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | தொழிலாளர் சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 59 |
| 2015 | 59 |
| 2016 | 57 |
| 2017 | 58 |
| 2018 | 60 |
| 2019 | 59 |
| 2020 | 59 |
| 2021 | 59 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 06: இலங்கையின் பண சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | பண சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 68 |
| 2015 | 68 |
| 2016 | 71.5 |
| 2017 | 76 |
| 2018 | 74 |
| 2019 | 70.1 |
| 2020 | 71.1 |
| 2021 | 71.6 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 07: இலங்கையின் வர்த்தக சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | வர்த்தக சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 74 |
| 2015 | 72 |
| 2016 | 72 |
| 2017 | 75 |
| 2018 | 75 |
| 2019 | 76 |
| 2020 | 68 |
| 2021 | 47 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 08: இலங்கையின் முதலீட்டு சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | முதலீட்டு சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 40 |
| 2015 | 30 |
| 2016 | 35 |
| 2017 | 35 |
| 2018 | 40 |
| 2019 | 40 |
| 2020 | 40 |
| 2021 | 40 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 09: இலங்கையின் நிதிநிலைமை சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | நிதிநிலைமை சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 40 |
| 2015 | 40 |
| 2016 | 40 |
| 2017 | 40 |
| 2018 | 40 |
| 2019 | 40 |
| 2020 | 40 |
| 2021 | 40 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



அட்டவணை 10: இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார சுதந்திரச் சுட்டி

| ஆண்டு | ஒட்டுமொத்த பொருளாதார சுதந்திரச் சுட்டி (0-100) |
|---|---|
| 2014 | 60 |
| 2015 | 59 |
| 2016 | 60 |
| 2017 | 57 |
| 2018 | 58 |
| 2019 | 56 |
| 2020 | 57 |
| 2021 | 56 |

*Source: (The World Bank and The Global Economy Data, 2021)*



பொருளியல் துறையின் ஆண்டுச் சஞ்சிகை கூர்மையின்
தொடர்ச்சியான வெளியீட்டுக்கு உங்கள் கருத்துக்களையும்,
விமர்சனங்களையும் தொடந்து வழங்குமாறும்
கேட்டுக்கொள்கின்றேன்………




ஆசிரியர்
கூர்மை
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

தொலைபேசி இலக்கம்: 065 2240735
மின்னஞ்சல்: editorcoormai@gmail.com